ஆன்மீகத்தில் வழிவழியாய் வாழும் வழி

பூக்கள் தரும் புனிதங்கள்



ஸ்ரீ-ல-ஸ்ரீ லோபாமாதா அகஸ்தியர் ஆஸ்ரமம்
காஞ்சி சாலை (கிரிவலப் பாதை), ஆடையூர்,
திருஅண்ணாமலை - 606 604.

உ

ஓம் ஸ்ரீ வல்லபகணபதி துணை

ஓம் ஸ்ரீ அங்காள பரமேஸ்வரி துணை


ஓம் ஸ்ரீ சுசரித சரஸ்வதி துணை

NAMASIVAYA

SIVAYANAMA

SIVAYASIVA







SIVASIVA

பூக்கள் தரும் புனிதங்கள்

திருக்கயிலாயப் பொதிய முனிப்பரம்பரை

1001-வது குரு மகா சந்நிதானம்

சக்தி ஸ்ரீ அங்காள பரமேஸ்வரி அடிமை

ஸ்ரீ-ல-ஸ்ரீ R.V. வெங்கடராமன், B.A.,

M.A.I.M., M.S.H.C., P.I.M., Dip. P.F., Dip. R.C.S., A.C.C.A. (London)

அவர்கள் திருவாய் மலர்ந்து அருளியது

(9.10.86 முதல் 11.10.86 வரை புரசைவாக்கம்

அருள்மிகு ஸ்ரீ கங்காதீஸ்வரர் ஆலயத்தில்

நடத்திய ஆன்மீகச் சொற்பொழிவின் சாராம்சம்)

பூக்கள் தரும் புனிதங்கள்

ஆசிரியர் (Editor) : ஸ்ரீ R.V. வெங்கடராம சுவாமிகள்

இணை ஆசிரியர் (Associate Editor) : ஸ்ரீமதி கலாவதி வெங்கடராமன்

வெளியீட்டாளர் (Publisher) : ஜெய் ஸ்ரீ அகஸ்தியா
பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்
20, டயமண்ட் ஜூபிளி கட்டிடம்,
மயிலம், திருச்சி-8.

அச்சாளர் (Printers) : பைன் ஆப்செட் பிரிண்ட்ஸ்
15, ஏழுகிணறு தெரு,
சென்னை - 600 001.


விலை : **Rs.15/-**

வெளியீடு : அக்டோபர் '97

புத்தகம் கிடைக்குமிடம் :

ஜெய் ஸ்ரீ அகஸ்தியா பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்
20, டயமண்ட் ஜூபிளி கட்டிடம், மயிலம், திருச்சி-8.

ஸ்ரீ-ல-ஸ்ரீ லோபாமாதா அகஸ்தியர் ஆஸ்ரமம்
காஞ்சி சாலை (கிரிவலப் பாதை), ஆடையூர், திருஅண்ணாமலை - 606 604.



குருமகா சந்நிதானம்

ஸ்ரீ-ல-ஸ்ரீ **R.V. வெங்கடராமன்** சுவாமிகளின்

தாயார் **ஸ்ரீமதி V. முத்துமீனாக்ஷி** அவர்கள்
மனமுவந்து அளித்த ஆசியுரையின் தமிழாக்கம்.

ஸ்ரீ ராமஜெயம்

என் மகன் வெங்கடராமன் பேசிய சொற்பொழிவுகளில் 150க்கு குறையாமல் கேட்டுள்ளேன், அவன் பிறந்தபோது நான் பெற்ற இன்பத்தைவிட அவன் ராமன், கண்ணன், நாராயணன், சக்தி, சிவன், முருகன், குரு இவர்களைப் பற்றிப் பேசும்போது மிக அதிக இன்பத்தைப் பெற்றுவிட்டேன். அனைவரும் சொற்பொழிவுகளின் சாரம்சங்களான அனைத்துப் புத்தகங்களையும் படித்து வெங்கடராமனை ஆசீர்வதிக்கும்படிக் வேண்டி, நான் அவன் தொண்டு உலகெங்கும் பரவ ஸ்ரீ ராமச்சந்திர மூர்த்தி திருவருளால் மனமார ஆசீர்வதிக்கிறேன்.

V. முத்து மீனாக்ஷி

சமர்ப்பணம்

✤✤✤

பூமியில் பிறந்து விட்டால் குடும்பத்திற்கு ஒருவரை இறைப்பணிக்காக அர்ப்பணிப்பது பழங்கால வழக்கம். அப்பழங்கால வழக்கத்தைத் தற்காலத்தில் காண்பது அரிது. வைத்தியர் குடும்பத்தில் பிறந்து விட்டால் எல்லோரும் வைத்தியராக ஆகவேண்டும் என்று ஆசைப்படுகிறார்கள். சட்டத்துறை நிபுணராக பிறந்து விட்டால் குடும்பமே சட்ட வல்லுனராக வேண்டும் என்று தாய் தந்தையர் விரும்புகின்றனர். பொறியியல் வல்லுனராக இருந்துவிட்டால் குடும்பமே அத்துறையில் ஈடுபட வேண்டும் என்று ஆசை கொள்கிறார்கள். ஆனால் பெரும்பாலோர் இறைப்பணிக்கு முன் வருவதில்லை. இதற்கு காரணம் தெய்வத்தின் மீது பூரண நம்பிக்கை வராததே ஆகும். மேலும் உத்தமகுரு அருள் பெறாதது காரணமாகும்.

இந்நிலையில் சிறுவயதிலிருந்தே, "குரு அருளைப் பெற்று குருதொண்டினைச் செய்து சிவன் திருவருள் ஒன்றே என்றும் நிலையானது" என்பதை உள்ளத்திலும் உதிரத்திலும் உயிரிலும் குரு அருளால் உணர்ந்தவர், எம் குருநாதர் பெருமான். கடுமையான சித்தர்-குரு குலவாசத்தின் மூலம் தான் உணர்ந்த கருத்துகளை நினைவுபடுத்தும் சொற்பொழிவுகளில் வயதான காலத்திலும் தானே நேராக வந்து அமர்ந்து ஆசி கூறிய எம் குருநாதரின் அன்னையான —— இன்றும் என்றும் கிடைப்பதற்கரிய ஸ்ரீ பாஸ்கர கற்பக விருட்ச ஸ்ரீ ராமச்சந்திர யோகினி லோகத்தில் என்றும் அழியா நிலையிலிருக்கும் என் அன்னை ஸ்ரீ ராமசந்திர யோகினி ஸ்ரீ-ல-ஸ்ரீ முத்து மீனாட்சி மகாதேவியின் திருப்பாதங்களில் காணிக்கையாக்கி எம்மை ஒரு கருவியாகக் கொண்டு என்றும் இறைத்தொண்டு குறைவில்லாமல் பூரணமாய் நிறைவேற வேண்டி பிதுர் லோக குரு அருளால் சிரம் தாழ்த்தி வணங்கும்,

ஸ்ரீ அங்காள பரமேஸ்வரி அடிமைகள்

என்ன! எதற்கு!! எப்படி!!! எங்கே!!!!

❀❀❀

உ
ஓம் குருவே சரணம்

பூக்கள் தரும் புனிதங்கள்

பூக்கள் என்றவுடன் அவற்றின் மணமும், மென்மையும் தான் நமது நினைவுக்கு வருகின்றன. இவற்றுடன் பூக்கள் புனிதங்களையும் தமக்குள்ளே வைத்துள்ளன. பல மந்திரங்களாலும், மாயங்களாலும், தந்திரங்களாலும் சாதிக்க முடியாதவற்றைப் பூக்களைக் கொண்டு சாதிக்கலாம். பல கோடி சித்தர்கள் தமது வாழ்நாள் முழுவதையும் செலவழித்து கண்டுபிடித்து எழுதி வைத்துள்ளார்கள். நடைமுறைப்படுத்தி வெற்றியும் கண்டுள்ளார்கள். நாம் அவற்றை அறிந்து முறையாகப் பயன்படுத்தி இறைவன் அருளைப்பெற வேண்டும் என்பதே இப்புத்தகத்தின் நோக்கம்.

சித்து -- சித்தர் விளக்கம்

சித்து என்பது அனைவரிடமும் உள்ளதொரு சக்தியே. இருப்பினும் சித்தர்கள் எனப்படுபவர்கள் எதையும் சாதிக்கிறார்கள். நம்மால் முடியவில்லையே, ஏன்? சித்தர்கள் தங்கள் சித்தத்தை இறைவன்பால் செலுத்தி ஒருமுகப்பட்டு சக்திபெறுகிறார்கள். ஆனால் நாம் என்ன செய்கிறோம்? நமக்குப் பிடிக்காதவர்களை அப்புறப்படுத்தியும் - நமது வீண் ஆசைகளை வளர்த்து அடையமுற்பட்டும், பொறாமை போன்ற குணங்களை வளர்த்து அதற்காக நம்முடைய சித்தத்தையும், சிந்தனையையும் செலவழிப்பதால் நம்மால் எதையும் சாதிக்க முடியவில்லை. **சுயநலமின்றி ஒருவர் சித்தத்தை இறைவனிடம் செலுத்தினால், அவர் சித்தர் ஆகிறார்.** அவர்கள் இயற்பெயர் கூடத்தெரியாது. ஆனால் காரணப்பெயர் நிலைத்து நிற்கும். உதாரணமாக இடியாப்ப சித்தர், பூண்டி சாமி, தொள்ளைக்காது சித்தர், தடி தூக்கி சாமி, சுரைக்காய் சித்தர், தொமுப்பேட்டு சித்தர், பன்றிமலை சித்தர், கழுவெளி சித்தர் இப்படிப்பல நாமங்கள் - இவை காரணப்பெயர்கள்.

இறைவனை அடைய பல மார்க்கங்கள் -- பக்தி, ஞான, யோக மார்க்கங்கள் எனப்பல உள்ளன. அவற்றுள் தவங்கள் செய்து விரதங்கள் இருந்து இறைவனை அடைவது ஒருவழி. பக்திமார்க்கமாக உள்ள நாமசங்கீர்த்தனமும், கோயில் திருப்பணிகளும் மற்றொருவழி -- 2வதின் மூலம் இறைவனை எளிதில் அடையலாம் -- இவ்வழியில் இவ்வுலகிலும், மறு

உலகிலும் பல காரியங்களைச் சாதிக்க பூக்கள்வழி வகுக்கின்றன. அவற்றுள் சிலவற்றைப்பற்றி இங்கு தெரிந்துகொள்வோம்.

முதலில் எந்தெந்த எண்ணங்கள் எந்தெந்த நல்ல காரியங்களுக்கு உதவியாக உள்ளன என்று தெரிந்துகொள்ள வேண்டும். முக்கியமாக எந்த ஒரு செயலையும் பார்த்த உடனோ, வேறொருவர் மூலம் கேட்டவுடனோ முடிவெடுப்பது தவறான செயல். பார்வைக்கு கெட்டதாகத் தெரிவதெல்லாம் கெட்டவையாக இருப்பதில்லை -- நல்லவையாகத் தெரிவதெல்லாம் உண்மையில் நல்லவையாக இருப்பதில்லை. எனவே தீர விசாரித்து அறிய வேண்டும். சித்தர்களும், மகான்களும், முனிவர்களும் சிலருக்கு அதிக சலுகை காட்டுவது போல வெளித் தோற்றத்திற்கு தோன்றும். அதை வைத்து முடிவெடுப்பது தவறான செயல், அவர்கள் காண்பதோ ஒருவரது உள்ளிருக்கும் ஆன்மாவை - ஆனால் நாம் காண்பதோ வெளித்தோற்றம் மட்டுமே. சித்தர்களும், மகான்களும் பூஜை செய்வதோ வேண்டுவதோ -- மற்ற அடியவர்களுக்காகவும், பக்தர்களுக்காகவும். நாம் எப்படி? யாருக்காக வேண்டுகிறோம்?

நமக்காகவே, நமது தேவைக்காகவே வேண்டுகிறோம். வேண்டுவது உண்மையான தேவையா, அதனால் பயன் உண்டா என்று கூடப்பார்ப்பதில்லை. தேவை என்று நினைத்த உடனே இறைவனிடம் வேண்டிவிடுகிறோம். அதற்காக எத்தனை பூஜைகள், வழிபாடுகள், நமஸ்காரங்கள் செய்கிறோம்? ஆனால் இவைகள் நமக்குத்தருவன யாவை?

முறையான சந்தியா வந்தனம், காயத்ரி ஜெபம், மேலும் பல பூஜைகளை ஏன் செய்கிறோம்? நம் முன்னோர் செய்யச் சொன்னார்கள். அதில் ஒரு திருப்தி கிடைக்கிறது. அதனால் செய்கிறோம்.

இறைவழிபாட்டில் கழியும் நேரமே உண்மையாகச் செலவான நேரம் :- ஆகவே செய்கிறோம். சரி இந்த பூஜைகள் செய்வதால் நமக்கு கிடைப்பன யாவை?

சந்தியா வந்தனம் முறையான காலத்தில் செய்ய வேண்டும். காலை சூரிய உதயம் ஆவதற்கு முன்பாகவும், மதியத்தில் தலைக்குமேல் சூரியன் இருக்கும் நேரத்திலும், மாலை சூரியன் மறைவதற்கு சற்று முன்பாகவும்தான் அர்க்கியம் விடவேண்டும். காயத்ரி மந்திரத்தை எப்பொழுது

வேண்டுமானாலும் ஜெபிக்கலாம். அடுத்து சூரிய நமஸ்காரங்களைச் செய்கிறோம். இதனால் கிடைக்கும் பலன் யாது?

இறைவனைக் காணும் பாதையில் செல்ல......

பலன்களைப் பற்றி அறியாமல் நாம் செய்கிறோம். இவை போதும் என்றும் மனதிற்குள்ளே நினைத்து மகிழ்கிறோம். நாம் செய்யும் பூஜைகள், சந்தி, சூரிய நமஸ்காரம், ஜபங்கள் எல்லாம் நமக்குத் தருவது ஒன்றைத்தான். அது இறைவனைக் காணும் பாதையில் நம்மைக் கொண்டு போய் விடுவதுதான். பாதையில் விட்டால் இறைவனைக் கண்டுவிட முடியுமா?

--இவ்வாறு அகஸ்திய முனிவர் தன் சீடர்களிடம் கூறுகின்றார். சீடர்கள், "அன்றாடம் நாம் செய்யும் அனுஷ்டானங்கள் இறைவனைக் காண்பிக்காதா? அப்படியென்றால் எது இறைவனைக் காண்பிக்கும்? இத்தனை நாள் இவை போதுமென்று இருந்தோமே!", என்று யோசிக்கின்றனர். போகர் தன் குருவைப்பணிந்து "குருவே! அனுஷ்டானங்கள் இறைவனைக் காட்டும் பாதையில் கொண்டு போய் விடுகின்றன. அப்படி என்றால் அங்கிருந்து இறைவன் கோயிலை அடைய வழி எதுவோ?" என்கிறார். முகத்தில் கேள்விக் குறியுடன் நிற்கும் சீடரைக் கண்டு அகஸ்திய முனிவர், "அன்பனே! போகா! நீங்கள் இருக்கும் விரதங்கள் உங்களை மேலும் அப்பாதையில் அழைத்துச் சென்று கோயிலின் வாயில்வரைவிடும்," என்கிறார். "விரதம் என்றால் ஒரு வேளை சிற்றுண்டி உணவிற்கு பதில் நீராக அருந்துவது, பின்னப்படுத்தி உண்பது இவைகள் விரதமாகா. உணவு உண்ணாமல், நீர் கூட அருந்தாமல் இறை நினைவுடன் இறைநாமம் விடாமல் கூறி விரதமிருந்தால் அதுவே உண்மை விரதம். அவ்விரதங்கள் இறைவன் கோயில் வாசலில் கொண்டு போய் விடும்," என்றார்.

ஐயம் தெளிந்த சீடர்கள் இப்பொழுது குரு திருவாய் மலர்ந்து கூறப்போவது என்ன என்று ஆவலுடன் பார்த்திருந்தனர்.

அகஸ்திய பெருமான், "சீடர்களே! கோயில் வாயிலைக் கடந்து உள்ளே உங்களை அழைத்துச் செல்லும் சக்தி, நீங்கள் **உகந்து** செய்த தருமத்திற்கும் **ஓடிவிட்ட** பிச்சைக்கும்தான் உள்ளது. அதுவும் இறைவனைக் காண்பிக்காது!" என்று நிறுத்தினார்.

இறைவனைக் காண்பதில் இத்தனை சக்திகளின் உதவி தேவை என்பதை பூரணமாக உணர்ந்த சீடர்கள் ஒரே குரலில் "குருவே! எந்த செயல் இறைவனைக்காட்டும்?" என்கின்றனர். அகஸ்தியர், "இறைவனைக்காட்டும் பாதையில் வருவதற்கு பூஜைகள், சூரிய நமஸ்காரம், சந்தி, ஜபம் தேவை. அப்பாதையில் முன்னேறி கோயிலை அடைவதற்கு விரதங்கள் தேவை. அக்கோயிலினுள் செல்வதற்கோ ஓடியிட்ட பிச்சையும் உகந்து செய்த தர்மமும் தேவை. இவைகளினால் ஒருவன் இறைவன் இருக்குமிடமாகிய கோயிலினுள் வர முடியுமே தவிர பல கோடி சூரிய பிரகாசமுள்ள இறைவனைக் காண முடியாது. இவைகளுக்கு மேல் முக்கியமான இரண்டு செயல்கள் தான் இறைவனைக் காட்டுகின்றன, அவை என்ன?" என்கிறார். சிஷ்யர்கள், நாம் செய்வன எல்லாம் கூறிவிட்டார். வேறு என்ன உள்ளது, என்று யோசிக்கின்றனர்.

சீடர் : திருவிழாக்களில் இறைவனைத் தரிசிப்பது. தீர்த்தம்--தலம்-- மூர்த்தி தரிசனம் இறைவனைக் காட்டுமா?

மற்றொரு சீடர் : குருவே! பூஜைகள் நடக்காமல் இருக்கும் கோயில்களில் பூஜை செய்யச் செய்வது இறைவனைக்காட்டுமா?

குரு : உண்மையில் மிகச் சந்தோஷமான செயல்தான். ஆனால் அதுவும் இறைவன் பாதையில் நடத்திச் செல்லும் விரதமாகத்தான் ஆகும். விரதம் என்பது உண்ணாமல் இருப்பது மட்டுமல்ல. விளக்கில்லாத கோவில் விளக்கேற்றுவது என்ற திடமான எண்ணமும் விரதம் தான்.

மற்றொரு சீடர் : குருவே! பாத்திரமறிந்து, தேவை அறிந்து செய்யும் தானம் அறைவனைக் காட்டுமா?

குரு : இறைவனைக் காட்டுவதற்கு அருகில் தான் அழைத்துச் செல்லும்; காட்டாது! சீடனே!

மற்றொரு சீடர் : குருவே! நாரத மகரிஷியிடம் ஒரு சமயம் மஹாவிஷ்ணு எண்ணை வழியும் கிண்ணத்தைத் தந்து கீழே சிந்தாமல் 'உலகைச் சுற்றிவா' என்றவுடன் கிண்ணத்தையே நினைவில் கொண்டு உலகைச் சுற்றிவந்தார். அப்போது ஒருமுறை கூட நாராயண நாமம் உளமார கூறமுடியவில்லை. எனவே பல இன்னல்களுக்கு நடுவில் வாழ்க்கையை நடத்தும் மக்களால் எப்படிக் கூற முடியும்? எளிய வழியில் இறைவனை அடைய பூலோக மக்களுக்குத் தாங்கள் தான் வழி கூற வேண்டும்.

குரு : நாரதர் ஒரு பெரும் மகரிஷி -- பூலோக மக்கள் காட்டிற்குச் சென்று தவம் செய்ய வேண்டாம். பெரிய பெரிய யாகங்களும் ஹோமங்களும் செய்ய வேண்டாம். இறை நாமம் கூறி வந்தாலே போதும் என்பதனை உலகிற்கு உணர்த்த அக்காரியத்தைச் செய்தார். இதிலிருந்து என்ன தெரிகிறது?

சீடர் : குருவே! ஒரு காரியம் செய்யும் போது மனம் அதில் ஈடுபட்டுவிட்டால் எந்த சுற்றுப்புற சூழ்நிலையும் தெரியக்கூடாது என்பது முறை. துரோணர் இதனைக் கூறுகின்றார். தன்னுடைய சீடர்கள் அனைவரையும் நிற்கச் செய்து ஒரு இலக்கினைக்காட்டி குறிவைக்கச் சொல்கிறார். ஒவ்வொருவரிடமும் என்ன தெரிகிறது என்று கேட்கிறார். ஒருவர் பரந்த ஆகாயமும் அதன் முன்பு மரமும் அதனில் குறிவைத்துள்ள பழமும் தெரிகிறது என்கிறார். மற்றொருவர் மரமும் அதில் உள்ள இலைகளும் பழங்களும் தெரிகின்றன என்கிறார். மற்றொருவர் மரத்தின் கிளையும் பழங்களும் தெரிகின்றன என்கிறார். அர்ச்சுனனிடம் கேட்கிறார் துரோணர். அதற்கு அர்ச்சுனன், "குறிவைத்துள்ள பழம் மட்டும் தெரிகிறது," என்கிறார். "சபாஷ்! அதுதான் உண்மையானகுறி," என்கிறார் துரோணர். அதுபோல் செய்யும் காரியத்தில் குறியாக இருக்கும் போது ஐம்புலன்களும் அதில் ஈடுபட்டிருக்கும் போது இறைவனை நினைப்பது எப்படி குருவே!

குரு : சபாஷ்! உண்மையான கேள்வி. குறியாக ஒரு செயலில் ஈடுபடும் போது, ஐம்புலன்களும் ஒடுங்கும் போது, நீ சுவாசிக்காமல் இருக்கின்றாயா? உன்னுடைய இதயம் துடிக்காமல் இருக்கின்றதா? உன்னுடைய உடலில் உள்ள ஒவ்வொரு பகுதிக்கும் ஆணைகளைப் பிறப்பிக்கும் உன்னுடைய மூளை வேலை செய்து கொண்டுதானே உள்ளது. உதிரம் ஓடிக்கொண்டுதானே உள்ளது. அதுபோல் இறைநாமம் சொல்லிப் பழகியிருந்தால் எத்தகு காரியத்தில் ஈடுபட்டிருந்தாலும் மனம் சொல்லிக்கொண்டே இருக்கும். உறங்கும் போதும் விழித்திருக்கும்போதும் இறைவன் சிந்தனையே என்று அடியார்கள் கூறுவது இதனைத்தான்.

இறைவனைக் காண

சீடர் : அகஸ்திய முனிவரே, இறைவனைக் காட்டும் செயல் யாதோ?

குரு : அவை இரண்டு செயல்கள். ஒன்று நாமசங்கீர்த்தனம் வாயைத்திறந்து இறைவனைப்பாடுவது. **சங்கீதம் முக்கியமில்லை. வாயைத்திறந்து இறைநாமம் பாடுவது மிகவும் முக்கியம். வாய்திறந்து பாடுவீர்! வாழவழி காணுவீர்!!** இறைவனைப் பற்றி வாயாரப் புகழ்வதும் பாடுவதும் இறைவனைக் காண வழி செய்கின்றன. அத்துடன் இன்னொன்றும் செய்ய வேண்டும் - அதுகோயில் திருப்பணிகள்.

கோயில் திருப்பணி என்றவுடன் கும்பாபிஷேகம் செய்வது புதுகோயில் கட்டுவது என்பது பொருள் அல்ல. முன்பாகவே நல்ல நிலையில் கட்டப்பட்டு சரியாகப் பராமரிக்கப்படாமல் உள்ள கோயில்களைப் புதுப்பித்தலும், பாதுகாத்தலும் திருப்பணிகளே. கோயிலைச் சுத்தமாக வைத்திருத்தல் ஒரு பெரும் திருப்பணி. கையில் காசு இல்லை, பொருளில்லார்க்கு இவ்வுலகமில்லை என்று சோம்பி இருப்பவர்கள் கூடத் திருப்பணிகள் செய்யலாம் எப்படி?

கோயிலில் காசு செலவழித்து வாங்கி வந்து கற்பூரத்தை ஏற்றி குப்பையை அங்கேயே போடுகிறார்கள், மக்கள். இதனால் கற்பூரம் ஏற்றிய பலன் குப்பையில் போய்விடுகிறது. ஆனால் செலவு எதுவும் செய்யாமல் கோயிலுக்குச் செல்லும் ஒருவன் இவ்வாறு கோயிலில் கிடக்கும் குப்பையை எடுத்து வந்து வெளியில் போட்டால் கற்பூரம் ஏற்றிய பலன் கிட்டுகிறது. பிரகாரங்களில் சிறுசெடிகள் முளைத்திருந்தால் அவற்றைப் பிடுங்கி வெளியில் எறிவது ஒரு திருப்பணியே. **விளக்கே இல்லாத கோயிலில் விளக்கேற்றுவது ஒரு பெரும் திருப்பணியாகும்.** இவ்வாறு கோயில் திருப்பணிகளை செலவில்லாமல் செய்யவழி இருக்கும்போது அதனைச் செய்யாது விடுவது பெருந்தவறு. அலுவலகம் செல்லும் மக்கள் மற்ற நாட்களில் முடியாவிட்டாலும் விடுமுறை நாட்களில் கட்டாயமாக கோயில் திருப்பணிகள் செய்ய வேண்டும். **நாம சங்கீர்த்தனமும் கோயில் திருப்பணியும் செய்வதே, இறைவனை நேரில் காட்டும் சக்திகள்.**

சீடர் : குருவே! உண்மையை அறிந்தோம். நாமசங்கீர்த்தனமும், கோயில் திருப்பணியும் இறைவனை நேரில் காட்டும் என்பதனை உணர்ந்தோம். கல்லிலே இறைவன் உள்ளான் என்பதனை எப்படி நம்ப முடியும் என்று கேட்பவருக்கு இது சரியான பதிலாகும். பிறந்தவுடனே எவரும் பெரியவர்களாக வளர்ந்து விடுவதில்லை. படிப்படியாகத் தான் வளர்கிறார்கள்.

அதுபோல் ஒவ்வொருவரும் செய்யும் திருப்பணிகளும் நாம சங்கீர்த்தனமும் அவரவரை இறைவனைக் காணவழி செய்கின்றது.

கடமை என்றால் என்ன?

மற்றொரு சீடர் : குருவே! "செய்யும் தொழிலே தெய்வம். நீ கடமையை மறவாதே. கடமையைச் செய்வதே தெய்வ வழிபாடு", என்று சிலர் கூறுகின்றனர். கடமை என்றால் என்ன?

குரு : கடமை என்பது இறைவனால் படைக்கப்பட்ட நாம் இறைவனுக்காக என்ன செய்கிறோம் என்பதுதானே தவிர, அன்றாட வாழ்வில் அலுவலகம் செல்வதோ, குடும்பத்தைக் காப்பதோ, உண்டு உறங்கி வாழ்நாளைக் கடத்துவதோ மட்டும் அல்ல. இவைகளெல்லாம் தினமும் செய்ய வேண்டிய வேலைகளே. இவைகள் யாவும் பிரதி உபகாரம் கருதிச் செய்யப்படும் வேலைகள்தான்.

கோயில்களில் அரிசி மாவினால் கோலம் போடுவது ஒரு சிறந்த திருப்பணியாகும். இது ஒவ்வொருவருடைய கடமையும் ஆகும். இதனால் பல நன்மைகள் விளைகின்றன. கோயிலில் நாம் போடும் கோலங்கள் நம்முடைய வாழ்நாளில் ஏற்படும் பல சிக்கல்களிலிருந்து நம்மைக் காப்பாற்றுகின்றன.

சீடர் : குருவே! எத்தனை நல்ல விஷயங்களைக் கேட்டாலும் கேட்கும்வரை அதனைச் செய்ய நினைக்கும் மனம், சிறிது நேரம் கழித்து அதே நிலையில் இருப்பதில்லையே! இதற்கு காரணம் என்ன?

பூக்களின் பிறப்பு

குரு : மனம் நாம் சொல்கிறபடியெல்லாம் கேட்காது. ஒருவர் ஒரு சத்விஷயத்தைக் கூறினால் உடனே அதைச் செய்ய வேண்டும் என்று நினைக்கும். **இது சொல்பவரின் வெற்றி.** ஆனால் அதனையே நினைத்து, செயலில் கொண்டு வந்தால்தான் கேட்டவருக்கு வெற்றி. மனம் என்பது சந்திரனால் ஆட்டிப்படைக்கப் பெறுகிறது. அந்த சந்திர பகவான் அருளிருந்தால் தான் மனம் அடங்கும். சந்திர பகவான் ஒரு சமயம் மேருமலையில் கடுந்தவம் செய்தார். தீக்கற்களிடையே நின்று பல காலம் தவம் செய்தார். ஏன் எதற்காக என்று தெரியாத தேவர்கள் பலர் ஆச்சரியத்துடன் பார்த்தார்கள். உடல் தேய தவமிருந்தார் சந்திரன். அப்போது திடீரென்று அவன் முன்னால் ஒரு தீப்பிழம்பு தோன்றி 16 ஆக பிரிந்தது. ஒவ்வொரு பிழம்பும் ஒவ்வொரு வேலையைச் செய்தது. ஒரு பிழம்பு அந்த கற்களைக்

குளிர வைத்தது. மற்றொரு பிழம்பு அந்த இடங்களில் தாவரங்களை வளர்த்தது. மற்றொன்று தாவரங்களுக்கு உயிர் ஊட்டியது. இவ்வாறு ஒவ்வொரு பிழம்பும் ஒவ்வொரு காரியத்தைச் செய்யக் கடைசிப் பிழம்பு அம்பிகையாய் உருவெடுத்தது. சந்திர பகவான் அம்பிகையை வணங்க அமிர்த தாரகைகளை சந்திர பகவான் கைகளில் அம்பிகை தந்தாள். அதனை உண்ணும் போது பல துளிகள் தெரித்தன. அவைகளிலிருந்து பிறந்ததே பூக்கள். எனவேதான், பூக்களுக்கு அவ்வளவு மென்மையும், மணமும், வண்ணமும். அமிர்த தாரகைகளே பூக்களாகின்றன. அகஸ்தியர் சீடர்களிடம் மேலும் கூறுகிறார்.

பூக்களின் வகைகள்

பூக்களில் மொத்தம் 38000 கோடி வகைகள் உண்டு. அவற்றில் 20000 கோடி பூக்களை தேவர்கள் தங்களுக்கு என்று தனியாக வைத்துக் கொண்டார்கள். அவர்களைத் தவிர வேறு யாருக்கும் தெரியாது. 11000 கோடி பூக்களைச் சித்தர்கள் தங்களுக்கென்று வைத்துவிட்டனர். அவற்றில் ஒரு பூவின் உதவியால் தான் போகர் 10,000 பேர்களுடன் ஆகாயத்தில் ஒரு சமயம் பறந்தார். மீதியில் 5000 கோடி பூக்கள் மருத்துவ சக்தி பெற்றவை. அவைகளை மருத்துவத்திற்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும். 1000 கோடி பூக்களை அசுரர்கள் தங்களுக்கென்று எடுத்துச் சென்றுவிட மீதமுள்ள 1000 கோடி பூக்களே பூவுலகில் மக்கள் தெரிந்து கொள்ள இருக்கிறது.

இத்தனை பூவுலகப் பூக்களையும் ஒருவர் சாதாரணமாக பார்த்திருக்க முடியுமா என்பது கூட அதிசயம் தான். அவைகளில் சிலவற்றைப்பற்றி கூறுகிறேன் கேளுங்கள்.

சீடர் : அம்பிகை என்று கூறினீர்கள் குருவே. அந்த அம்பிகையின் திருநாமம் கூற வேண்டும்!

அகஸ்தியர் : அரியும் சிவனும் ஒன்று என்று உலகுக்கு காட்டிய அன்னை கோமதி தாய்தான் அந்த அம்பிகை. அவள் தான் சனகாதி முனிவர்கள் மன நிம்மதி பெறுவதற்காகக் கடுந்தவம் செய்த போது அவர்களுக்கு தட்சிணாமூர்த்தி பெருமானை வணங்கச் சொல்லி மன நிம்மதி பெற்றுத் தந்தாள். லலிதா சகஸ்ரநாமம் சொல்வதானால் முடிவில் கோமதி என்று முடித்தால் தான் பூரண பலன் வருகிறது என்கிறார், ஹயக்ரீவர்- கலைவாணிக்கு குரு. லோபா மாதா பூஜித்த மந்திரம் லலிதா சகஸ்ரநாமம்.

சீடர் : குருவே! சில பூக்களைப்பற்றி என்று ஆரம்பித்தீர்கள், தொடர வேண்டும்!

அகஸ்தியர் : ஒவ்வொரு பூக்களின் பின்னும் ஒரு மகான் அல்லது சித்தரின் சரித்திரம் உள்ளது. பல மகான்களும் சித்தர்களும் தங்கள் வாழ்நாள் முழுவதும் செலவு செய்து கண்டுபிடித்த பூக்களும் அதன் நன்மைகளும் உண்டு. மனதை அடக்கிய மகான்கள் சித்தர்கள். எப்படியும் வாழ்வர்/இருப்பர். அவர்களை இகழ்ந்து விட்டு அவர்களால் அறிவிக்கப்பட்ட பூக்களை அணிவதால் வீண்சாபம் வருகிறது. எனவே எவரையும் இகழாதீர்கள்.

"சினமிறக்கக் கற்றாலும் சித்தியெல்லாம் பெற்றாலும்
மனமிறக்க கல்லார்க்கு வாயேன் பராபரமே -தாயுமானவர்!

சீடர் : குருவே! பூக்களையும் அதனை உலகிற்கு தெரிவித்தவர்களையும் பற்றி அறிய ஆவலாக உள்ளோம். முனிவர்கள்தான் எல்லாப் பூக்களையும் இவ்வுலகிற்கு அறிவித்தார்களா? இல்லை வேறுபலரும் அறிவித்தார்களா?

குரு : நல்ல கேள்வி சீடனே! இப்பொழுது உங்களுக்கு ஒரு நடந்த நிகழ்ச்சியைக் கூறுகிறேன். இதிலிருந்து நீங்களே தெரிந்து கொள்ளுங்கள். இந்தப் பூவினை உலகிற்கு அறிவித்தவர் யார் என்று?

பிரம்மா வாழும் உலகிற்கு சத்தியலோகம் என்று பெயர். தாமரையின் மேல் அமர்ந்து சிருஷ்டித் தொழிலை செய்து கொண்டு இருந்தார் பிரம்மதேவர், மாலைக்காலம் வந்தது. மிக ரம்மியமாக இருந்த அந்த பொழுதில், நறுமணம் கமழும் தென்றலில் மிகவும் சந்தோஷமாக இருந்த பிரம்ம தேவர், அனைத்து அழகுகளையும் ஒருங்கே கொண்ட ஒரு பெண்ணைப் படைத்தார். அந்தப் பெண்ணிற்கு அனைத்து கலைகளையும் கல்வியையும், பண்புகளையும் தானே கற்பிக்க எண்ணி ஒரு நல்ல நாளில் அட்ஷராப்பியாசம் செய்தார். அப்படி செய்கையில் முக்கியமான ஒன்றை பிரம்மா செய்தார். அதாவது அட்ஷராப்பியாசம் செய்யும் போது எந்த மொழியில் செய்கிறோமோ அதே மொழியில் தான் கற்பிக்க வேண்டும். பெரும்பாலோர் தமிழிலோ, வடமொழியிலோ, ஆரம்பித்துவிட்டு ஆங்கிலத்தில் ஆ என்று ஆரம்பிப்பார். அக்குழந்தைகள் கல்வியில் சிறந்ததாக இருக்காத காரணம் பெற்றோர்களே. குழந்தைகள் அல்ல முதலில் ஆரம்பித்த மொழியில் படித்த பிறகு எத்தனை மொழிகளும் கற்றுக் கொள்ளலாம். அதுபோல் அனைத்தையும்தானே கற்பித்தார் தன்னுடனேயே

வளர்த்து வந்தார். எல்லா கலைகளிலும் தேர்ச்சி பெற்று விளங்கிய அந்த பெண்ணிற்கு மணம் முடிக்க விரும்பினார். அப்போது நாரதர் அங்குவர, அவரை வணங்கி, "நாரதப் பிரபுவே! அடியேனை ஆசீர்வதிக்க வேண்டும்", என்கிறாள் பிரம்மாவின் மகள். "தீர்க்க சுமங்கலி பவ!'' என்று ஆசி கூறுகிறார். உடனே "பிரபு அடியேனுக்கு நீங்கள் ஒரு வரம் தர வேண்டும்" என்கிறாள்"

மேலும் நாரதர் "என்னை இதுவரை கலகக்காரன் என்றுதான் அனைவரும் கூறுகிறார்கள். என்னிடம் வரவும், நான் அவர்களிடம் செல்வதையும் பெரும்பான்மையோர் விரும்புவதில்லை நீயோ எனக்கு பாத பூஜை செய்து வணங்கி ஆசிகேட்டாய் எனவே நீ கேட்பதை தருகிறேன் கேள்'' என்றார்.

ஓம் நமோ நாரத நாராயணாய நமஹ : மந்திரச் சிறப்பு

அதற்கு பிரம்மாவின் வளர்ப்பு மகள், "முனிபுங்கவ! ஓம் நாராயணாய நம: என்று கூறுவதை விட ஓம் நமோ நாரத நாராயணாய நம: என்று கூறினாலே திருமால் விருப்பமுடன் ஏற்று விரைவில் அருள்புரிவார்'' என்று என் தந்தை கூறியுள்ளார். நான் எல்லா உலகமும் போற்றும் பதிவிரதையாக ஆக வேண்டும் என்று வரம் தர வேண்டும்" என்கிறாள். "ஆக, ஒரு பெண் எதைக் கேட்க வேண்டுமோ, அதைக் கேட்கிறாய்; தந்தேன். உலகமெலாம் போற்றப்படும் உத்தமப் பதிவிரதையாக ஆவாய்'', என்று நாரதர் மனமுவந்து வரமளித்தார்.

ஒரு பெண் கேட்க வேண்டிய வரம் யாது?

அகஸ்திய முனிவர்," சீடர்களே! நீங்கள் கூறுங்கள்! ஒரு பெண் எதைக் கேட்க வேண்டும் என்று ஒரு நாள் கேட்டபோது என்ன சொன்னீர்கள். ஒருவன் நல்ல கணவனைக் கேட்க வேண்டும் என்றீர்கள், கணவன் நல்லவனாக இருந்துவிட்டால் போதுமா! தான் நல்லவளாக இருக்க வேண்டாமா? இன்னொருவர், பணம் வேண்டும், செல்வம் வேண்டும், அழகு வேண்டும், குணம் வேண்டும் என்றெல்லாம் கூறினான். இவை மட்டும் போதாது. ஒரு பெண் சுமங்கலியாக கடைசி வரை வாழ வேண்டும் என்ற வரம் கேட்க வேண்டும்" என்றும் கூறினான் ஒருவன். ஒருவன், கணவன் இறந்த பின்னும் அவன் விட்டுச் சென்ற காரியங்களை, வைராக்கியங்களைத் தொடர்ந்து செய்து, குடும்பத்தைக் காப்பாற்றிவர வேண்டும், என்று கூறினான். இதற்கெல்லாம் ஒரு நாள் பதில் சொல்வதாகக் கூறினேன்! ஞாபகமிருக்கிறதா! இதுதான் பதில். ஒரு பெண் தான் பதிவிரதையாக இருக்க வேண்டும் என்றுதான் வேண்ட வேண்டும்," என்றார்.

குருவே, "சுமங்கலித்துவம் இருந்தால் தானே பதிவிரதையாய் இருக்க முடியும்? என்றார் ஒரு சீடர் அதற்கு மற்றொரு சீடர் நண்பா! குரு முன்பே கூறியுள்ளதைக் கூறுகிறேன்," என்று கூறி, "குருவே! அனுமதி வேண்டும்" என்றான். "நன்று சீடனே! தெரிந்ததைச் சொல்," என்றார் குரு. "சுமங்கலித்துவம் என்பது கணவன் உயிருடன் இருக்கும் போது, பூவுடனும், குங்குமப் பொட்டுடனும் இருப்பது மட்டுமல்ல. **கணவன் மனம் கோணாமல் இறைவழியில் கணவனை நடக்கச் செய்து, கணவன் இறந்த பின்னும் அவன் விட்டுச்சென்ற தெய்வீகக் காரியங்களை தொடர்ந்து செய்து வாழ்வதே. சுமங்கலித்துவம்"** என்றான்.

இன்னொரு சீடர், "குருவே! மேல் உலகில் சென்று கணவனுக்கு உதவுவதோ, எதிர்பார்த்திருந்த அவருடன் சேருவதோ, தவறில்லையே," என்றார்.

"தவறில்லை தான். ஆனால் மேல் உலகில் உடல்களைப் பார்ப்பதில்லை உள்ளங்களைத் தான் பார்க்கின்றனர். அங்கு ஆத்மாக்கள் (உள்ளங்கள்) தான் உண்டு. எந்த உருவத்தையும் எவரும் எடுக்கலாம். எனவே ஒருவர் மற்றவருக்காக தயார் செய்வது காத்திருப்பது என்பதில்லை", என்றார் குருதேவர் அனைவரும் மௌனமாக சிந்திக்கலாயினர்.

சிறிது நேரம் சென்றவுடன் உணவு உண்ணும் போது உணவில் சீடர்களுக்குக் கவனம் செல்லவில்லை என்பதை குரு பத்தினியும் குருவும் கண்டனர். லோப மாதா தேவி, "நாதா! ஏன் சீடர்கள் ஒரு மாதிரி உள்ளனர். உணவு சரிவர உட்கொள்ளவில்லையே" என்றவுடன் அகஸ்திய மகா பிரபு தனக்குள் சிரித்துக் கொண்டார்.

அப்போது சிஷ்யர்களில் ஒருவன், "தாயே! இன்று ஒரு பதிவிரதையைப் பற்றி குரு சொல்ல ஆரம்பித்துள்ளார். பிரம்மாவின் வளர்ப்பு மகள். நாரதரிடம் தான் மிகச்சிறந்த பதிவிரதையாக வேண்டும் என்று வரம் பெற்றுள்ளாள். அந்த பெண் எப்படி பதிவிரதை ஆனாள்? அவள் யாராக இருக்கும் என்று யோசிக்கின்றோம். உணவு இறங்கவில்லை" தாயே! என்றான்.

அதற்குள் குரு உணவு முடித்து எழுந்துவிடவே இவர்களும் உணவை முடித்து எழுந்துவந்து குருவுக்கு சிரம பரிகாரம் செய்கிறார்கள். அப்போது மெதுவாக ஒரு சீடர், "குருவே அந்த

பதிவிரதையைப் பற்றி உண்மைக் கதையைப் பூர்ணமாக தெரிந்து கொள்ள ஆவல் கொண்டுள்ளோம், கூறவேண்டும் குருவே!" என்றார்.

அகஸ்திய முனிவர், "சீடர்களே! மேற்கொண்டு கேளுங்கள். பிரம்மதேவர், "இளமையிலேயே ஒவ்வொருவரும் இறை நினைவோடு, இறைத்தொண்டு செய்ய வேண்டும். அப்போதுதான் முதுமை வருகையில் இளமையில் செய்ததை நினைவில் கொண்டே முதுமைக் காலத்தை கழிக்கலாம்," என்று தன் பெண்ணிடம் கூறினார். அந்த பெண், "தந்தையே, பெண்களுக்கு இறைத்தொண்டு எப்படி பொருந்தும் என்று கூற வேண்டும்," என்று விண்ணப்பித்தாள்.

பிரம்மா, "மகளே! திருமணம் ஆகும் முன், தக்க துணையுடன் கோயிலுக்குச் சென்று கோயில் வாசலைப் பசுஞ்சாணத்தால் மெழுகிக் கோலமிட்டு, கோயிலையும் கழுவி சுத்தமாக வைத்திருக்க வேண்டும். அரிசி மாவினால் கோலம் விதம் விதமாகப் போடுவது, பூக்களை மாலையாகக் கட்டுவது போன்ற பல தொண்டுகள் உள்ளன. திருமணமான பின்னரோ, கணவனின் தேவைகளைக் கவனித்தபின் அவன் துணையுடன் கோயிலுக்குச் சென்று மேற்சொன்ன தொண்டுகளைச் செய்ய வேண்டும்," என்றார்.

"முனிவர் பெருமானே! நான்கு முனிவர்கள் தங்களைக்காண வருகின்றனர்" என்று ஒரு சீடர் கூறினார். உடனே சீடர்கள் அனைவரும் சென்று எதிர்கொண்டு அந்த நான்கு முனிவர்களையும் அழைத்து வந்து அவரை அமரச் செய்து, பாத பூஜைகளைச் செய்து நமஸ்கரித்து ஆசிபெறுகின்றனர். அப்போது அகஸ்திய முனிவரும் அவர்களை வணங்கி வரவேற்க, அவர்களும் அகஸ்தியரை வணங்குகின்றனர். அகஸ்திய முனிவர், "எனதருமைச் சீடர்களே! நான் உங்களுக்குக் கூறிய மலர்களைப் பற்றிய வரலாறு இவர்கள் கூறியதுதான்," என்றார்.

பிறகு ஒருசமயம் இந்த நான்கு முனிவர்களும் பிரம்மாவிடம் சென்று, "மனம் நிலையில்லாமல் அலைந்து கொண்டே உள்ளதே மன அமைதி காண வழி யாது தந்தையே?", என்று கேட்டனர். பிரம்மா, "நீங்கள் சங்கரநாராயணனை உலகுக்குக் காட்டிய தாயை வணங்குங்கள். அவள்தான் உங்களுக்கு வழி சொல்வாள்," என்றார்.

சனகாதி முனிவர்கள் சங்கரநாராயணனை உலகுக்குக் காட்டிய தாய் கோமதி அம்மன் தான் என்று உணர்ந்து அந்த அன்னைக்கு பலவிதங்களில் பூஜை செய்கிறார்கள். காவடிகள் எடுத்துப் பல நிலைகளில் தவங்கள் செய்து பூஜை பல அபிஷேகங்கள் செய்து வழிபட்டனர். அந்த காலங்களில் செடி கொடிகளிலெல்லாம் இலைகள் இருக்கும். பிறகு காய்கள் காய்த்து கனியாகுமே தவிர பூக்கள் கிடையாது. சனகாதி முனிவர்கள் இவ்வாறு பூஜை செய்த போது கோமதி தாய் சந்தோஷப்பட்டு இவர்கள் முன் தோன்றி சந்திரனின் அமிர்த தாரகைகளால் வந்த பூக்களைப் பற்றி கூறுகின்றார். பின்னர் அந்தப் பூக்களாலேயே அர்ச்சனை செய்தனர். மிகவும் மகிழ்ச்சி அடைந்த கோமதிதாய் தட்சிணாமூர்த்தியிடம் செல்லுங்கள். மன அமைதி கிடைக்கும் என்று கூற, தட்சிணாமூர்த்தியிடம் சென்று உபதேசம் பெற்று மன அமைதி கொள்கின்றனர். அவர்கள்தான் இப்போது உங்கள் எதிரில் உள்ளனர். இவர்களை வணங்கி ஆசி பெறுவீர்களாக! மன அமைதி கிட்டும்," என்கிறார் அகஸ்தியர்.

பிறகு சனகாதி முனிவர்கள் சிஷ்யர்களை ஆசீர்வதித்து விட்டு அமர்கின்றனர்.

மனம் அமைதி பெற!

ஒரு சீடர், "சனகாதி முனிவர்களே! நீங்கள் தட்சிணா மூர்த்தியிடம் சென்று மன அமைதி பெற்றீர்கள். மன அமைதி என்றால் என்ன? எதைக் கொண்டு மன அமைதி பெற்று விட்டதாகக் கருத முடியும்? விளக்கமாகக் கூற வேண்டும்," என்றார்.

இதற்கு, அகஸ்திய முனிவரைப் பார்த்து புன்னகைத்துவிட்டு, சனகாதி முனிவர்கள் நால்வரும் ஒவ்வொருவராகச் சொல்கிறார்கள். "மன அமைதி பெறுவதற்குமுன் மனம் ஒரு நிலையில்லாமல் பல விஷயங்களில் அலைந்து கொண்டிருக்கும். வாழ்க்கையில் திருப்தி இருக்காது. போதும் என்ற மனமும் இருக்காது ஒன்று முடிந்த உடன் மற்றொன்றில் மனம் அலையும். மேலும் மன அமைதி பெறும் வரை இறைத்தொண்டு, இறை அடியவர் தொண்டு இவைகளில் மனம் பூரணமாக ஈடுபடாது. மன அமைதி பெறுவது என்பது எளிதான காரியமாகாது. ஒரு மகானிடம் "மனம் எப்படி பூஜை செய்வதில் நிலைத்து நிற்கும்,?", என்று ஒரு பக்தர் கேட்டாராம். அதற்கு அவர் ஒரு அமைதியான சூழ்நிலையில் இறைவனை நினைத்துக் கொண்டு, அவன் நாமம் ஏதாவது ஒன்றை (அவரவருக்கு

எளிமையாகவும் பிடித்ததாகவும்) திரும்பத் திரும்ப சொல்ல வேண்டும். அப்போது மனம் அதில் சிறிது நேரம் ஈடுபடும் இதை எப்படி தெரிந்து கொள்வது என்றால், அந்த சிறிது நேரம் மற்ற விஷயங்களை நாம் மறந்திருப்போம். பிறகு வாய் மந்திரத்தை கூறினாலும் கண்கள் இறைவனைக் கண்டாலும் மனம் வேறு எதிலாவது சென்றிருக்கும். சிறிது நேரம் சென்றவுடன் நம் மனம் தானாகவே வரும். அந்த இடைப்பட்ட நேரம் நாம் இறை நாமத்தை மனப்பூர்வமாக ஜபிக்கவில்லை என்பதனை அறிந்து கொள்ளலாம். எனவே உங்கள் மனதை அடக்கி ஒரு வழிப்படுத்தி இறை நாமம் ஜபிக்க கட்டாயப்படுத்த வேண்டும். ஏனென்றால் அது உங்களால் முடியாது. போகிற போக்கில் போகவிடுங்கள். சிறிது நேரம் சென்றவுடன் தானாகவே மீண்டும் இறை நாமத்திற்கு வரும்! பிறகு மீண்டும் வெளியே செல்ல முயலும். இது பழகப்பழக வெளியில் சென்றுவரும் இடைவெளி குறைந்து மனம் ஒன்றி இறை நாமம் செல்லும் பழக்கம் வரும். எனவே தான் நாமசங்கீர்த்தனம் என்று பெரியவர்கள் வைத்தார்கள். பல இறை நாமங்களை, குணங்களை ஒன்றாக்கி ஒரு பாடலாகப் பாடுவதால், இசையும் கலந்திருப்பதால் அதில் ஈடுபடும் மனம், பக்கவாத்தியங்களையும் சேர்த்து பாடுவார்கள். இதனால் இந்த இசைக் கலவையில் இறைநாமம் பலர் சேர்ந்து பாடுவதால் மனம் ஒன்றிப் பாட வாய்ப்புகள் அதிகம். நம் முன்னோர்கள் அறிவுள்ளவர்கள் எதைச் செய்தாலும் அர்த்தத்துடனும் காரியத்துடனும் தான் செய்துள்ளார்கள். நாம சங்கீர்த்தனம் மனம் அடங்க வழிவகுக்கிறது" என்றார்.

கலியுகத்தில் இறைவனைக் காண....

மேலும் சனகாதி முனிவர்கள், "ஒவ்வொருயுகத்திலும் ஒரு தருமம். ஒருயுகத்தில் 10000 ஆண்டுகள் தவம் செய்தால் இறைவனைப் பார்க்கலாம் என்று இருந்தது. அடுத்த யுகத்தில் பல நூறு ஆண்டுகள் ஒரு காலில் நின்று, அல்லது தண்ணீரில் நின்று, நெருப்பில் நின்று தவம் செய்தால் இறைவனிடம் வரம் பெறலாம் என்று இருந்தது. அடுத்தயுகத்தில் உணவு உண்ணாமல், ஒரு இடத்தில் நிலையாக இருந்து தவம் செய்து பல ஆண்டுகள் கழித்து இறைவனைப் பார்த்து வரம் பெறலாம் என்று இருந்தது. ஆனால் கலியுகத்திலோ, "கடினமாக எதுவும் செய்ய வேண்டாம். இறைநாம சங்கீர்த்தனமாக வாய் திறந்து பாடினாலேயே இறைவனைக் காணலாம் என்று உள்ளது. பாட்டு என்றவுடன் இசை ஞானம் வேண்டுமே என்று ஒதுங்க வேண்டாம். பாடுவதற்கு அதில் கவனம் இருந்தால் போதுமானது. சிறுவயதிலிருந்தே

குழந்தைகளுக்கு இப்பழக்கத்தைக் கற்பிக்க வேண்டும்," என்றார்கள்.

கலியிக தர்மம்

"குருவே! கலியுக தர்மத்தைப் பற்றி நீங்கள் இவ்வளவு விளக்கமாக எங்களிடம் கூறக் காரணம் யாது," என்று ஒரு சீடர் எழுந்து வணங்கிக் கேட்டார்.

"அன்பனே! கலியுகத்தில் தர்மம் ஒரு காலின் நகத்தின் நுனியில் தான் நிற்கும். அதர்மங்கள் பல்கிப் பெருகும். தர்மம் சிறிதுதான் நடக்கும். அந்த தர்மத்தை நிலை நிறுத்தத் தான் உங்களிடம் இவ்வாறு கூறினோம். தர்மங்கள் குறையக் குறைய அதைப் பரப்பும் முனிவர்கள், மகான்கள் குறைந்து கொண்டே வருவார்கள். அவர்கள் தாங்கள் இருக்கும் போது தர்மத்தை பரப்ப மிகவும் முயற்சிப்பார்கள். அந்த நிலையில் நீங்களும் இருக்கலாம் நாங்களும் இருக்கலாம். இறைவன் திருஉள்ளம் எப்படியும் இருக்கலாம்! எனவே உங்களிடம் இவ்வாறு கூறினோம்," என்றார்.

மகான்கள் அவதரிப்பது ஏன்?

"குருவே! இயற்கையாக தருமம் குறைந்து வர வேண்டும் என்று தானே இத்தகைய நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. இதில் ஏன் தர்யத்தை நிலைநாட்ட மகான்கள் கஷ்டப்பட வேண்டும்? தெரிந்துகொள்ள விரும்புவதால் மன்னித்து அருள் செய்ய வேண்டும்," என்கிறார்.

சனகாதி முனிவர்கள், "சீடனே! மழை இயற்கையாகத் தேவையானதுதான். அது பெய்யும் போது அந்த நீரை தேக்கிவைத்து வேண்டிய அளவு பயன்படுத்திப் பல நாட்களுக்கு வைத்திருக்கிறோம். அது போல் தர்மம் குறையும் போது, அதைத் தேக்கி வைத்து முடிந்த மட்டும் பல நாட்கள் பயன்படுத்தவே முனிவர்கள், மகான்கள் உள்ளம் கொண்டு, அந்தந்த காலத்தில் அவதரிக்கிறார்கள். அவர்களைச் சுற்றித் தரும காரியங்கள் நடைபெற்றுக் கொண்டே இருக்கும். பல ஜன்மங்களில் உடன் இருந்து, சில விஷயங்களால் பிரிந்தவர்கள், இந்த மகான்களுடன் சேரும் போது பழைய தருமங்களும், தானங்களும், செய்த நினைவுகள் வந்து, அதனால் இப்பிறவியில் தருமங்களைச் செய்து நற்கதி அடைவார்கள். அத்தகைய மக்களுக்காகவும் மகான்கள் கலியுகத்தில் அவதரிப்பார்கள்," என்கிறார்.

சனகாதி முனிவர்கள், அகஸ்தியரிடம் சீடர்களிடமும் விடைபெற்றுச் சென்றார்கள்.

அகஸ்திய முனிவரை வணங்கி, சீடர்கள், "குருவே! தங்கள் அருளால் சற்றுமுன் வந்த முனிவர்களிடம் நன்மை பெற்றோம். தாங்கள் அந்த பதிவிரதைப் பெண்ணைப்பற்றி கூறவேண்டும்", என்றனர்.

உலகம் போற்றும் பதிவிரதையாக

அகஸ்தியர், "சீடர்களே! பிரம்மதேவர் பல கலைகளையும் நற்பண்புகளையும் கற்பித்து வளர்த்து, பல மகான்களிடம் பணிவிடை செய்வித்து வளர்த்த பெண்ணைத் திருமணம் செய்து கொடுக்க நினைத்தார். இந்த சமயத்தில் தான் அந்த பெண், நாரத மகரிஷியிடம் வரம் கேட்டுப் பெற்றாள்" அப்போது நாரதர், "பெண்ணே! **உண்மையான உலகம் போற்றும் பதிவிரதையாக வேண்டுமென்றால், முழுமதி நாளில் உண்ணாவிரதமிருந்து முல்லை மலர் எடுத்து கோமதி தாய் நாமம் கூறித் தொடுத்து, முறையோடு சாற்றி வணங்க வேண்டும்,"** என்றார். அந்தப் பெண்ணும் அன்றுமுதல் பௌர்ணமி அன்று உண்ணா விரதமிருந்து முல்லை மலர்களைச் செடியிலிருந்து தானே பறித்து, கோமதித் தாயின் நாமம் கூறித் தொடுத்து அம்பாளுக்கு சாற்றி வேண்டி வந்தாள்".

பிரம்ம தேவர், இந்த உத்தமப் பெண்ணை மணக்கப் பல பேர் போட்டி போடுவதால் ஒரு தேர்வு வைக்க வேண்டும் என்று எண்ணி, அகில உலகங்களையும் முதலில் சுற்றி வருபவருக்கு இந்தப் பெண்ணை மணமுடிக்க விழைந்தார். வந்தவர்கள் எல்லோரும் யோசித்து அவரவர் வழியில் உலகம் சுற்ற ஆரம்பித்தனர். முன்பே இறைவனையும், இறைவியையும் சுற்றிவந்தால் அகில உலகங்களையும் சுற்றி வந்ததாகப் பொருள் என்று சிலர் சிவபெருமானை நோக்கிச் செல்ல ஆரம்பித்தனர். பல அவதாரங்களை எடுத்து உலகைக்காத்த மகா விஷ்ணுவையும், மகாலட்சுமியையும் சுற்றிவந்தால் உலகைச் சுற்றியதாக பொருள் அமையும் என்று சிலர் அவரிடம் சென்றனர்.

அகில உலகம் சுற்றிய கௌதம மகரிஷி

நாரத மகரிஷி உடனே பூலோகம் வந்தார். பூலோகத்தில் தான் அரிய பெரிய காரியங்கள் செய்த மகான்கள் இருந்தனர். நாரதர் கௌதம முனிவரின் ஆசிரமம் வந்து கௌதமரை வணங்கி விஷயத்தைக் கூறுகின்றார். "ஒரு உத்தமப் பெண்ணை மணந்து

கொள்வதால் பல தெய்வீகக் காரியங்களைச் செய்யலாம். பல விதங்களில் உன்னதமான இடத்தைப் பெறலாம். எனவே தான் இல்லறவாழ்வே சிறந்த வாழ்வு என்றனர் பெரியோர்கள். ஆகவே முனிவரே தாங்களே அந்தப் பெண்ணை மணக்க தகுதியானவர். நீங்கள் தயவு செய்து வரவேண்டும்" என்று அழைத்தனர். கௌதம முனிவர் புறப்பட்டார். வழியில் ஒரு பசுமாடு கன்றினை ஈன்று கொண்டிருந்தது. தலை மட்டும் வெளியில் வந்துவிட்டது. அந்த நேரத்தில் அந்தப் பசுவினை 14 தடவைகள் சுற்றி வந்தால் அகில உலகங்களையும் சுற்றிவந்த பலன் கிடைக்கிறது. இதனைத் தெரிந்திருந்த கௌதம முனிவர், இப் போட்டியில் ஜெயிக்கவும் இது தருணம் என்று அப் பசுவை 14 முறை சுற்றி வந்தார். பின்னர் இருவரும் பிரம்ம தேவரை வணங்கி "உலகை முதலில் சுற்றி வந்தவர் கௌதம மகரிஷியே!" என்று நாரதர் கூறினார். பலரும் ஒன்று கூடி அது உண்மையே என்று உணர்ந்து ஆசி கூற கௌதமருக்கும் அந்த உத்தமிக்கும் திருமணம் சிறப்பாக நடந்தது. அந்த உத்தமிதான் அகலிகை," என்றார் அகஸ்தியர்.

உத்தமப் பதிவிரதை அகலிகை தவறு செய்யவில்லை! ஆயினும் சாபம் ஏன்?

"முல்லை மலரினால் பதிவிரதை பட்டம் பெற்றாள் அகலிகை" என்று அகஸ்தியர் கூறுகையில் ஒரு சீடர் "அப்படியென்றால் அகலிகை சாபம் பெறக் காரணம் யாது குருவே?" என்றார்.

அகஸ்தியர் பெருமான், "உண்மையே! இளம் பிராயத்திலேயே ஒரு சமயம் இந்திரன் வெள்ளையானை மீது பவனி வருகையில் அகலிகையைப் பார்த்து ஒரு கணம் ஆசை கொண்டான். ஆனால் எண்ணத்தை ஈடேற்றிக் கொள்ள உலகை சுற்றி வர முயற்சித்துத் தோற்றான். கௌதமர் அகலிகையை மணந்தார். ஒருநாள் விடிவதற்கு முன்னால் நள்ளிரவில் அகலிகையை அடைய எண்ணி சேவலாக உருமாறிக் குரல் கொடுத்தான். விடிந்தது என்று எண்ணி கௌதம மகரிஷ நதியில் நீராடச் செல்கலில் கௌதமராக வடிவெடுத்து அகலிகை எதிரில் நின்றான்," என்று நிறுத்தினார் அகஸ்தியர்.

"சீடர்களே! நாளைய உலகில் அகலிகைக்கு மாசு கற்பிக்கும் வகையில் இந்த நிகழ்ச்சியை மாற்றிவிடுவார்கள் அவரவர் தங்கள் மனதில் உள்ள எண்ணங்களை, கற்பனைகளை வெளியில் கொண்டு வருவதற்கு இந்நிகழ்ச்சியைப் பயன்படுத்தலாம். எனவே மிகவும் துல்லியமாகக் கேளுங்கள்,"

என்று கூறி, "சீடர்களே! பிரம்மனால் படைக்கப்பெற்று, நாரத மகரிஷியினால் வரம் வாங்கப் பெற்ற, கௌதம மகரிஷியின் பத்தினி அகலிகை தவறு செய்வாளா? இல்லை, இல்லை. ஆனால், இந்திரன் மனதில் அகலிகை பற்றி எழுந்த எண்ணங்களை அகற்ற வேண்டும். எந்த பதிவிரதை ஆனாலும் கணவனைத் தவிர மற்றவர் உள்ளத்தில் சிறிது கூட எந்தவிதமான தவறான பிரதிபலிப்பையும் ஏற்படுத்தக் கூடாது. எனவே முன்னரே ஏற்பட்டுவிட்ட எண்ணப் பிரதிபலிப்பை (அகலிகைக்கே தெரியாமல்) அழிக்கவே இச் சந்தர்ப்பம். கௌதம மகரிஷியினாலேயே ஏற்படுத்தப்பட்டது. தலையை நிமிர்த்தி ஆகாயத்தில் உள்ள நட்சத்திரங்களைப் பார்த்தால், விடிந்ததா இல்லையா என்று தெரியாதா, கௌதமருக்கு? அவர் ஏன் நதி தீரம் வரை நடந்து சென்று, நதி உறங்குவதைக் கண்டு (நீரோட்டத்தைக் கண்டால் தெரிந்து கொள்ளலாம்) இதில் ஏதோ சூழ்ச்சி இருக்கிறது என்று திரும்புகிறார்? இது அவர் ஏற்படுத்திய நாடகமே. இந்திரன் மனதில் ஏற்பட்ட விகார எண்ணங்களைப் பூர்த்தி செய்து கொள்ள அகலிகையை அணுகினான். ஆனால் அகலிகையின் உள் மனதோ இவர் கௌதம மகரிஷி அல்ல என்ற உணர்த்தியது. இதற்கிடையில் நதிவரை சென்ற கௌதமர் திரும்பி வந்தார். இருவரையும் கண்டவுடன் சபிக்கின்றார் ஏன்? அவருக்குத் தான் தெரியுமே! இருப்பினும் ஏன் சபிக்கிறார்? இந்திரனின் விகார எண்ணங்களுக்குக் காரணம் அகலிகையின் அழகு. எனவே அகலிகையின் அழகுக்குச் சாபம்" "நீ கல்லாக மாறுவாய்" என்று சபித்தார். மாற்றான் மனைவி என்றவுடன் கூட மனதில் எண்ணங்களை அடக்கத் தெரியாத இந்திரன் "உன் உடல் முழுவதும் யோனிக் கண்களாகட்டும்" என்று சபித்தார்.

அகஸ்தியர் "சீடர்களே! சபித்தலைக் கவனியுங்கள் கண்களால் பார்த்ததையே பெரிதாகக் கொண்டு தன்னுடைய கற்பையும் மதிக்காமல், மற்றாருடைய மனைவி என்று தெரிந்தும் வந்த இந்திரனுக்கு உடல் முழுவதும் யோனிக் கண்களாகச் சாபம். இந்திரனைக் கவர்ந்த அகலிகையின் அழகுக்கு கல்லாக மாறச் சாபம். இந்திரன் சாபத்திற்கு விமோசனம் அப்போது இல்லை. ஆனால் அகலிகைக்குச் சாப விமோசனம் உள்ளது. உத்தம புருஷன் ஸ்ரீராமர் கால் பட்டால் சாப விமோசனம். ஆனால் உத்தம புருஷன் ஸ்ரீராமரோ ஏகபத்தினி விரதன். மற்றொரு பெண் மேல் தன் கால்படுவதை ஒப்பமாட்டான். எனவே தான் கல்லாகச் சாபம்.

கல்லின்மேல் கால்படுவது தவிர்க்க முடியாது. இராமர் கால் பட்டவுடன் சாபம் தீர்ந்து கௌதமரைச் சேர்ந்தாள். மேலும் தவறு செய்தவர்கள் மேல் ஸ்ரீ ராமரின் பாதம் படுமா? படாது. எனவே அகலிகை தவறு செய்யவில்லை.

பஞ்சமாதா ஸ்தோத்திரம்

"அகல்யா திரௌபதி சீதா தாரா மண்டோதரிததா
பஞ்சகன்யா ஸ்மரே நித்யம் மஹாபாதக நாசனம்"

என்று மகா பாரதத்தில் கண்ணனால் பஞ்ச பதிவிரதா தேவிகளில் முதலாவதாக வைக்கப்பட்டு வணங்கப்படுபவள் அகலிகைதான். எனவே முதலில் வைத்து உலகெலாம் பதிவிரதை என்று போற்றப்படும் அகலிகை இந்நிலை பெறக் காரணம் முல்லை மலர்தான் என்கிறார், அகஸ்தியர்.

அகஸ்தியரும் சீடர்களும் அகலிகை தேவியையும் கௌதம மகரிஷியையும் மனதில் எண்ணி வணங்குகிறார்கள். மாலை நேரம் வந்தவுடன் அநுஷ்டானங்களை முடிக்கின்றனர். மறுநாள் அகஸ்திய பெருமான் சீடர்களை அழைத்துக் கொண்டு கௌதமர் ஆசிரமம் வருகிறார். கௌதமரும் அகலிகையும் அவர் சீடர்களும் அவர்களை வரவேற்று அமரச் செய்கின்றனர். அகஸ்தியரின் சீடர்கள் "முனிவர் பெருமானே! பூக்களின் உபயோகங்களைப் பற்றித் தெரிந்து கொள்ள ஆவலாக உள்ளோம். அம்பிகைக்கு எந்தெந்த நாளில் எந்தெந்தப் பூவினால் அலங்கரிக்க வேண்டும்," என்று கேட்கிறார்கள்.

எவரிடம் பூ வாங்கலாம்?

கௌதம மகரிஷி : "சீடர்களே! கேளுங்கள்! பூக்களின் புனிதங்களைத் தெரிந்து கொள்வதற்கு முன், எப்படிப் பூ வாங்க வேண்டும் என்பதனைத் தெரிந்து கொள்ள வேண்டும். பூவைவாங்கினாலும், பூ பறித்தாலும், பூச்சூடினாலும் பெண்களுடைய முந்தானை தொங்கக் கூடாது. ஒரு முழம் தொங்கினால் கணவன் மனைவி ஒற்றுமை இருக்காது. இரண்டு முழம் தொங்கினால் நெருப்பினால் கண்டம். மூன்று முழம் தொங்கினால் காதலித்தவனை கணவனாகப் பெற்றுப் பின்னர் அவனாலேயே கைவிடப்படுவாள். பாதம் வரை தொங்கினால் பிறந்த இடமும் இல்லாமல் புகுந்த இடமும் இல்லாமல் அவதிப்படுவாள். எனவே பூக்களை எப்படி வாங்க வேண்டும் என்று தெரிந்து கொள்ளுங்கள். பூவைத்துக் கொண்டுள்ள, குங்குமம் வைத்துக் கொண்டுள்ள சுமங்கலியிடம் புஷ்பம் வாங்க

வேண்டும். ஆணாக இருந்தால் நெற்றிக்கு திருமண் அல்லது விபூதி இட்டிருக்கும் ஆட்களிடமே பூ வாங்க வேண்டும்,'' என்கிறார்.

அடங்காமை உய்த்து விடும்? ஆறிருளைக் கடப்பது எப்படி?

அகஸ்தியர் : சீடர்களே! அடக்கம் அமரருள் உய்க்கும், அடங்காமை ஆரிருள் உய்த்து விடும். ஆரிருள் என்பது ஆறு வகையான இருளைக் குறிக்கிறது. ஒவ்வொரு மனிதனும் தன் உடலை விட்டுப்பிரிந்து செல்லும் போது இந்த ஆறு இருளையும் சந்திக்க வேண்டி வரும். இவைகளைச் சுலபமாகக் கடந்து செல்ல ஒரு வழி உள்ளது'' என்கிறார். "அது என்ன சொல்லுங்கள்'' என்கிறார். ஒவ்வொரு சீடரும் யோசிக்கின்றனர். ஒருவர், "மற்றவர் வாழ்வில் விளக்கேற்றியிருந்தால் இந்த இருளில் ஒளி கிடைக்கும்'', என்கிறார். அதாவது ஒருவரின் நல்வாழ்விற்கு உதவியிருந்தால் என்று பொருள். மற்றொருவர் "விளக்கில்லாத கோயிலில் விளக்கேற்றியிருந்தால் அந்த ஒளி உதவும்'' என்கிறார். இவ்வாறு பல பதில்கள். "இவையெல்லாம் ஓரளவு உண்மையே,'' "ஆனால் இவற்றிற்கெல்லாம் மேலாக ஒன்று உள்ளது. அதுதான் நாம சங்கீர்த்தனம். வாய் திறந்து உயிர் பிரியும் போது யார் இறை நாமம் கூறுகிறார்களோ அவர்களுக்கு இந்த இருளைக்கடப்பது எளிது. இருளில் ஒளி விளக்கு ஏந்திச் செல்வது ஒரு உதவிதான். ஆனால் இருளைக் கடப்பது என்பது கடினம் அதை விடக் கடினமானது ஒருவர் இறக்கும் தருவாயில் இறை நாமம் கூறுவது இறப்பு எப்போது வரும் என்று யாருக்கும் தெரியாது. துரியோதனனின் அரச சபையில் அனைவரும் வீற்றிருக்கின்றனர். பீஷ்மர், துரோணர், விதுரர், முதலியவர்கள் அமர்ந்திருக்கின்றனர்.

துரியோதனன், "பெரியோர்களே! என் நலம் காக்கும் என் உடன். பிறந்தோர்களே! பாண்டவர்களுக்குப் எதிராகப் போர் தொடங்க நிச்சயித்துவிட்டேன். ஆனால் படை திரட்டுவதற்கு முன் கண்ணனைப் பார்த்து வரலாம் என்று எண்ணுகிறேன். உங்கள் விருப்பத்தைக் கேட்கவும் ஆவலாக உள்ளேன் பிதாமகரே! நீங்கள் உங்கள் விருப்பத்தினைக் கூறலாம் என்றான்.

பீஷ்மர் : துரியோதனா! மிக்க மகிழ்ச்சி! உன்னுடைய இந்தப் செயல் மற்ற செயல்களை விட என்னை சந்தோஷப் படுத்தியுள்ளது. மிக்க மகிழ்ச்சி! விரைவில் சென்று ஆசி பெற்று வா! என்றார்.

அடுத்து துரோணரைப் பார்த்தான் துரியோதனன்.

துரோணர் : "துரியோதனா! உன்னுடைய இச்செயல் அறிவுடைய செயல்! முதலில் கண்ணனிடம் ஆசி பெற்றுவா!" என்றார்.

கிருபர் முதலானோர்கள் அனைவரும் மகிழ்ச்சி தெரிவித்தனர், ஆனால் ......

சகுனி துரியோதனனின் பக்கத்தில் வீற்றிருப்பவன், தன்னிடம் கேட்கும் போது பதில் கூறலாம் என்று நிதானித்தான். அனைவரையும் பார்த்து அவர்கள் ஆமோதிப்பையும் மகிழ்ச்சியையும் ஏற்றுக் கொண்ட துரியோதனன் சகுனியிடம் திரும்புகிறான். மற்றவர்கள் மகிழ்ச்சியிலிருக்க சகுனி மட்டும் தீவிரமான சிந்தனையிலிருக்கிறான். துரியோதனன், "சகுனி மாமா! தங்கள் விருப்பத்தையும் சபையில் கூறலாமே!" என்றான்.

சகுனி பதிவேதும் கூறவில்லை. சபையைக் கலைத்துவிட்டு துரியோதனன் இறங்குகையில் சகுனி, "துரியோதனா! என்னைத் தனிமையில் சந்தித்திடு. உன்னிடம் முக்கியமான விஷயம் கூற வேண்டும்," என்றான். சபையில் கேட்ட கேள்விக்குப் பதில் அளிக்க மறுத்ததால் கோபமுற்றிருந்த துரியோதனன், "ஏன் தனிமையில் சந்திக்க வேண்டும். இங்கேயே கூறுங்கள்," என்றான். "உன் நலம் கருதித் தனிமையில் அழைக்கிறேன். விருப்பமிருந்தால் என் மாளிகைக்கு வா!" என்று நகர்ந்தான். குழப்பமும் கோபமும் கொண்ட துரியோதனன் நேராகத் தன் அரண்மனைக்கு சென்றான். "இருந்தாலும் என்ன தான் சகுதி மாமா சொல்கிறார் என்று பார்க்கலாமே?" என்று ஒரு எண்ணம் சரி. சகுனி மாமாவைப் பார்த்து வரலாம், என்று முடிவு செய்து சகுனியின் அரண்மனைக்குச் செல்கிறான் துரியோதனன், இவன் வரவை எதிர்பார்த்திருந்த சகுனி தகுந்த ஏற்பாடுகள் செய்து வைத்திருந்தான் எப்படி?

ஒரு உயர்ந்த ஆசனம் அமைத்து அதில் துரியோதனன் அமர ... தனக்கு ஒரு ஆசனம் அது துரியோதனனின் கால் உயரம் வரும் அளவு உயரத்தில் அமைத்துக் கொண்டான். வேலையாட்களைக் கூப்பிட்டு எவரும் நடுவில் இடையூறு செய்யக்கூடாது என்று கட்டளை பிறப்பித்தான். துரியோதனன் வந்தவுடன் அவனை வணங்கி வரவேற்று ஆசனத்தில் அமரச் செய்தான், சகுனி. எண்ணியபடியே துரியோதனன்

ஆசனங்களில் வேற்றுமையை எண்ணி, தனக்கு அதிக மதிப்பும் கௌரவமும் தரும் சகுனியின் மேல் பெருமதிப்பு கொண்டான். இருப்பினும் வெளியில் காட்டிக்கொள்ளாமல், "மாமா! தனிமையில் என்னை அழைத்ததின் நோக்கம்?", என்று கேள்வியைக் கண்களில் தேக்கி நாவினால் கேட்டான். சகுனி, "துரியோதனா! நீ போருக்குப் படை திரட்டும் முன் கண்ணனிடம் சென்று பார்த்து வரலாம்," என்ற உன் அபிப்பிராயத்தைக் கூறினாய். சபையில் அனைவரும் ஆமோதித்தனர். ஆனால் அவர்கள் எல்லோரும் உன் நலனில் அக்கறை உள்ளவர்கள் போல் நடிப்பவர்கள். அவர்கள் உண்மையில் அக்கறை உள்ளவர்கள் அல்ல. அல்லும் பகலும் உன் நலனையே கருதும் நான் அவர்கள் முன் சொல்லும் சொல் எடுபடாமல் போகும். எனவேதான் உன் நலனில் அக்கறை கொண்டுள்ள நான் உன்னை உன் நலம் கருதி தனிமையில் சந்திக்கச் சொன்னேன்," என்றான். "சொல்லுங்கள்! உங்கள் கூற்றை", என்றான் துரியோதனன். அவன் சினம் இன்னமும் அடங்கவில்லை என்பதனை அறிந்து.கொண்ட சகுனி முதலில் துரியோதனன் சினம் தணிக்க வார்த்தைகளை விடுகின்றான்.

"துரியோதனா! பாண்டவர்களுடன் போர் என்று நீ எடுத்த முடிவு உன்னதமானது. அதிலும் கிருஷ்ணனை முதலில் பார்க்க வேண்டும் என்ற எண்ணமும் அறிவுடைய செயல்," என்றான். "பின்னர் ஏன் தனிமையில் சந்திக்கச் சொன்னீர்?" என்றார் துரியோதனன். தான் செய்தவைகளைச் சரி என்கிறாரே! பின்னர் ஏன் சபையில் பதில் அளிக்கவில்லை என்ற சந்தேகம் வந்துவிட்டது.

துரியோதனின் முகத்திலிருந்து கோபம் மாறி சந்தேகம் வந்துவிட்டதை அறிந்து சகுனி மெதுவாக "துரியோதனா! நீ எடுத்த முடிவு சரியே! ஆனால் நான் குறித்துத்தரும் நாளில் நீ சென்று கண்ணனைப் பார்த்து ஆசி பெற்று வா!" என்றான்.

"நாள் குறிக்க ஜோதிடர்களா இல்லை!" என்று நகைத்தான் துரியோதனன்.

"இல்லை! துரியோதனா! நாட்கள் நல்லதாக அமைந்தால் அன்று செய்யும் காரியங்களும் சுபமாக முடியும். உண்மையாக உன் நலனில் அக்கறை கொண்டவர்களே உனக்கு நல்ல நாள் குறித்துத் தரமுடியும். சபையில் உள்ளவர்களை நம்பாதே!" என்று தயாராக வைத்திருந்த நாட்களைக் கூறினான்.

சிறிது மௌனமாக மனதிற்குள் கணக்கிட்ட துரியோதனன் கோபத்துடன் எழுந்தான்.

"சகுனி மாமா!, எவ்வளவு தைரியம் இருந்தால் என்னுடைய சந்திராஷ்டம தினங்களைத் தருவீர்கள்! உண்மையில் என்மேல் அக்கறை கொண்டவரா நீங்கள்?" என்றான்.

சகுனி, "துரியோதனா! சந்திராஷ்டமம் என்று தெரிந்துதான் குறித்துள்ளேன். சந்திராஷ்டமம் நன்மை தராது என்று பொருளல்ல. நீ கேட்கும் வரத்தில்தான் சாமர்த்தியம் வேண்டும். நீ இரண்டு வரங்களைக் கேள், அதனை நான் கூறுகின்றேன்," என்றார்.

"முதலில் சந்திராஷ்டம தினங்களில் இதற்கு முன் யாராவது காரியங்களைச் செய்து வெற்றி பெற்றார்களா என்பதனைத் தெரிந்து கொள்ள வேண்டும். தெரிந்தால் சொல்லுங்கள்" என்றான்.

சகுனி, "உண்டு! துரியோதனா! உண்டு. சிசுபாலன் குழந்தையாகப் பிறந்த சமயம், அனைவரையும் அழைத்து காண்பிக்கிறாள், சிசுபாலனின் தாய். உறவுக்காரனாக கண்ணனும் அங்கு வந்துள்ளான். அனைவரிடமும் சிசுபாலன் தாய், "என் குழந்தைக்கு நான்கு கைகள் உள்ளன பாருங்கள். இதில் பின்புறம் உள்ள இரண்டு கைகளும் இவனுடைய எதிரியைக் கண்டவுடன் மறைந்துவிடும். அப்படி மறைந்தால் அவன் கையால்தான் என் குழந்தைக்கு மரணம். எனவே நீங்கள் ஒவ்வொருவரும் குழந்தையைத் தூக்க வேண்டும்!" என்கிறாள். ஒவ்வொருவராக குழந்தையைத் தூக்குகிறார்கள். எதுவும் நடக்கவில்லை கண்ணனைப் பார்த்து "நீ குழந்தையைத் தூக்கு," என்கிறாள். "இல்லை அத்தை! வேறொருநாள் தூக்குகிறேன்," கண்ணன் "இன்று நீ தூக்கித்தான் தீர வேண்டும் இத்தனை பேர் தூக்கவில்லையா?" என்கிறாள் தாய்.

"அத்தை! இன்று இக்குழந்தைக்கு சந்திராஷ்டமம், எனவேதான் தூக்கவில்லை. வேறொரு சமயம், "என்று முடிப்பதற்குள்" இல்லை கண்ணா! என் திருப்திக்காக நீ தூக்க வேண்டும். நீ என்ன இக்குழந்தைக்கு எதிரியா என்ன?"

"அத்தை! விளைவுகளுக்கு நீங்களே பொறுப்பு," என்று கூறிக் குழந்தையைப் பின் பக்கமாகத் தூக்குகிறான். கண்ணன் தொட்டவுடனே ஜென்மாந்திரப் பகைமையால் இரண்டு கைகளாலும் குத்த வருகிறது குழந்தை. இதற்காகத் தான் கண்ணன்

பின்பக்கத்திலிருந்து தூக்கினான்'' என்றான் சகுனி. துரியோதனன், "சரி! என்ன நடந்தது? இதற்கும் சந்திராஷ்டமத்தில் நான் கண்ணனைப் பார்ப்பதற்கும் என்ன சம்பந்தம். பார்க்கப் போனால் சிசுபாலன் மரணம் கண்ணனால் அன்றோ!" என்றான். "இல்லை துரியோதனா! சிசுபாலன் மரணம் கண்ணனால் அல்ல, அவனுடைய தாயினால் தான்," என்றான்.

"என்ன? சிசுபாலனுக்கு அவன் தாயே எதிரியா? எப்படி?" துரியோதனன்.

"கண்ணன் தூக்கியவுடன் இரண்டு பின் பக்கக் கைகளும் மறைந்தன. உடனே அழத் தொடங்கிய சிசுபாலனின் தாய் கண்ணனால் தான் தன் குழந்தைக்கு மரணம் என்று உணர்ந்து கொண்டுவிட்டாள். குழந்தை மீது பாசம் கொண்ட தாய் என்ன செய்திருக்க வேண்டும்? கண்ணா நீ என் மகனை கொல்லக்கூடாது வரம்தா! என்று கேட்க வேண்டாமோ, கேட்கவில்லை." சகுனி.

"பின்னர் என்ன கேட்டாள்?" துரியோதனன்.

''கண்ணா! என் மகனின் நூறு பிழைகளைப் பொறுப்பாய்," என்று வரம் கேட்டாள்.

நூறுக்கு மேல் தன் மகன் பிழை செய்ய மாட்டான் என்று நினைத்தாளோ இல்லை, நூறுக்கு மேல் பிழை செய்த பின் அவன் தன் மகனில்லை என்று நினைத்தாளோ தெரியவில்லை. அவள் கேட்ட வரத்தினாலே அவள் குழந்தைக்கு மரணம். "ஆனால் நீ அவ்வாறு செய்யாதே! கண்ணனால் தான் உனக்கு மரணம், எனவே ஒரு வரத்தால் கண்ணன் ஆயுதம் தாங்கி போர் செய்யக்கூடாது என்றும் இரண்டாவது வரத்தால் அவனுடைய படை முழுவதும் உன்னிடம் வந்து விட வேண்டும் என்று கேள். தன் படையும் இன்றி, ஆயுதமும் இன்றி கண்ணனால் உன்னைக் கொல்ல முடியாது. இவ்வாறு இரு வரங்கள் பெற்று வா. வெற்றி உன் பக்கமே!" என்றான் சகுனி. சந்திராஷ்டமம் என்று தெரிந்தும் சகுனியின் தூண்டுதலினால் துரியோதனன் கண்ணனைப் பார்த்தான். விளைவு நீங்கள் அறிந்ததே.

சந்திராஷ்டம வகைகள் :

புத்தியை மழுங்கச் செய்யும், இச்சந்திராஷ்டம தினங்கள்! சந்திராஷ்டமத்தில் 6வகை சந்திராஷ்டமங்கள் உள்ளன. அவற்றில் மூன்றைப் பூக்களால் துன்பத்திலிருந்து எப்படி விலகலாம் என்பதையும் பார்ப்போம்.

1. சாதக சந்திராஷ்டமம்

மகா தோஷகாலம். மரணத் தறுவாயில் உணவு உண்ணும் போது விக்கல் ஏற்பட்டு, அதனால் உயிர் பிரியும். இதிலிருந்து தப்பிக்க வழி உள்ளது. கணபதியும் திருமாலும் இச் சந்திராஷ்டமத்திற்கு அதி தேவதைகள். இவர்களுக்குத் தொடர்ந்து இச் சந்திராஷ்டம காலங்களில் செம்பருத்தி அருகம் புல் இவைகளுடன் இடையில் மல்லிகை கட்டி மாலையாக அணிவித்து வர வேண்டும். மேலும் மேற்கூறியவாறு இத்தினங்களில் செயது, பெண் பார்க்கப் போனால், திருமணம் பெரு மணமாகத் திகழும். பதவி உயர்வு முறையோடு கிடைக்கும். பணம் கடன் வாங்கினால் வியாபாரம் விருத்தி ஆகி கடன் தொல்லை தீரும். இத்தகு பல காரியங்கள் சித்தியாகும்.

2. மைத்ர சந்திராஷ்டமம்

ஒரு காரியம் செய்வதாக வாக்குக் கொடுக்க வைத்து, செய்து முடிப்பதற்குள் உயிர் பிரிந்து விடும். மிகக்கடினமானது. இந்நிலையில் மைத்ர சந்திராஷ்டமம் உயிரைப் பிரிக்கும். அவ்வாறு ஆகாமல் கொடுத்த வாக்குகளைக் காப்பாற்றிட, இச்சந்திராஷ்டம காலங்களில் ஸ்ரீராமர் கோயிலுக்குத் துளசியும் சம்பங்கியும் சேர்த்துக் கட்டிய மாலை அணிவித்துக் கொண்டே வந்தால் பெறும் பலன் தெரியாது. அல்லது மரணம் வருகையில் உடல் உறுப்புகள் எந்த நிலையில் ஒத்துழைக்கும் என்பதும் தெரியாது. எனவே அப்போதைக்கு இப்போதே சொல்லிப் பழக வேண்டும். நாம சங்கீர்த்தனம் பழக வேண்டும். உடல் உறுப்புகள் வேலை செய்யவில்லையானாலும் மனம் இறைநாமம் கூறும். **எனவே அடக்கத்துடன் இறைநாமம் கூறி, இளமை முதல் பழக வேண்டும்.**

கௌதம மகரிஷியின் சீடர் எழுந்து, "குருவே! ஒருவர் அடக்கத்தை இழக்கக் காரணம் என்ன?" என்கிறார். அகஸ்தியர், "உத்தம கௌதமரின் சீடரே! ஒவ்வொருவர் வாழ்விலும் மாதந்தோறும் சந்திராஷ்டமம் என்று 2 1/4 நாட்கள் வரும். மதிகாரகன் சந்திரனை, நாம் மதிகெட்டுப் பல தொல்லைகளுக்கு உள்ளாவது இந்த நாட்களில் தான். சந்திராஷ்டமம் என்பதுஎன்ன? அவரவர் பிறந்த ராசியில் எட்டாம் இடத்தில் சந்திரன் பிரவேசிக்கும் போது பொறுமையின்மை, போகம், பொறாமை, உடல் வியாதி முதலியன நடக்கும். இதனால் பல துன்பங்கள் பல நாட்களுக்கு விளையும், இந்த 2 1/4 நாட்கள்

தான் சந்திராஷ்டமம் எனப்படுகிறது. இந்த 2 1/4 நாட்களையும் மிக ஜாக்கிரதையாக ஆண்டவன் நாமம் சொல்லிக் கழிக்க வேண்டும். இந்த நாட்களில் விபத்துகள் ஏற்படும் கூடியவரை பயணங்களைத் தவிர்க்க வேண்டும்".

"தவிர்க்க முடியாத பயணங்கள் வந்தால், இறைநாமம் கூறி இந்த சந்திராஷ்டமம் வரும் வாரத்தில் திங்கட்கிழமை அன்று கோமாதாவிற்கு உளுத்தம் பருப்பினால் ஆன வடை ஆகாரமாக கொடுத்து வேண்ட வேண்டும். அல்லது சந்திரசேகரசுவாமிக்கு திங்கட்கிழமை பாலாபிஷேகம் செய்ய வேண்டும்" என்கிறார் அகஸ்தியர்.

கௌதமர், "உத்தம சீடர்களே! மகாபாரதத்தில் துரியோதனன் பஞ்ச பாண்டவர்களால் தனக்கு ஆபத்து என்று எண்ணியிருந்தான். அவர்களுக்கு எதிராக படை திரட்ட எண்ணம் கொண்டு முதலில் கிருஷ்ணனைப் பார்க்கச் செல்ல எண்ணுகின்றான். சந்திராஷ்டம துன்பத்திலிருந்தும் விடுபடலாம்" என்கிறார்.

பிறகு மேலும் தொடர்ந்து, "சண்பகப் பூவினால் முருகனுக்கு இச்சந்திராஷ்டம காலத்தில் மாலை அணிவித்து அன்றைய தினம் மாப்பிள்ளை பார்க்கப் போனால் திருமணம் சிறப்பாக அமையும். புத்தாடைகள் வாங்கலாம். "பெருமன நினைவு இயற்திரப் பயிற்சி" அதாவது கம்ப்யூட்டர் கற்கசேரலாம். கணவன், தந்தை முதலியவர்களுக்குப் பாத பூஜை செய்ய மிகவும் உகந்த நேரமாகும்."

3. பரம மைத்ர சந்திராஷ்டமம் : இச்சந்திராஷ்டம காலத்தில் இறக்கும் தருவாயில் தன்னைத் தானே உத்தமன் என்று நினைக்கவைத்துத் தவறும் செய்ய வைத்து அதில் உயிர் பிரியும். இச்சந்திராஷ்டம தினங்களில் மருவு மல்லியும், தவனமும் கட்டிய மாலை , ஸ்ரீ அனந்த பத்மநாப சுவாமி அல்லது ஸ்ரீ ரங்கநாத சுவாமிக்குச் சாற்றி வணங்கினால், இச்சந்திராஷ்டம காலத் துன்பத்திலிருந்து விடுபடலாம்.

குறிப்பிட்ட பெண்ணும்/ஆணும் எந்த ஜென்மத்திலும் தம்பதியாய்த் தொடர :

பரம மைத்ர சந்திராஷ்டம தினங்களில் சிவபெருமானுக்கு வில்வத்தாலும் நாகலிங்க புஷ்பத்தாலும் அர்ச்சித்து வணங்கி, நிச்சயதார்த்தம் செய்தால் அத்திருமணம் உயர் மணமாக அமையும். ஜன்மஜன்மமாகத் திருமணம் தொடரும். ஒவ்வொரு

பிறவியிலும் கணவன் மனைவி மாற மாட்டார்கள். கூட்டு வியாபாரம், புதிய வியாபாரம் தொடங்க உத்தமமான நேரம்" என்கிறார் கௌதமர்.

பூக்களின் ஆற்றலைத் தெரிந்து கொள்ள வேண்டியதன் அவசியம்

அகஸ்தியர் "சீடர்களே! பூக்களைப் பற்றியும் அதனை உபயோகிக்கும் ஆற்றலைப் பற்றியும் ஆண்களாகிய உங்களிடம் கூறுவதன் நோக்கம் என்ன?" என்கிறார்.

ஒரு சீடர், "குருவே! தெரியாதவர்களுக்கு எடுத்துக் கூறவும் பிறக்கும் குழந்தைகளுக்குக் கூறவும் இதற்கும் மேலாக பெண்கள் அறிவுரை கேட்க வரும்போது அவர்களுக்குக் கூறவும்தான் என்று எண்ணுகிறோம்," என்றார்.

"நன்று சொன்னாய் சீடனே! முதலில் உங்கள் வாழ்க்கையில் இவைகளைப் பயன்படுத்திப் பாருங்கள். பிறகு இதனை மற்றவர்களுக்கு கூறுங்கள்," என்றார் அகஸ்தியர்.

பூக்களை வாங்கும் போது கடைப்பிடிக்க வேண்டிய நெறிகள்

அகஸ்தியரும், கௌதம மகரிஷியும் தனியாகச் சென்றனர். அகலிகை தேவியை வணங்கிய சீடர்கள் "பூக்களை வாங்க, என்னென்ன கடைபிடிக்க வேண்டும்?" என்று கேட்டனர்.

அகலிகை பத்தினி, "குழந்தைகளே! எப்போது புஷ்பம் வாங்கினாலும் அதனைத் தெய்வத்திற்குச் சூட்டியே பிறகு தலையில் சூட வேண்டும். புஷ்பம் ஒருமுறை பயன்படுத்தியதை மீண்டும் வாங்குதல் தவறு. இதற்காகத் தெரிந்த இடத்தில்தான் புஷ்பம் வாங்க வேண்டும். திருமணத்தில் உபயோகித்த பூ, பிரேதத்தின் மேல் போட்ட பூ முதலியவைகளைக் குறைந்த விலையில் விற்க முன் வருவார்கள். இவைகளை வாங்கி உபயோகித்தால் வயிற்று வலி வரும். சந்தி சாயும் போது வாங்கக் கூடாது.

சுமங்கலிகளிடம்தான் புஷ்பம் வாங்க வேண்டும் என்ற நெறி ஒரு காலத்தில் இருந்தது. அப்போது பொற்றிடையோகி என்பவர் பல காலம் தவமிருந்து ஆண்கள் நெற்றிக்கு இட்டு பூக்கள் விற்றால் அவர்களிடம் பூக்களை வாங்கலாம் என்று வரத்தினைப் பெற்றார் பிறகு புஷ்பம் நெற்றிக்கு இட்ட ஆண்களிடம் வாங்கலாம் என்ற வழக்கம் வந்தது.

ஆண்களிடம் புஷ்பம் வாங்கலாம். தவறில்லை ஆனால் அவர்கள் நெற்றிக்கு இட்டவர்களாக இருக்க வேண்டும். அந்த

3

புஷ்பத்தின் மூலம் பொற்றிடையோகி அருள்புரிவார். பெண்கள் பூவினை ஒற்றை மலராகத் தலையில் வைக்கக்கூடாது. திருமணத் தடங்கல்கள் அதிகம் வரும். கொண்டையில் குத்திச் செருகுதல் தவறு. நடுவண்ணம் வகிடு எடுத்து, வாரி, ஆள்காட்டி விரலாலும் கட்டை விரலாலும் முடியைத் தூக்கி, கட்டை விரலாலும் மோதிர விரலாலும் பூ வைக்க வேண்டும். இரண்டு பக்கமும் பூ தொங்கக் கூடாது. தலையில் புஷ்பம் செண்டாக இருக்க வேண்டும். காதின் நுனியிலிருந்து அடிவரை இடைப்பட்ட இடைவெளி தூரத்தில் தலையின் பின்பக்கம் புஷ்பம் வைக்க வேண்டும். மிக முக்கியமாகத் தெரிந்து கொள்ள வேண்டியது ஒன்றுள்ளது. எந்தக் காரணத்தை முன்னிட்டும் வாசனை அற்ற புஷ்பத்தை வாசனை உள்ள புஷ்பத்தோடு சேர்க்கக்கூடாது. இதனால் சாபம்தான் வருகிறது".

காட்டு மல்லி எனப்படும் புஷ்பத்தை வாசனையான மல்லி யுடன் சேர்த்து வைத்தால், 'கெட்ட கனவுகள் வரும்! காட்டு மிருகங்கள் கனவில் பயமுறுத்தும். காகிதப் பூக்கள் வைத்தால் மனதில் சஞ்சலமிருக்கும்.

பூவினைச் சூடும்போது, பார்க்க வேண்டிய திக்குகள்

பூவைத் தலையில் வைக்கும் திக்கும் முக்கியமாகத் தெரிந்திருக்க வேண்டும்.

கிழக்குப் பக்கமாகப் பார்த்து தலையில் பூ வைத்துச் சென்றால் போகின்ற இடத்தில் சண்டைகள் வரும். இது வாசனை அற்ற மலருடன் வாசனை மலரை சேர்த்து வைப்பதால் வருகிறது.

சிகப்பு நிறப்பூக்களைத் தெற்குப் பக்கமாகத் திரும்பி தலையில் வைத்துக் கொண்டால் கணவனுடைய சண்டை வரும். தடுக்க முடியாது. எனவே தெற்கு நோக்கிப் பூச்சூடுதலைத் தவிர்க்க வேண்டும்.

மேற்கு திசை பார்த்து பொன்னிறமான மலர்களைச் சூடக்கூடாது. பண இழப்பு வரும். கிரணங்கள் ஒடுங்கும் திசை. எனவே கிழக்குப் பார்த்து பொன்னிறமான மலர்களைச் சூடினால் குடும்பம் வளரும் பணம் வளரும்.

வடக்குப் பார்த்து முந்தின நாள் பூவைச் சூடுதல் தவறு. இதனால் கணவனுக்கு கடன் தொல்லை அதிகமாகும். இவ்வாறு கூறினாள்" அகலிகை தேவி.

அகஸ்திய முனிவரும் கௌதமரும் அச்சமயம் அங்கு வந்தனர். அகலிகை இருவரையும் வணங்கி ஆசிரமத்திற்குள் அழைத்துச் சென்றாள்.

எந்த நாட்கள் எந்த பூக்கள் கொண்டு அர்ச்சித்தல் வேண்டும்?

அகஸ்தியர், ''சீடர்களே! பூக்களை எப்படி வாங்க வேண்டும், வைத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டிருப்பீர்கள்,'' என்றார். சீடர்கள் சந்தோஷமாக ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். அகஸ்தியர், ''யார் யாரிடம் எதை எதைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்று உள்ளது அதன்படி தான் நடக்க வேண்டும்,'' என்றார்.

''குருவே! இறைவனை எந்தெந்த நாட்களில் என்னென்ன பூக்களால் அர்ச்சிக்க வேண்டும்?'' என்றார் ஒரு சீடர்.

அகஸ்தியர், ''ஒவ்வொரு நாளிலும் ஒரு விசேஷமுண்டு. **ஞாயிறு** -- தாமரைப் பூவினால் அலங்காரம் செய்ய வேண்டும். இதனால் இல்லத்தில் கடன் வராது. பெண்களுக்கு மகாபதிவிரதைத் தன்மையைக் கொடுக்கும்.

திங்கள் -- அல்லி மலராலும் மல்லிகை மலராலும் அம்பிகைக்கு அலங்கரிக்க வேண்டும். குடும்ப குறைகள் நீங்கி, ஒற்றுமை வளரும்.

செவ்வாய் -- அரளி, சம்பங்கி இவைகளினால் அலங்காரம் செய்ய வேண்டும். இதனால் கணவனுக்கு ஏற்படும் திடீர் வாகன விபத்திலிருந்து காப்பாற்றப்படுவார்கள்.

புதன் -- பவழ மல்லியினால் அலங்காரம் செய்ய வேண்டும். இதனால் குழந்தைகளுக்கு ஞாபக சக்தி வளரும்.

வியாழன் -- சாமந்தி பூவினால் அலங்கரிக்க வியாபாரம் பெருகி கஜானா நிறையும்.

வெள்ளி -- பிச்சிப்பூ (இராம பாணம் எனப் போற்றப்படும் புஷ்பம்) வெள்ளையும் சிவப்பும் கலந்த பிச்சிப் பூவினால் அலங்கரிக்க வேண்டும். குழந்தைகளின் குறை நீங்கி, மாங்கல்ய பலம் கிடைக்கும்.

சனி - மனோரஞ்சிதம், நீலோத்பவம் புஷ்பங்களால் அலங்கரிக்க, மன நிம்மதி கிடைக்கும்,'' என்கிறார்.

அகஸ்தியர் சிஷ்யர்களுடன், விடை பெற்று தன் ஆசிரமம் வருகிறார். வரும் வழியில், ''சகுனத்திற்கும் புஷ்பம் பயன்படுகிறது'' என்று கூறி.

பூக்களின் சகுனங்கள்

"சுவாமிக்குப் போடுவதற்காக எதிரில் ஒருவர் மாலை கொண்டுவந்தால் - அது காரிய சித்தி - சுப சகுனம்.

மனிதர்களுக்குப் போடுவதற்காக மாலை ஏந்தி ஒருவர் எதிர் வந்தால், பணத்தினால்தான் காரிய சித்தி என்பதனை அறியலாம். மகான்களுக்கு அணிவிக்க எதிரில் மாலையுடன் வந்தால், கடன் தொல்லை தீரும். பிறவிக்கடன், திருமணக்கடன் கூடத் தீர்ந்துவிடும்.

பிரேதத்திற்கு அணிவிக்க மாலையுடன் எதிர் வந்தால் - கெட்ட சகுனம். காரியத் தடங்கல். அன்று வெளியில் போகாதே," என்றார் அகஸ்தியர்.

இவ்வாறு கூறிக்கொண்டே வருகையில் ஒரு ஒத்தையடிப் பாதை வரவே அதில் ஒருவர்பின் ஒருவராக நடக்க ஆரம்பித்தனர். மிகவும் நறுமணமாக இருந்தது அந்த இடம். முதலில் சென்று கொண்டிருந்த அகஸ்திய முனிவர், ஓரிடத்தில் நின்று, "சீடர்களே! இங்கு இவ்வளவு மணத்தை தருவது மல்லிகைப்பூ. பாருங்கள்! தான் இருக்கும் இடத்தை எவ்வளவு வாசனையாக வைத்துக் கொண்டுள்ளது. இதுபோல் நீங்களும் உங்களை வாசனையுடன் வைத்துக் கொள்ள வேண்டும். யார் எந்த நேரத்தில் வந்து கேட்டாலும் உங்களால் முடிந்ததைக் கொடுங்கள். முக்கியமாக உங்கள் அன்பினைக் கொடுங்கள். அந்த அன்பு பல்கிப்பரவலாக உதவும். உங்களிடமும் கொடுக்கக் கொடுக்க அதிகமாக வளரும்.

மல்லிகை அற்புதமான மலர், அதைப்பற்றி ஒரு சம்பவம் கூறுகின்றேன்.

அற்புத மலர், மல்லிகை-கஜானா செழிக்க மல்லிகை

இந்திரப்பிரஸ்தத்தில் தர்மர் ராஜ சபையில் வீற்றிருக்கிறார். நவரத்தினங்கள் பதிக்கப்பட்டு கிரீடத்துடன் சிம்மம் என வீற்றிருக்கும் தர்மர் பக்கத்தில் அர்ச்சுனன், சகாதேவன், பீமன், நகுலன் அனைவரும் வீற்றிருக்கின்றனர். கிரகப்பிரவேசம் செய்யும் நாள். எல்லா நாட்டு அரசர்களும் வந்து அமர்ந்துள்ளனர் துரியோதனனும் வந்து அமர்ந்துள்ளான். யாகங்களும், யக்ஞங்களும் ஒருபுறம் நடைபெற, ஹோமங்களும் மறுபுறம் கோலாகலமாக நடைபெறுவதைக் கண்டு பொருமிக் கொண்டிருக்கிறான், துரியோதனன். அதேசமயம் பஞ்சபாண்டவர்களும், 'வேத வித்துகளைப் புகழ்ந்து

தானங்களைக் கொடுக்க வேண்டும். முறையோடு செய்ய ஆள்தேவை யாரை நியமிப்பது?' என்று யோசிக்கின்றனர். கண்ணன் ஓரமாக அமர்ந்திருந்தான். தருமர் கண்ணனிடமே அந்த வேலையைக் கொடுத்துவிடலாம் என்கிறார். அனைவரும் ஒப்புக்கொண்டாலும் கண்ணன் ஒப்பவில்லை, "நான் இதற்கெல்லாம் தகுதியானவன் இல்லை. தேவையில்லை", என்றான். ஒருவர்மாற்றி ஒருவரைச் சொல்ல அனைவரும் சரியல்ல, என்கிறான் கண்ணன். இவ்வளவு விஷயம் நடந்த பின்னும் சகாதேவன் வாய் திறவாமல் இருக்கிறான். உடனே கண்ணன், 'சகாதேவன் என்ன சொல்கிறான் பார்ப்போம்!' என்கிறான். சகாதேவன், 'நான் கூறினால் அனைவரும் என்னைத் திட்டுவீர்கள்' அதனால் நான் கூறவில்லை" என்றான்.

கண்ணன், "சகாதேவன் என்ன சொல்கிறானோ அதுவே நான் சொல்வதும்" என்கிறான். அனைவரும் சகாதேவனைப் பார்க்கின்றனர். சகாதேவன், "துரியோதனனே இதற்குத் தகுதியானவன்" என்று கூற அனைவரும் குதித்து எழுந்தனர். சகாதேவனை வெறுப்புடன் பார்த்தார்கள். கண்ணன் சிரித்துக் கொண்டே, "உண்மை. சகாதேவா! எதனால் நீ துரியோதனனைத் தேர்ந்தெடுத்தாய்?" என்றான். அதற்கு சகாதேவன், "காந்தாரிதேவி கணவனுக்கு கண்கள் இல்லை என்றவுடன் தானும் கண்களைக் கட்டிக் கொண்டு வாழ்ந்த மகாபதிவிரதை. கணவனால் பார்க்க முடியாததை தானும் பார்க்கக் கூடாது என்று விரதமாக இருந்தவள். அவள் நாடு பரந்த நாடாக உள்ளதால் பொக்கிஷம் நிறைய இருக்க வேண்டும் என்பதற்காக தன் கைகளினாலே மல்லிகைத் தோட்டம் பயிர்ப்பித்தாள். நந்தவனம் வைத்து அன்னை கோமதியே! "மலர் ஈந்த அன்னையே மலர் கொடு", என்று வேண்ட மலர் கொட்டும். அதனை எடுத்து கோமதி தாய்க்கு அர்ச்சித்து, துரியோதனா என்று அழைக்க, துரியோதனன், அங்கு பொக்கிஷப் பெட்டியை தயாராக வைத்திருப்பான். அதில் அந்த மல்லிகைப்பூவை வைத்து மூடி விடுவாள். காந்தாரிதேவி இது தினமும் நடந்தது. அந்த பொக்கிஷத்தை உபயோகப்படுத்துவதனால் துரியோதனனின் கையில் தனரேகையை நிஜப்படுத்தியது மல்லிகைப் பூ கஜானாவில் மல்லிகைப்பூ வைத்தால் பொக்கிஷம் பொங்க வளரும். அவர்கள் கையினால் எந்த பொக்கிஷத்தை எடுத்தாலும் பொக்கிஷம் குறையவே குறையாது. எனவே அந்த தனரேகை

நிஜப்படுத்தப்பட்டுள்ள துரியோதனன் எதை வாரிக்கொடுத்தாலும் பொக்கிஷம் குறையாது", என்றான் சகாதேவன். அனைவரும் இப்போது ஆமோதிக்கிறார்கள்.

தருமர் துரியோதனனைக் கூப்பிட்டு, தான தருமம் நீதான் செய்ய வேண்டும் என்று கூற, துரியோதனனுக்கு மிகவும் சந்தோஷம். கண்ணன், "சகுனி மாமா யார் யாருக்கு எவ்வளவு கொடுக்க வேண்டும் என்று நீங்கள் கூறுங்கள்," என்றான். இருவரும் சந்தோஷத்துடன் அள்ளி அள்ளிக் கொடுத்தனர். ஆனால் அவர்களுக்கே வியப்பூட்டும் வகையில் பொக்கிஷம் குறையவில்லை வளர்த்து கொண்டே இருந்தது, என்று கூறிய அகஸ்தியர், "எனவே வாசனை புஷ்பமாகிய மல்லிகையை பொக்கிஷத்தில் வைக்க அது பொக்கிஷத்தை குறையாமல் பார்த்துக் கொள்ளும்," என்கிறார்.

பணம் வைக்கும் முறை

"குருவே! பணம் வைக்கும் முறை கூறினீர்கள். அதனை உபயோகப்படுத்தும் முறையையும் கூற வேண்டும்", என்றார் ஒரு சீடர்.

பணத்தை எடுத்துச் செல்லும்போது மார்பின் இடது பக்கத்தில் இதயம் உள்ள இடத்தில்தான் வைக்க வேண்டும். உள் பையில் வைத்துக் கொள்ளலாம். இதயத்தினருகில் வயிற்றுப்பகுதிக்கு கீழிருந்தோ, பின் பக்கத்திலிருந்தோ லட்சுமி தேவியின் அம்சமாகிய பணத்தினை எடுக்கவும், வைக்கவும் கூடாது. **புஷ்பம் வாங்கும்போது பணத்தினை கைகளுக்குள் மூடி கொடுக்கக் கூடாது. கையை விரித்துத் தான் கொடுக்க வேண்டும்.**

தோல் (பெல்ட், பர்ஸ்) சம்பந்தப்பட்ட பொருள்களில் பணம் வைக்கக் கூடாது. ஏனென்றால் சங்குந்திரிணிகலை என்ற சக்தி இதிலிருந்து வருகிறது. இதனை சுவாசிக்கும் பெரியவர்கள், மகான்கள் ஆசி கூறும்போது தோஷம் வருகிறது. எனவே இவ்வாறு அணிந்தவர்களை விலக்கி, மகான்கள் மற்றவர்களுக்கு ஆசி கூறுகின்றனர். இதனால் சிலருக்கு மட்டும் ஆசி கூறுகிறார். சிலர் மட்டும் வேண்டியவர்கள் என்றெல்லாம் பெரியோர்களைப் பேசுவது தவறு. இதனால் பல சாபங்கள் வருகின்றன.

பிறகு அங்கிருந்து சிறிது தூரம் சென்றவுடன் ஸ்ரீராமர் கோயில் வந்தது. உள்ளே சென்று இறைவனை வணங்கி, பின்னர் கோயிலைச் சுத்தம் செய்து தண்ணீர் ஊற்றி

அலம்புகின்றனர். சிஷ்யர்கள் சாம்பிராணி புகை முதலியவைகளைப் போட்டு, பின்னர் கோயில் வாசலில் வந்து அமருகின்றனர். அப்போது அகஸ்தியர், "சீடர்களே! கோயிலை எப்போதும் சுத்தமாக வைத்திருக்க வேண்டும். தினமும் நீரினால் கழுவிட வேண்டும். இந்த கோயிலில் உள்ள ஸ்ரீராமர் பிறப்பதற்கு முன் நடந்த ஒரு சம்பவம் கூறுகின்றேன்!" கேளுங்கள்.

தசரத மகாராஜா மிகச்சிறப்பாக ஆட்சி நடத்தி வந்த போது ஒருநாள் நாரதர் தோன்றி தென்கோஸல வட கோஸல அரசர்களுக்குள் சம்பந்தம் நடந்தால் நல்ல பலன்கள் பல விளையும் என்று கூற அரச சபையில் உள்ளோர் முயற்சி எடுத்து, தென்கோசல நாட்டு அரசனின் மகள் கௌசல்யாவை தசரதருக்கு மணமுடிக்க பேசி முடிக்கின்றனர். அதே சமயம் இராவணன் எதிரில் தோன்றிய நாரதர், "தசரதனுக்கும் கௌசல்யாவிற்கும் திருமணம் நடக்கப்போகிறது" என்கிறார். இராவணன், "அதனால் என்ன? நடந்து விட்டுப் போகிறது" என்றான். "இல்லை! இராவணா! அவர்களுக்குப் பிறக்கப் போகும் குழந்தை உனக்கு எதிரி," என்றார் நாரதர். மிகப்பலமாகச் சிரித்த இராவணன், "என் எதிரே இனிமேல் திருமணமாகிப் பிறக்கப்போகும் குழந்தை எனக்கு எதிரியா?" என்று கேட்டான். ஆனால் உள்ளுக்குள் "நாரதர் கூறினால் உண்மை இருக்கும்," என்று எண்ணினார்.

நாரதர், "இராவணா! யார் யாரிடம் எந்த சக்தி உள்ளது என்று யார் அறிவார்! வருகிறேன்!" என்று கூறி மறைந்தார்.

திருமணத்தை மிகவும் பத்திரமாக நடத்த வேண்டும். ஏனென்றால் எதிரிகள் அப்போது அதிகம். இரு கோசல நாடுகளும் இணைந்தால் அனைத்து எதிரிகளையும் சமாளித்துவிடலாம். ஆனால் சேரவிடாமல் எதிரிகள் தடுப்பார்கள். இதை .யோசித்து கடல் நடுவில் மரத்தால் ஆன மாளிகை கட்டி அதில் திருமணம் நடத்த ஏற்பாடு ஆயிற்று.

இலங்கையில் இராவணன் யோசித்தான். இவர்களுக்குப் பிறக்கப் போகும் குழந்தை தானே நமக்கு எதிரி. இவர்கள் இருவருக்கும் திருமணமே நடக்காமல் செய்துவிட்டால் என்று எண்ணி ஆகாயத்தில் தேடி வருகிறான். எங்கே திருமணம் நடந்துவிடுமோ என்று வேகமாகத் தேடி வருகிறான் இராவணன்.

கடல் நடுவில் திருமணச் சடங்குகள் நடக்கின்றன. எதிர்ப்பு எதுவும் இன்றி திருமணம் முடிந்துவிட வேண்டும் என்று

இவர்கள் பயந்திருந்தனர். ஆகாயத்தில் வரும்போது கடல் நடுவில் ஒரு மண்டபம் புதிதாக உள்ளதே என்று இறங்கினான் இராவணன். தசரத திருமண மண்டபம் என்று தெரிந்தவுடன் அதனை உடைக்கின்றான். மாளிகை சிதற கௌசலையையும் தசரதனையும் தண்ணீருக்கடியில் அழைத்துச் சென்று நாரதர் முன்னின்று திருமணம் நடத்திவைக்கிறார். இவ்வளவு திருமணத் தடங்கல்கள் வந்த பின்னும் தசரதன் கௌசல்யா திருமணம் வெற்றிகரமாக முடிய காரணமாயிருந்தது புஷ்பம் வைக்கும் முறையே. அதனை கௌசலை நாரதர் மூலம் அறிந்திருந்தாள்.

திருமணத்திலே இவ்வளவு தடங்கல்களுக்குள் எப்படி திருமணம் வெற்றிகரமாக நடந்தது? கௌசல்யாதேவி புஷ்பம் வைத்துக்கொண்ட முறையில் தான் இருந்தது திருமண வெற்றி.

பூக்கள் சூடும் முறை

பூக்களைச்சூடும் போது காதின்மேல் நுனிக்கும், கீழ் பகுதிக்கும் இடையில் உள்ள இடைவெளியில் தான் தலையில் சூட வேண்டும். உச்சந்தலையிலோ, கழுத்துப் பகுதியில் இறக்கியோ, ஜடையில் வால் பகுதியிலோ சூடக்கூடாது. பூவைத் தொங்கவிடுதலும் தவறு. இவ்வாறு தொங்கவிட்டு பெரியவர்களை நமஸ்கரித்தால், பூ உச்சந்தலையில் சரியும். இதனால் பெரியவர்கள் ஆசி கிடைக்காது. இந்த முறையில் வாசனை புஷ்பம் மட்டிலும் இறைவனுக்கு வைத்து பூஜித்து, பின்னர் கௌசல்யா தலையில் வைத்துக் கொண்டதால் மாபெரும் திருமணத் தடங்கல்கள் நீங்கப் பெற்றாள்! அதுபோல் வாழ்க்கையில் வரும் துன்பங்களும் நீங்கப் பெற்றாள்.

திருமணம் நடந்துவிட்டது என்பதனை சமுத்திர ராஜன் மூலம் அறிந்த இராவணன் அவர்களை இலங்கை அழைத்துச் சென்று கொல்ல எண்ணினான். மண்டோதரி தேவியோ "இவர்களுக்குப் பிறக்கப் போகும் குழந்தை தானே உங்களுக்கு எதிரி! இவர்களை ஏன் கொல்ல வேண்டும்? திருமணமானவர்கள் சந்தோஷமாக இருக்கட்டும் கொல்லுதல் தவறு," என்று கணவனைச் சாந்தப்படுத்தி, சீருடன் வழி அனுப்பி வைக்கிறாள்.

பல காலம் ஆட்சி செய்கின்றான் தசரதன். ஆனால் அவனுக்கு புத்திர பாக்கியம் இல்லை. வசிஷ்டர், "தசரதா! வடகோசல, தென்கோசல சம்பந்தத்தால் உனக்கு ஒரு பெருந் துன்பம் ஏற்படும். ஆனால் இறைவன் அருளால் நீங்கும்," என்று கூறுகிறார். "தாங்கள் கூறியபடி செய்கின்றேன், காப்பாற்றுங்கள்" என்று கூறினான் தசரதன்.

ஸ்ரீ ராமரின் சகோதரி — சாந்த்யை !

"சில வருடங்கள் கழித்து தசரதனுக்கும் கௌசல்யா தேவிக்கும் ஒரு பெண் குழந்தை பிறந்தது," என்றார் அகஸ்தியர் மிகவும் ஆச்சரியப்பட்ட சிஷ்யர்களைப் பார்த்து மேலும், "அக்குழந்தை இளம்பிள்ளை வாதம் வந்தது போல் கை கால்கள் சூம்பி இருந்தது. மிகவும் வருத்தமுற்றார்கள் தசரத தம்பதியினர். வசிஷ்ட குலகுரு, "கவலை வேண்டாம் இறைவனுக்கு பூஜைகள், பெரிய மகான்களின் ஆசி இவைகளால் சரியாகிவிடும்" என்று கூறி, "அரண்மனை ஜோசியர்களை அழைத்து ஜாதகத்தை விளக்கமாகப் பார்க்கச் சொல்," என்கிறார். தசரதனும் அவ்வாறே செய்ய, பலமாக ஆலோசித்து, ஜாதகத்தை அலசிப் பார்த்த ஜோசியர்களில் ஒருவர், "இந்தப் பெண்ணை வேற்று நாட்டு அரசருக்குச் சுவீகாரம் கொடுத்துவிட்டால் பெண்ணின் ஊனம் சரியாகிவிடும்," என்றார். தசரதன் வசிஷ்டரிடம் அனுமதி பெற்று, அங்க தேசத்து மன்னன் ரோமபாதனிடம் சுவீகாரம் கொடுத்தான். அம்மன்னனும் மனமகிழ்ந்து குழந்தையை ஏற்றுக் கொண்டான். அக்குழந்தைக்கு சாந்த்யை என்று பெயரிட்டு ஆசிகூறி அனுப்பினார் வசிஷ்டர்.

ஊனம் நீங்க

சில வருடம் கழித்து வசிஷ்டர் அங்கதேசம் சென்றபோது சாந்த்யை அவரை வணங்கி உபசரித்தாள். "குருவே! என்னுடைய ஊனம் நீங்கவும் நான் உலகிற்கு பயன்படவும் தங்கள் ஆசிவேண்டும்," என்று வேண்டினாள். வசிஷ்டர், "குழந்தாய்! சாந்த்யை! புஷ்பங்களை முறையாகப் பயன்படுத்துவதின் மூலம் எல்லா துன்பங்களையும் நீக்கலாம் உனக்கிருக்கும் துன்பம் நீங்க, பஞ்சமி திதியில் பங்கஜாக்ஷி, பங்கஜவல்லி என்ற நாமமுடைய தேவிக்கு விரதம் இருந்து பூவால் ஆடை சாற்ற வேண்டும். எந்தெந்த பூக்கள் தெரியுமா? கவனமாகக் கேள்! நீலினி மந்திரம் சொல்லி நீலோத்பல மலரையும் சூலினி மந்திரம் சொல்லி முல்லை மலரையும் கபாலினி மந்திரம் சொல்லி மல்லியையும் பறித்து மாலையாகக் கட்டி பங்கஜாக்ஷி / பங்கஜவல்லி என்ற நாமம் கொண்ட தேவிக்கு அணிவித்து வணங்கி வந்தால் எத்தகைய ஊனமாக இருந்தாலும் நீங்கும். அத்துடன் முக்கியமாக வளர்பிறை சாதக, மைத்ர, பரமைத்ர, சந்திராஷ்டம தினங்களில் இவ்வாறு செய்தால் அவர்கள் உலகிற்கு நன் சேவைகள் மூலம் பயன்படுவார்கள்," என்று கூறி ஆசீர்வதித்தார்.

இத்தனையையும் கவனமாகக் கேட்ட சாந்த்யை முறைப்படி விரதமிருந்து செய்துவந்தாள். நாட்கள் செல்ல செல்ல ஊனத்தில் குணம் தெரிந்தது. அதனால் ஏற்பட்ட சந்தோஷம், வசிஷ்ட குருவின் ஆசி இவைகளால் சிறிது காலத்தில் ஊனம் நீங்கி முழுகுணம் அடைந்தாள்.

ஸ்ரீ ராமர் ஜெனனத்தில் சாந்த்யையின் அற்புதப் பங்கு

விஷ்ணுவை நோக்கி விரதமிருந்தாள். பல நாட்கள் சென்றன. விரதம் தொடர்ந்தது. ஒருநாள் அசரீரி கேட்டது "உன் விரதம் ஏற்றோம், உன் கணவனால் உன் எண்ணம் ஈடேறும்," என்றது. சாந்த்யையின் எண்ணம் எதுவாக இருந்தது? தனக்குப்பின் தன் தந்தைக்கு குழந்தை இல்லை. தசரத மகாராஜாவிற்கு ஈடாக தனக்கு ஒரு உத்தம சகோதரன் வேண்டும் என்பதே சாந்த்யையின் எண்ணம். ரோமபாதன் தன் வளர்ப்புமகள் சாந்த்யைக்கு மணமுடிக்க எண்ணி, இருடிகளில் சிறந்தவரும் இருடிகளாலேயே வணங்கப் படுபவரும் வேதம் முழுவதும் அறிந்தவருமான ரிஷ்யசிருங்கர் என்ற முனிவரை சாந்த்யைக்கு மண முடிக்கிறார். இருடிகள் என்றால் முனிவர்கள் என்று பொருள். ஒரு அரசர் ஏன் முனிவருக்கு திருமணம் செய்து வைக்க வேண்டும்?

அரசகுலப் பெண்ணாக இருந்தாலும் முதலில் ஊனமுள்ளவளாக இருந்தாள். பின்னர் பெரியோர் ஆசியாலும், புஷ்ப மகிமையாலும் கோமதி அம்மன் அருளாசியிலும் ஊனம் நீங்கப்பெற்று பல உன்னத காரியங்களைச் செய்யும் அறிவும் பெற்று விளங்கினாள், சாந்த்யை. இறைவனிடத்தில் மாறா அன்பும், தெய்வத்தொண்டும் செய்து வரும் சாந்த்யைக்கு ஏற்ற வரனாக ரிஷ்யசிருங்கரை ரோமபாதன் தேர்ந்தெடுத்தான். பெண்ணின் குணமும் தொண்டும் திருமணத்திற்கு பின்னும் நடைபெற வேண்டும். மேலும் உத்தம பெண்ணாக உலகம் போற்றும் பெண்ணாக சாந்த்யை வரவேண்டும் என்ற ஆர்வத்தால் ரிஷ்யசிருங்கரைத் தேர்ந்தெடுத்தார்.

அப்போது தசரத மகாராஜாவும் தன் சம்மதத்தைத் தெரிவிக்க, திருமணம் நடந்தது.

எப்போதும் மாப்பிள்ளை, மாமனாருக்கு கடன்பட்டவரே! பலகாலம் வளர்த்து, ஆளாக்கி, திருமணமும் செய்வித்து பெண்ணை ஒப்படைத்து விடுவதால் மாப்பிள்ளை மாமனாருக்குக் கடன்பட்டவரே. அக்கடனை எப்படித் தீர்ப்பது என்று ரிஷ்யசிருங்கர் நினைக்க, அதுசமயம் சாந்த்யை,

"தன்னுடைய விருப்பத்தை கூறுகிறாள். அடியேனுக்குப் பின் தசரத மகாராஜாவிற்கு குழந்தையில்லை. எனவே அவர் சார்பில் புத்ர காமேஷ்டியாகம் செய்தால் தசரதருக்குப்பின் நாட்டை ஆள ஆண் குழந்தை பிறக்கும். அனால் உங்களின் கடனும் தீரும்," என்கிறாள் சாந்த்யை.

அதுவே சரியென்று ரிஷ்யசிருங்கர் தசரத மகாராஜாவிடம் சென்று அவர் அனுமதியின் பேரில் புத்ரகாமேஷ்டியாகம் செய்கின்றார். பெண்கள் சொல்வதை ஏற்கக்கூடாது என்பதில்லை. அதையோசித்து நல்லவிஷயமாக இருந்தால் செயல்படுவது அறிவுடையவர் செயல் என்பதை ரிஷ்யசிருங்கர் நிரூபித்தார். அந்த யாகத்திற்குத் தலைவராக அமர்ந்தவர் ரிஷ்யசிருங்கர். பூரண ஆகுதிகள் கொடுத்தும், தேவதூதன் பூரணகலசத்தில் பாயசம் வைத்து அதனைத் தசரதனிடம் கொடுக்க அதன் மூலம் ஸ்ரீராமர், லட்சுமணன், பரதன், சத்ருக்னன் பிறந்தனர்.

ஏக பத்தினி விரதனாகவும், தந்தை சொல்லை மந்திரமாக ஏற்றவனாகவும், சத்யம் தவறாதவனாகவும், இன்றளவும் என்றென்றும் தன் திருநாமம் போற்றப்படும் அளவிற்கு ஸ்ரீராமபிரானைச் சகோதரனாகப் பெற்று உலகம் போற்றும் வண்ணம் சாதனை புரிந்தாள் சாந்த்யை.

ஸ்ரீராமர் சகோதரர்கள் பிறந்தவுடன் தேவர்கள் சாந்த்யை, ரிஷ்யசிருங்கர் மீது மலர்கள் பொழிந்து வாழ்த்துகின்றனர்.

பூ வாங்கும் போதும், சூடும்போதும் சொல்ல வேண்டிய மந்திரம்

பிறகு அன்றுமுதல் இன்றுவரை யார் மலரைப் பறித்தாலும், கொடுத்தாலும் கடையில் கட்டிய பூவை வாங்கினாலும்

"ஓம் ஸ்ரீ சாந்த்யை ஸ்ரீருஷியசிங்கர் பத்தினியை நம:" என்று சொல்லித்தான் வாங்க வேண்டும், பூவைத் தலையிலும் சூட வேண்டும். இவ்வாறு செய்பவர்கள் சுமங்கலியாக வாழ்ந்து சிறப்படைவர். இவ்வாறு அகஸ்தியர் கூறினார்.

ஸ்ரீ சனீஸ்வர பகவானை வேண்ட உகந்த தினம் ஞாயிறு!!!

"குருவே! சனிக்கிழமை பெருமாளுக்கு உரித்தது என்கிறீர்களே! சனீஸ்வர பகவானுக்கும் உரித்தநாளன்றோ, சனிக்கிழமை"? என்கிறார் ஒரு சிஷ்யர்.

அகஸ்தியர், "நல்ல கேள்வி சிஷ்யா! உண்மையில் பெரும்பாலோர் கலியுகத்தில் சனிக்கிழமை அன்று நவக்கிரகம்

சுற்றி வந்து சனிபகவானை வழிபடுவார்கள். ஆனால் நவகிரகங்களை உண்மையில் தினமும் வழிபட வேண்டும். முக்கியமாக சனீஸ்வர பகவானை வலம் வர வேண்டுமானால் மிக உகந்த தினம் ஞாயிறுதான்," என்றார் மற்றொரு சிஷ்யர். "காரணம் யாதோ, குருவே?" என்று கேட்க அகஸ்தியர் கூறுகிறார்.

"சீடர்களே! ஒரு சமயம் சூரிய பகவான் மேருமலையில் கடுந்தவம் செய்து வந்தார். அவருடைய மகனான சனீஸ்வர பகவான் தந்தைக்கு வேண்டிய உதவிகளைச் செய்து அவருடனே தங்கியிருந்து தானும் தவம் செய்தார். சூரிய பகவான் மனம் மகிழ்ந்து, "உனக்கு வேண்டும் வரம் கேள்!" என்று கூறினார். அன்று சனிக்கிழமை. "இறைவா, சூரிய பகவானே! உங்களுடைய தினமாகிய ஞாயிறு அன்று என்னை வழிபடுவோருக்கு எனக்கு பிரீதி செய்பவருக்கு எல்லா நன்மைகளும் விளைய வேண்டும்," என்று சனிபகவான் வேண்டினார். சூரிய பகவானும் மகிழ்ந்து வரத்தை அளித்தார். இது ரகசியமாக வைக்கப்பட்டிருந்தது. இன்று உங்களுக்குத் தெரிவிக்க வேண்டிய நேரம். எனவே தெரிந்து கொண்டீர்கள். எல்லாம் இறைவன் செயல்," என்றார். அகஸ்திய பெருமான் மேலும் தொடர்ந்து, "எனவே சீடர்களே! முக்கியமாக ஞாயிறு அன்று தெய்வத்திருப்பணியில் ஈடுபட்டே ஆக வேண்டும். பலதோஷங்களிலிருந்து ஞாயிறு அன்று செய்யும் தெய்வத் தொண்டு, காப்பாற்றும்," என்கிறார்.

ஆலயங்களில் வாய் திறந்து பாடலாமா?

ஒரு சீடர் எழுந்து குருவை வணங்கி, "குருவே! ஒரு சந்தேகம், விளக்கம் கூற வேண்டுகிறேன். இறைவழிபாடு என்ற பெயரில் உரத்த குரலில் பாடுவது சரியா? இல்லை மனதிற்குள் இறைவனை ஸ்தோத்திரம் செய்வது சரியா?" என்கிறார்.

அகஸ்தியர் மற்ற சீடர்களைப் பார்த்து, "நீங்கள் உங்களுக்குத் தெரிந்த பதிலைக் கூறுங்கள்", என்கிறார். எல்லா சீடர்களும் மௌனமாக இருந்தனர். அனைவரும் தீவிரமாக யோசிக்கின்றனர். ஒரு சீடர், "குருவே தவறிருந்தால் மன்னிக்க வேண்டும். உரத்தகுரலில் இறைவழிபாடு செய்தால் அவனின் கவனம் பாதிக்குமேல் குரலிலும்", பலர் கேட்பரே! தவறுதல் கூடாதே" என்ற நினைவிலும் போய்விடும். இறைவன் மேல் மனம் முழுமையாகச் செல்லாது. வேறுவழியில் இறை வழிபாடு செய்யும் மற்றவருக்கு இடையூறாகவும் இருக்கும். எனவே உரத்த

குரலில் பாடி இறை வழிபாடு செய்வது அவ்வளவு நல்லதல்ல," என்று கூறுகிறார். மற்றவர்களை ஒவ்வொருவராகப் பார்க்கிறார் அகஸ்தியர். ஒவ்வொருவரும் தலைகுனிந்து யோசித்த வண்ணம் போல் அமர்ந்திருந்தனர்.

தனக்குள் சிரித்துக் கொண்டே அகஸ்தியர், "சீடர்களே! இப்போது சொன்ன பதிலை எடுத்துக்கொள்வோம். ஒருவன் இறைவன் மேல் மனதை லயிக்க வைத்துவிட்டால் மற்றவர்களைப் பற்றியோ, மற்றவர்கள் எழுப்பும் ஒலி பற்றியோ கவலைப்படமாட்டான். அவனுக்குக் கேட்கவும் கேட்காது. எனவே ஒருநிலைப்பட்ட மனலயம் இறைவன் மேல் இல்லாதவர்களுக்கே மற்றவனுடைய குரல் கேட்கும். இரண்டாவதாக உரத்த குரலில் பாடுபவன் இறைவனுக்காகப் பாடினால் மற்றவர்களைப் பற்றிய கவலை அவனுக்குத் தேவையில்லை. எனவே மற்றவர்கள் என்ன நினைப்பார்கள் என்ற எண்ணமே! தவறு இதற்குமேல் சாதாரணமாக வேறு எண்ணங்களுடன் கோயிலுக்கு வந்தவர்களும் இவனுடைய பாடலினால் ஒருசில வினாடிகளாவது இறைவன்பால் மனதைச் செலுத்தியிருப்பார்கள். அது பாடுபவனுக்கு வெற்றி. தான் மட்டும் இறைவனை வணங்குதல் போதாது! வேறு ஒருவரையாவது இறைவனை வணங்கவும் வைக்க வேண்டும். எனவே **வாய் திறந்து பாடுவீர்! வாழவழி காணுவீர்!"** என்றார்.

அகஸ்தியர் பிறகு தொடர்ந்து, "இதனால்தான் எந்தயுகத்திலும் நாம சங்கீர்த்தனமே உயர்ந்தது, இறைவன் அடியார்கள் குறைந்தது இரண்டு பேராவது ஒன்றாகக் கூடி இறைவன் நாமம் பாடுவதே நாம சங்கீர்த்தனம்," என்று கூறினார்.

நம் உறவினர்கள் யார்?

விஸ்வாமித்திரர், "ஸ்ரீராமா! உன்னுடைய வாழ்க்கைப் பயணம் நெடுந்தூரம் கொண்டது. எனவே நீ உண்மையில் உன் உறவினர்களாக யார் யாரைக் கொள்ள வேண்டும் தெரியுமா?" என்கிறார். ஸ்ரீராமர், "குருவே! குருவின் ஆசியுடன் தெரிந்து கொள்கிறேன்," என்கிறார்.

விஸ்வாமித்திரர், "ரகுகுல திலகா! அறிவே உனக்கு தந்தை -- திருப்தியே தாய் -- சத்யம் உன் சகோதரன் -- பொறுமை உன் சகோதரி. இவர்களை உன்னுடைய உண்மை உறவினர்களாகக் கொண்டால் வெற்றி நிச்சயம்" என்கிறார்.

"அப்படியே ஏற்கின்றேன் குருவே! தாங்கள் தயவு செய்து எந்தெந்த நேரத்தில் எந்தெந்த காரியங்களுக்குப் புறப்பட வேண்டும்? அதற்குப் பரிகாரம் என்னென்ன என்பதனைக் கூற வேண்டும்," என்கிறார் ஸ்ரீராமர்.

காரிய ஸித்திக்கு/வெற்றிக்கு உரிய நட்சத்திரங்களும் பூக்களும்

விஸ்வாமித்திரர், "தசரத மைந்தா! நேர்ம் காலம் செய்வதை நான்கு மனிதர்கள் செய்ய மாட்டார்கள்," என்று வாக்கியம் உண்டு. வெளியூர் பயணங்கள் மட்டுமல்லாமல் அன்றாட வாழ்க்கையிலும் காரிய சித்திக்கு பூக்கள் வழி தருகின்றன. அவற்றில் உனக்குத் தேவையான சிலவற்றைக் கூறுகிறேன்.

1. அசுவினி நட்சத்திரம் :

பெரியோர்களைக்காண உத்தமமான நாள். அன்றைய தினம் சூரிய காந்திப்பூவால் சூரிய பகவானுக்கு மாலை சாற்றி வணங்கிச் சென்றால் காரியம் சித்தியாகும். தன்னைவிட மேலானவர்களைக் காண்பதற்கும் இதுவே வழி. அலுவலக மேலாளர், மாமனார் இவர்களைக் காணவும் இவ்வழி சிறந்தது.

இந்த அசுவினி நட்சத்திரத்தில் வியாபார ஒப்பந்தங்கள், கூட்டு வியாபாரம் முதலியவற்றிற்காக பிரயாணம் செய்வது நல்லது. முழுப்பலன் கிடைக்க அசுவினி நட்சத்திரத்தில் சூரியகாந்திப் பூவால் சூரியபகவானுடைய வலது தோளிலும் இடது தோளிலும் வைத்து வணங்கிச் சென்றால் காரிய சித்தியாகும்.

2. மிருகசீரிஷ நட்சத்திரம் :

ஸ்ரீராமா! இந்த நட்சத்திரம் மாடு, குதிரை, வாகனங்கள் வாங்க உகந்த நட்சத்திரம். இந்த நட்சத்திரம் சிவனுக்கு முருங்கைப் பூவால் அர்ச்சித்து அந்தபூவில் சிறிதை தன்னுடன் எடுத்துச் சென்று வாகனங்களை வாங்கினால் விருத்தியாகும். நன்மை பயக்கும்.

3. அஸ்தம் :

பெண் பார்க்கவும், தங்கம் வாங்கவும் இந்த நட்சத்திரம் உகந்தது. தாழம்பூவினால், கூர்நுனியில் மேலே பார்த்திருக்கும்படி, பாவாடை சாற்றி அம்பாளை வணங்கித் வாங்கச் சென்றால் மேலும் மேலும் தங்கம் சேரும்.

கிருஷ்ணர் சத்யபாமாவைப் பார்ப்பதற்கு முன் கோமதித் தாய்க்கு, தாழம்பூவினால், நுனிமேலே பார்த்திருக்கும் படி

பாவாடைச் சாற்றி வணங்கிச் சென்றார். சொர்ணாம்பிகையான சத்யபாமாவை மணந்தார்.

இதை தாழம்பூ பாவாடையை நுனிகீழே பார்க்கும் படிவைத்து அம்மனுக்கு பாவாடை சாற்றினால் என்றுமே ஆடைக்குப் பஞ்சமேற்படாது.

பூஜை, ஆலய வழிபாடு, மகான்களைத் தரிசனம் செய்யும்போது பட்டாடை உடுத்தவே கூடாது! ஏன்?

ஸ்ரீராமா! கூட்டுப்புழுவைக் கொன்று அதிலிருந்து நெய்யப்படும் பட்டு யாருமே உடுத்தக் கூடாது? ஏனென்றால் பட்டுப் புழுக்களைக் கொன்று நெய்யப்பட்ட பட்டாடை புண்ணிய காரியங்கள் செய்தால் அதனால் வரும் புண்ணியம் அந்த புழுக்களுக்குப் போகும். அவை ஆன்மிக வளர்ச்சி அடைந்து மனிதக் குழந்தைகளாகப் பிறக்கின்றனர். ஆனால் புண்ய காரியங்கள் செய்தவருக்கு ஒன்றும் பயனில்லாமல் போய்விடும். இதனால்தான் பல தெய்வீக காரியங்களும் பூஜைகளும் செய்தும் பயனில்லாமல் அமைந்துவிடுகிறது.

மகான்களைக் காணச் செல்லும் போது பட்டாடை உடுத்திப்போவது பெருந்தவறாகும். சிலர் இவ்வாறு செய்துவிட்டுப் பல கோயில்கள் சென்றேன். ஆனால் பலனில்லை. பார்க்காத மகான் இல்லை போகாத கோயில் இல்லை, என்று பேசுவர். கோயில்கள் கணக்கும். மகான்கள் எண்ணிக்கையும் எண்ணிவிட முடியுமா? இருந்தாலும் முறையாகக் காரியங்களும் வழிபாடுகளும் செய்யவில்லையென்றால் பலனிருக்குமா? அதுவும் பட்டாடை உடுத்தி மகான்கள் தரிசனம் செய்தால் அதனால் புண்ணியம் தராமல் சாபம்தான் வருகிறது. எனவே ஸ்ரீராமா! நீ பருத்திப்பட்டு உடுத்தி வழிபாடு செய் என்கிறார்.

அனுஷம் "கௌசல்ய புத்ரா! அனுஷ நட்சத்திரத்தில் இரும்பு முதலான பொருள்கள் வாங்க, பிரயாணம் செய்வது நல்லது. தளவாடங்கள், கப்பல் கட்டுதல் இயந்திரங்கள் (அச்சு இயந்திரம்) முதலியன வாங்கச் செல்லுகையில் இந்த அனுஷ நட்சத்திரத்தில் மாம்பூவினால் சிவனுக்கு அர்ச்சனை செய்து அப்பூவைத் தன்னுடன் எடுத்துச் சென்று மேற்கூறியவைகளை வாங்கினால் பலவிதமாகப் பெருகி பயன்படும்.

திருவோணம் : "அயோத்தி ராமா! திருவோண நட்சத்திரம் நீ மறக்கலாகாது. பவளமல்லி பூவினால் பெருமாளுக்குத்

திருவோணத்தில் மாலைகட்டி வெளிநாட்டுப் பயணம், கடல் கடந்து பயணம் செய்தால் வெற்றியுடன் திரும்பலாம். நிலம் வாங்குவதற்கும் மேற்கூறியவை பொருந்தும்".

அவிட்டம் : "சூரிய குல ராமா! அவிட்ட நட்சத்திரம் அன்று முருகப் பெருமானுக்கு அகத்திப் பூவால் அர்ச்சித்து வெளியில் சென்றால் கனவு, விபத்து முதலியவைகளிலிருந்து தப்பிக்கலாம். ஸ்ரீராமா! உன்னிடம் பலர் வந்து தங்கள் கவலைகளைத் தீர்க்கச் சொல்லி கேட்பர். எனவே உன்னுடைய வாழ்க்கையில் நீ இவைகளையெல்லாம் அவசியம் தெரிந்து வைத்திருக்க வேண்டும். பயண வெற்றிக்கும், குழந்தை பாக்கியம் கிடைக்கவும் தூதுவளை பூவை முறையாக தட்சிணாமூர்த்திக்கு அர்ச்சித்து வணங்க வேண்டும்."

பூசம் : "அறுவை சிகிச்சை, வியாதிகளுக்கு மருத்துவரை அணுக, பூச நட்சத்திரம் மிக உகந்தது. இதில், சாமந்திப் பூவினால் மாலை கட்டி முறையாக ஸ்ரீரங்கநாதருக்கோ அல்லது ஸ்ரீ அனந்த பத்மநாப சுவாமிக்கோ அணிவித்து வணங்கினால் ஒவ்வொரு நோயாளியும் எத்தகைய வியாதியாக இருந்தாலும் அதிலிருந்து குணமாகிவிடுவர்".

புனர்பூசம் : "மருத்துவர்கள் ஒவ்வொருவரும் புனர்பூச நட்சத்திரத்தில் சாமந்திப் பூவால் மாலை கட்டி ஸ்ரீரங்கநாதருக்கோ அல்லது அனந்தபத்மநாப சுவாமிக்கோ அணிவித்து வணங்கினால் அவர்களிடம் வரும் நோயாளிகள் குணமடைவர். முக்கியமாக அறுவை சிகிச்சைகள் வெற்றியைத்தரும்."

> "படிப்பறிவு குழந்தைகளுக்கு அதிகமாக வளரவும் அலுவலகத் தேர்வுகளில் வெற்றி பெறவும், புனர்பூச நட்சத்திரத்தில் ஹயக்ரீவப் பெருமானுக்கு சாமந்திப் பூவினால் திண்டு மாலைகட்டி அணிவித்து வணங்க வேண்டும்".

நட்சத்திரங்களில் உத்தமமான மூலம் நட்சத்தித்தன்று எந்த நல்ல காரியங்களையும் செய்யலாம். செம்பருத்திப் பூவினாலும் அருகம் புல்லாலும் மாலை கட்டி விநாயகருக்குச் சாற்றி வணங்கினால் மூல நட்சத்திரத்தில் செய்யும் பயணம், காரியங்கள் வெற்றியைத் தரும்.

"ஸ்ரீராமா, பூரம், பூரட்டாதி, திருவாதிரை, பரணி நட்சத்திரங்கள் பிரயாணத்திற்கு உகந்தது அல்ல. அதுவும் தனியாகப் பிரயாணம் செய்தால் திரும்புவது மிகக் கடினம்" என்று விஸ்வாமித்திரர் கூறுகிறார்.

மேலும் "இராமச்சந்திரா! எல்லோரும் ஒருவிதத்தில் ஒவ்வொருவருக்குக் கடன் பட்டவரே. இவ்வூறான கடன்களோடு அல்லாமல், குடும்பத்திற்காகவும் இறை தொண்டிற்காகவும கடன் பட்டிருந்தால், முறையோடு ஸ்நானம் செய்து காயத்ரீ ஜபித்து குல தேவதை பூஜை செய்து **வேப்பம் பூவினை** சக்தி பீஜமந்திரம் ஜபித்து இடது கையில் வைத்து வலது கையினால் மூடிக் கொண்டு ஓடும் நீரிலோ, கும்பாபிஷேகம் செய்த கோயில் தீர்த்தத்திலோ விட்டால் கடன் ஓடிப்போகும் என்கிறார். (இதைத்தான் "மூர்த்தி தீர்த்தம் தலம் முறையோடு தரிசிப்பவருக்கு சற்குருவும் வாய்ப்பர் பராபரமே!" என்கிறார் தாயுமானவர்.)

அகஸ்த்ய பெருமான், "சீடர்களே! கடன் என்பது குதிரைமேல் பணம்கட்டி தோல்வி கண்டதாலோ, சூதாட்டங்களிலும் கேளிக்கைகளினாலுமோ ஏற்பட்டிருந்தால் அக் கடன்கள் தீராது. ஒவ்வொருவரும் அவரவர் நடந்து கொள்வதை வைத்துத்தான் அடுத்த பிறவியில் தன் நிலையை நிர்ணயித்துக் கொள்கிறார்கள். ஒருவனை ஓட ஓட விரட்டி வேலை வாங்கிவிட்டு உரிய கூலிதராவிட்டால் அடுத்த பிறவியில் குதிரைமேல் பணத்தைக்கட்டி ஏமாறுவான். ஆனால் கோயிலுக்குத் தேர் செய்து தானமாக ஒருவன் கொடுத்திருந்தால், அடுத்த பிறவியில் குதிரைமேல் பணம்கட்டி வெகுவாக பணம் சேர்ப்பான். ஆனால் ஒருமுறைதான்," என்கிறார்.

பிறகு தொடர்ந்து அகஸ்தியர் கூறுகிறார்..........

விஸ்வாமித்திரர் ஸ்ரீராமபிரானிடம், "ஸ்ரீராமா! எதிரிகள் இல்லாதவரே கிடையாது. எதிரி என்றால் எதிர்த்து நின்று அழிப்பவர் என்று பொருள் கொள்ளக் கூடாது. உடன் இருப்பவர்களும் கூட அப்போதைக்கப்போது ஏற்படும் பொறாமை, எதிர்ப்பார்ப்பும் மாறும். வெளியில் தெரியாது. எனவே, ஸ்ரீராமா! எந்த நிலையிலும் எதிரிகளிடம் வலுச் சண்டைக்கும் போகாதே. ஆனால் அவர்களே உன்னை எதிர்த்து வந்தால் தயங்காதே. தாக்கு. இதில் வெற்றிபெற **மகிழம்பூ** உதவுகிறது. ஒவ்வொரு மகிழம் பூவிற்கும் சுதர்சன மந்திரம் சொல்லித் தொடுத்து ஸ்ரீ நரசிம் மருக்குப் மாலையாக அணிவித்தால் எதிரிகளினால் தொல்லை இருக்காது. பில்லி, சூனியம், ஏவல் முதலியவற்றால் வரும் துன்பங்களும் நீங்கும். இவைகளினால் வரும் துன்பங்களைவிட 'போதும் என்ற மனம்' இல்லாததால், பொறாமையினால் ஏற்படும் துன்பங்கள் மிகவும் அதிகம்.

அதிலிருந்தும் மகிழம்பூவினை மேற் கூறியவாறு நரசிம்மருக்கு அணிவிப்பதால் நீங்குகிறது.

"ஸ்ரீராமா! துன்பங்களில் மிகக் கொடிய துன்பம் பசித்துன்பம், இத்துன்பத்தைத் துடைப்பது மிக அருமையான தொண்டு. எனவேதான் அன்னதானம் மற்ற தானங்களைவிடச் சிறந்து விளங்குகிறது. இந்த பசித் துன்பத்தை தீர்க்க பூக்கள் வழி சொல்கின்றன. சித்திரை, வைகாசி மாதங்களில் **செண்பகப் பூவை முருகனுக்குச் சாற்றினால் பசித்துன்பம் உடனே நீங்கும். உணவிற்கு என்றும் குறையிருக்காது."**

"ஸ்ரீராமா! இருப்பதற்கு இடம் இல்லாமல் அவதிப்படுவோர் செவ்வாய் தோறும் **அரளிப்** பூவை ஆறுமுகனுக்குச் சாற்றி வணங்கினால் சொந்தத்தில் இடம் பெறுவார்கள்".

"ஸ்ரீராமா! உடுக்க உடைக்கு என்ன செய்வது? **வெண் தாமரை** மலரால் சிவபெருமானை அலங்கரித்து அன்னதானம் செய்ய வேண்டும். இவ்வாறு செய்தால் அணியும் ஆடைக்கு தடையேதும் இன்றி பலவித ஆடைகள் கிடைக்கும் இருப்பினும் முக்கியமாக இதில் செய்ய வேண்டியது ஒன்று உள்ளது ஸ்ரீராமா! பழைய ஆடைகளையும் ஒரு சில புது ஆடைகளையும் வஸ்திர தானமாக வெளியில் கொடுக்க வேண்டும்".

"திருமணத் தடங்கல்கள் பல காரணங்களுக்காக ஆவதுண்டு. வேறு திருமணங்களுக்கு இவர்கள் தடங்கல் கூறியிருந்தால் இவர்கள் திருமணம் தடங்கலாகும். இதுபோல் பல காரணங்களால் திருமணம் தடைபடுவதுண்டு. இதிலிருந்து நிவர்த்தி பெற **அசோகப்** பூவினைப் பறித்து அரசும் வேம்பும் பின்னி வளர்ந்துள்ள விருட்சத்திற்கு அடியில் உள்ள விநாயகருக்கு மாலையாக அணிவித்து அர்ச்சித்து வணங்க வேண்டும். அனைத்து திருமணத் தடங்கல்களும் நீங்கும்.

ஸ்ரீராமா! காதல் (உடலழகால் ஏற்பட்டதல்ல) தோல்வி, கணவன் மனைவி பிரிவு இவைகளிலிருந்து விடுபடவும் இத்துன்பங்கள் தாக்காமலிருக்கவும் வழி உள்ளது.

வாசனை இல்லாத பூவினை வாசனை உள்ள பூவுடன் சேர்த்து இறைவனுக்கு அணிவித்தாலும், தான் அணிந்து கொண்டாலும் இத்தகு துன்பங்கள் வந்து சேரும் எனவே இதனைத் தவிர்க்க வேண்டும்" என்று முடிக்கிறார் விஸ்வாமித்திரர். (**மல்லிகையும் கனகாம்பரமும்** அழகுக்காக

சேர்ப்பார்கள் மேலும் **காட்டுமல்லி, காகிதப்பூ** முதலியவைகளையும் அழகுக்காகத் தலையில் வைப்பார்கள். இவ்வாறு நறுமணமற்ற பூக்களைத் தனியாகவோ, அல்லது மணமுள்ள மலருடன் வைத்தாலும் அன்புக்குரியவர்களிடம் பிரிவு ஏற்படும் இறைவனுக்கு சூட்டினாலும் பல பிரிவுகளை வாழ்க்கையில் சந்திக்க நேரிடும்.

சரஸ்வதி பூஜைகளுக்குரிய பூக்கள்

அகஸ்தியர் சீடர்களிடம், "ஏதாவது ஐயப்பாடுயிருந்தால் கேளுங்கள்," என்கிறார் சீடர்கள் யோசிக்கின்றனர். ஒருவர் "குருவே! பூக்களினால் இத்தனை பலன்கள் உள்ளன என்பது மிகவும் வியப்புண்டாக்குகிறது. எனவே குருவே! இறைவனுக்கு நாம் பண்டிகைகளாகப் பல பூஜைகள செய்கிறோம். அவற்றிற்கு புஷ்பங்களை எப்படி பயன்படுத்த வேண்டும் என்று உள்ளதோ? தாங்கள் கூற வேண்டும்," என்கிறார்.

அகஸ்தியர், "உண்டு சீடா! உண்டு. சரஸ்வதி பூஜை அன்று என்ன செய்ய வேண்டும் என்று சொல்கிறேன். படிக்கும் உங்களுக்குத் தேவையான ஒன்று இதுவே. சரஸ்வதி பூஜை என்பது நவராத்திரியில் ஒன்பதாவது நாளாக வருகிறது. கொலுவில் வைத்திருக்கும் பொம்மைகளை எந்தக் காரணத்தைக் கொண்டும் நகர்த்தக்கூடாது. சரஸ்வதி பொம்மையையும் நகர்த்தக்கூடாது.

சந்தனக்கல்லை நன்றாகக்கழுவி அதன்மேல் செவ்வந்திப் பூவினை. முழுவதுமாக பரப்ப வேண்டும். அதன்மேல் மூன்று விளக்குகளை வைக்க வேண்டும். ஒவ்வொன்றிலும் ஐந்துமுக விளக்குகளாக இருக்க வேண்டும். குறைந்தது 20 முழங்களாவது பிச்சிப்பூ வாங்கி வந்து ஒவ்வொரு தீபத்தின் தண்டிலும் அடியில் இரண்டு சுற்று சுற்றியபின் வலப்பக்கமாகச் சுற்றிமேல் வரை எடுத்துச்சென்று பின்னர் இடப்பக்கமாகச் சுற்றி இறக்கி மூன்று பிரிவாக பூவை விட வேண்டும். பிறகு செவ்வந்திபூவினால் இந்த இரண்டு வரிசைகளுக்கும் நடுவில் சுற்றி அலங்கரிக்க வேண்டும். இப்பொழுது இரண்டு பக்கங்களிலும் ராமபாணம் என்கிற பிச்சிப்பூவும் நடுவில் செவந்திப்பூவும் இருக்கும் பதினைந்து முகங்களும் ஏற்றி அருகில் ஏழு அகல் தீபங்களை சுற்றி இருப்பது போல் வைத்து முகப்பில் இடைவெளி விட்டுவிட வேண்டும். பசும்பாலின் கறந்த சூடு ஆறுவதற்குள் அதனைக் காய்ச்சி, சர்க்கரை சேர்த்து பருகும் பக்குவத்தில் நைவேத்தியம்

வைக்க வேண்டும். முக்கியமாக நினைவில் கொள்ள வேண்டியது என்னவென்றால் ஒவ்வொரு புத்தகத்திற்குள்ளும் ஒரு பூவினை வைத்துத்தான் பூஜையில் வைக்க வேண்டும். இவ்வாறு சரஸ்வதி பூஜை செய்தால் அருள் பூரணமாகக் கிடைக்கும் படிப்பில் தோல்வி வராது" என்றார்.

சிஷ்யர், "குருவே! இப்படி ஒவ்வொரு பூஜையும் செய்யும் விதம் உள்ளதல்லவா, அதனை எப்படி நாங்கள் அறிவது?" எனக் கேட்க,

குரு, "உண்மைதான், சரியான நேரம் வரும்போது இறைவன் அருளால் நீங்கள் அறிவீர்கள்," என்றார்.

தலையில் பூச்சூடும் முறை

சிறிது நேரம் கழித்து அகஸ்தியர் சீடர்களைப் பார்த்து, "சீடர்களே! பூக்களைப் பற்றித் தெரிந்தால் மட்டும் போதாதுத் தலையில் எப்படி வைத்துக் கொள்ள வேண்டும் தெரிந்திருக்க வேண்டும்.

ரோஜாப்பூவினை எப்போதும் ஒற்றை ரோஜவாக வைக்கக்கூடாது. இவ்வாறு வைத்துச் சென்றால் அபாண்டப் பழிசுமத்தப்படுவர். எனவே ஒன்றிற்கு மேற்பட்ட ரோஜாப் பூக்களையே அணிதல் வேண்டும்.

ரோஜக்களில் பல நிறங்கள் உள்ளன. அவற்றில் வெள்ளை நிறரோஜா அணிதலைத்தவிர்க்க வேண்டும் ஏனென்றால் இந்த வெள்ளை நிற ரோஜாவினால் வலுச்சண்டை தான் வளரும்.

மஞ்சள் ரோஜா மிகச்சக்தி வாய்ந்தது. இதில் மாசீர் தனுவசி என்னும் தேவதை வாழ்கிறது. இந்த தேவதையை சித்தி செய்துதான் பிரகஸ்பதி தேவகுரு ஆனார். இதனை விரும்பி வைப்பவர்கள் (இரண்டு அல்லது அதற்கு அதிகமாக) நினைத்த காரியத்தைச் சாதிப்பர். ஆனால் அக்காரியங்கள் பிறருக்கு தீமை விளைவிப்பதாக இருந்தால் படுதோல்வி அடைவர்.

சிகப்பு ரோஜா ஒன்பதை சேர்த்துக்கட்டி, அதை ஆரமாகத்தலையில் வைக்க வேண்டும். இவ்வாறு வைத்துக்கொண்டால் குழந்தை, அதனுடைய தாய் தந்தையரை ஏமாற்றாது. குழந்தைகளால் ஏமாற்றப்படும் தாய் தந்தையரின் துன்பம் மிகக் கொடியது மருமகளும் மாமனார் மாமியாரை ஏமாற்ற மாட்டாள்.

அடுத்து பூக்களைத் தொடுக்கும் போது இடைவெளி அதிகம் விட்டு தொடுப்பது தவறு. இவ்வாறு விற்கும் பூக்களை

வாங்குவதும் தவறு. ஏனென்றால் இதனால் கணவன் மனைவி இடையே இடைவெளி, மனஸ்தாபங்கள் அதிகமாகிறது.

செம்பவள ரோஜவானால், ஐந்து பூக்களாகச் சேர்த்து வைத்துத்தான் அணியவேண்டும். இதனால் செல்லுமிடங்களில் போட்டியிருக்காது.

பூவினைத் தலையில் பின்னவிட்டு, பின்னலின் நடுவில் முதுகுப் புறத்தில்படும் மாதிரி வைக்கக்கூடாது, பூவினை உள்ளே செருகி சுற்றித்தான் வைக்கவேண்டும் (பந்துபோல.) இவ்வாறு வைப்பவர்கள் புகுந்து வீட்டில் நல்லபெண் என்று பெயரெடுப்பார்கள். ஒரு பக்கமாக பூவினை வைக்கக்கூடாது. தொங்கும்படியும் பூவை வைக்கக்கூடாது. வைத்தால் பேசாததைப் பேசியதாகப் பழிச் சொல் வரும்.

பூக்களே அம்புகளாய்! அஸ்திரங்களாய்!!

அகஸ்தியர் மேலும், "சீடர்களே! பூக்களைக்கொண்டு பல அம்புகளைத் தொடுத்த கதைகளும் உண்டு," என்று விவரிக்கின்றார்.

சிஷ்யர்கள், "குருவே! அம்புகளாகப் பூக்களா! எப்படி குருவே அம்புகளாகப் பூக்களைப் பயன்படுத்த முடியும்? பூக்கள் மென்மையானவை ஆயிற்றே? அந்த விஷயத்தைக் கூறவேண்டும். குருவே!" என்கின்றனர் மிக்க ஆவலோடு.

அகஸ்தியர், "சீடர்களே! கூறுகிறேன் கேளுங்கள்," என்று தொடர்கிறார். 14 ஆண்டுகள் வனத்தில் திரிந்து இராவணனை அழித்து சீதையை மீட்டு அயோத்தி மன்னனாக தசரத குமாரன் ஸ்ரீராமன் அரசாண்டான். கர்ப்பமாக உள்ள நிலையில் கணவனைப் பிரிவது பெரும் துன்பம். அந்த நிலையில் இருந்தாள் சீதை. இலக்குவனை அழைத்து ஸ்ரீராமர் சீதையை வால்மீகி ஆசிரமத்தில் விட்டுவா என்கிறார். வால்மீகி ஆசிரமத்தில் பிறந்தவர்களே லவனும் குசனும். லவனும் குசனும் அரசர் மகன்களானாலும் இருப்பதோ காடு. எனவே காட்டில் கிடைக்கும் குச்சி அம்புகளை வைத்து வித்தை சொல்லித் தருகிறார். மரக்குச்சி அம்புகளில் நுனியில் இரும்பு கவசங்களைப்பதித்து பயிற்சி தருகிறார் வால்மீகி.

லவகுசனின் எதிர்காலத்தினைக் கணக்கிட்டு, தான் அவ்விடம் விட்டு விலகி இருப்பது நல்லது என்று எண்ணி ஒருநாள், "லவகுச! நான் தனித்து தவம் செய்வதற்காகச் செல்கின்றேன். நான் வரும்வரை உங்களுடைய தாய்

சீதாதேவியைப் பத்திரமாகப் பார்த்துக் கொள்ளுங்கள்," என்று கூறிச் சித்திரகூடம் செல்கிறார்.

ஒரு நாள்......... தாய்க்குச் செய்ய வேண்டிய பணிவிடைகளைச் செய்துவிட்டு குழந்தைகள் விளையாடிக் கொண்டிருக்கையில் ஒரு வெள்ளைக் குதிரை ராஜ அலங்காரங்களுடன் வந்தது.

ஸ்ரீராமர் அசுவமேதயாகம் செய்ய எண்ணி குருவிடம் விண்ணப்பிக்க, குரு அதற்குரிய லட்சணங்கள் பொருந்திய குதிரையைத் தேர்ந்தெடுத்து ஹோமங்களுக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து மிகச்சிறப்பாக அசுவமேத யாகம் செய்கின்றார். அசுவமேத யாகம் செய்தால் குதிரையை திக்விஜயம் செய்வித்து அத்துடன் படையை அனுப்பி யார் எதிர்த்தாலும் அவர்களை வென்று குதிரையைத் திரும்பப் பெற்று புறப்பட்ட இடம் வர வேண்டும் என்பது சட்டம். அவ்வாறு கிளம்பிய குதிரை பல இடங்களுக்குச் செல்கிறது. குதிரையின் பின்னே சத்ருக்னன் தலைமை தாங்கிப் படை நடத்திச் செல்கிறான். சத்ருக்னன் என்ற பெயருக்கு துன்பம் அழிப்பவன் என்று பொருள். பல இடங்களிலும் திரிந்துவிட்டுத் தெற்கு நோக்கி வருகிறது குதிரை. அவ்வாறு வரும்போது தான் ஒருநாள் அந்த குதிரை லவகுசர்களுக்கு எதிரில் வருகிறது.

குதிரையைக்கண்ட குழந்தைகள் அதனிடம் நெருங்கி அதனைப் பிடிக்கப் பார்க்கின்றனர். அப்போது குசன் "அண்ணா! இதன் நெற்றியில் ஏதோ எழுதியுள்ளதே!" என்றான். இருவரும் நெருங்கிச் சென்று படிக்கின்றனர்.

"ஸ்ரீராமர் அசுவமேத யாகம் செய்து முடிவில் இக்குதிரையை திக்விஜயம் செய்ய அனுப்பியுள்ளார். இதனை யார் பிடித்தாலும் அவர்களுடன் போர் செய்து குதிரையை மீட்பேன். போர் செய்ய விரும்பாதவர்கள் குதிரையை வணங்கி அனுப்பிவிடவும்," என்று எழுதியிருந்தது. சுற்றும் முற்றும் பார்க்கின்றனர். ய்ாரையும் காணவில்லை. குசன் "அண்ணா! குதிரை நன்றாக இருக்கிறது நாம் பிடித்துக்கட்டிவிட்டால் என்ன?" என்கிறான்.

லவன் "தம்பி! இந்த குதிரையைப் பிடித்துக் கட்டினால் பின்னால் வரும் படையுடன் போர் செய்ய வேண்டும் இருந்தாலும் குதிரையை வணங்கி வழி அனுப்புதல் என்பது நம் தோல்வியை ஒப்புக் கொள்வதாகும். எனவே பிடித்துக்கட்டி

விடுவோம் வா! நம் குருவின் அஸ்திரக்கல்வி நமக்குத் துணை உள்ளது," என்றான்.

உடனே இருவரும் அந்தக் குதிரையைப் பிடித்து மரத்தில் கட்டிவிட்டனர். குதிரையைத் தேடிவந்த சத்ருக்னன் படை குதிரை ஒரு மரத்தில் கட்டப்பட்டுள்ளதைப் பார்த்து நின்றுவிடுகிறார்கள். இரண்டு குழந்தைகள் பக்கத்தில் உட்கார்ந்திருப்பதைக் கண்டு அவர்களிடம் வருகின்றனர்.

தங்களை நோக்கிவரும் படை வீரர்களைக் கண்டும் காணாதது போல் அமர்ந்திருந்தனர் லவகுசர்கள்.

சுற்று முற்றும் பார்த்து வேறுயாரும் இல்லாததால் இக் குழந்தைகளிடம் வந்த படை வீரர்களில் ஒருவன், "குழந்தைகளே! இந்தக் குதிரையைக் கட்டியது யார்? நீங்களா? என்றான்.

லவன், "ஆமாம் நாங்கள்தான் கட்டினோம்," என்கிறான். உடனே படை வீரர்கள் சத்ருக்னனிடம் சென்று தெரிவிக்கிறார்கள். சத்ருக்னன் குழந்தைகளைப் பார்த்தவுடன் அவர்கள் அழகில் மயங்கி "குழந்தைகளே! விளையாட்டாக எண்ணி இக்குதிரையைக் கட்டி விட்டீர்கள் இது போர்க் குதிரை. இதனைக் கட்டினால் என்னுடன் சண்டையிட்டு என்னை வெல்ல வேண்டும். நீங்களோ அறியாமல் செய்துவிட்டீர்கள் எனவே குதிரையை வணங்கி அவிழ்த்து விட்டுவிடுங்கள்," என்கிறான்.

இதைக்கேட்ட குழந்தைகள், "நாங்கள் குதிரையின் நெற்றியில் உள்ள வாசகத்தைப் படித்த பின்னர்தான் பிடித்துக்கட்டினோம். முடிந்தால் போர் செய்து வென்று பின் குதிரையை மீட்டுச் செல்லுங்கள்," என்கின்றனர்.

சத்ருக்னன் எவ்வளவு கூறியும் குழந்தைகள் லவகுசன் கேட்காததால், சத்ருக்னன் போருக்குத் தயாராகினான். முதலில் சாதாரணமாகப் போர் செய்த சத்ருக்னன், குழந்தைகளின் போர்த்திறனைக் கண்டு உக்கிரகமாகவே போர் செய்கிறான். எதிரில் உள்ளவர்கள் குழந்தைகள் என்ற எண்ணமே இல்லாமல் போர் செய்கின்றான். தன்னுடைய திறமை அனைத்தையும் பயன்படுத்தி அம்பினை எய்தாலும் அவ்வம்புகள் லவகுசர்களிடம் போகாமல் அவர்கள் எய்த அம்புகளினால் நடுவிலேயே நிறுத்தப்பட்டன.

இச்சமயத்தில் லவன் ஒரு மரக்குச்சி அம்பினை எடுத்து மலைவேப்பம் பூவினை குரு சொல்லிக் கொடுத்தபடி ரீங்கார பீஜம் ஜபித்து அம்பின் மேல் வைத்து எய்தான். அந்த அம்பு

வேகமாகச் சென்று மகாபாச அஸ்திரமாக மாறியது. எங்கும் இருள் சூழ்ந்து மேகங்கள் சூழ்ந்து மின்னல்கள் மின்ன பாணம் சத்ருக்னனை வீழ்த்திவிட்டது.

தலைவன் விழுந்தவுடன் படைகள் சிதறி ஓடின! விஷயம் அறிந்த பரதன் அடங்காத கோபத்துடன் லட்சுமணனிடம் நடந்த விஷயம் சொல்ல, இருவரும் படையெடுத்து வருகின்றனர்.

ஸ்ரீராமரைப் போன்று 1000 ராமர் சேர்ந்து நின்று போர் செய்வது போல் லவ, குசர்களைக் கண்ட லட்சுமணர் மயங்கி, குழந்தைகளிடம் பேசினாலும் குழந்தைகளோ, "முடிந்தால் போர் செய்து குதிரையை மீட்டுப்போ. இல்லையேல் சரணடைந்து கேள். குதிரையை அனுப்புகின்றோம்," என்கின்றனர்.

உடனே பல மடங்கு கோபம் கொண்ட லட்சுமணர் தன் பலம் முழுவதையும் பிரயோகித்துக் கடுங்கோபத்துடன் போர் செய்கின்றான். எவ்விதத்திலும் லட்சுமணரால் லவகுசர்களை நெருங்க முடியவில்லை. முடிவில் கொடூராஸ்திரம் ஏவினார், லட்சுமணர். அந்த அஸ்திரம் எதிரிகளைக் கொடூரமாகத் தாக்கி அழித்துவிடும். அஸ்திரம் ஏவியவுடன் அது அவர்களை என்ன செய்துவிடுமோ! குழந்தைகளாயிற்றே என்று கவலைப்பட்டான், லட்சுமணன். ஆனால் குழந்தைகளோ அம்பினை பார்க்கின்றனர். உடனே லவன் குசனைப் பார்க்க, குசன் இலுப்பை பூவை கால பைரவ மந்திரபீஜத்தை ஜபித்து அம்பின் மேல் வைத்து ஏவினார்கள். அந்த பாணம் பாசுபாதாஸ்திரமாக மாறி லட்சுமணரை வீழ்த்திவிட்டது.

கை கொட்டிச் சிரிக்கும் குழந்தைகள் மேல் அபார கோபம் கொண்ட பரதன் உடனே தன்னிடமிருந்த கடைசியில் பயன்படுத்தும் "நிலைகளா" அஸ்திரத்தை ஏவினான். எதிரியை கூர் கூராகப் பிளக்கும் அஸ்திரம் அது. லவன் பார்த்தான் செந்தாழம் பூவினை வைத்து சக்திபீஜம் ஜபித்து அம்பின் மீது வைத்து ஏவினான். அது ஜசிகாஸ்திரமாக மாறி வேகமாகச் சென்று பரதன் ஏவிய அம்பினை தடுத்து மேலும் சென்று பரதனை வீழ்த்திவிட்டது.

ஸ்ரீராமர் இதனைக் கேள்வியுற்றதும்" இரு குழந்தைகள் இத்தனை பேரை வீழ்த்திவிட்டனரா! இதில் ஏதோ விசேஷமுள்ளது" என்று வியந்த வண்ணம் படையுடன் வருகிறார்.

ஒவ்வொரு நாளும் நடந்தவைகளை சீதாதேவியிடம் கூறிய குழந்தைகள், "தாயே! இன்றும் ஜயித்துவிட்டோம்

நாளை மீண்டும் வருவதாகச் சென்றுள்ளது படை. தங்களைக் காக்க வேண்டியது; எங்கள் கடமை. நாளை வரும் அரசனையும் தோற்கடிக்க ஆசி கூறுங்கள்," என்கின்றனர். அரசர்களின் பெயர் குழந்தைகளுக்குத் தெரியவில்லை. உடனே தாய் சீதா தேவி, "யார் வந்தாலும் வெற்றி உங்களுக்கே," என்று ஆசி கூறி, தான் செய்து வரும் பூஜையினை தொடர்ந்தாள். பன்னீர்ப்பூவினால் ஈசனுக்கு அர்ச்சனை செய்வதே சீதையின் பூஜை. இந்த பன்னீர்ப் பூ என்ன செய்யும்?

மறுநாள் போருக்கு வந்த ஸ்ரீராமர் குழந்தைகளைக் கண்டவுடன் தன்னைப் போலவே இருப்பதைக் கண்டு வியந்தார். அவர் மனதிற்குள் வேகமாக எண்ணங்கள் ஓடுகின்றன. ஒரு முடிவிற்கும் வரமுடியாததால் குழந்தைகளைப் பார்த்து, "குழந்தைகளே! நீங்கள் எந்த குலம்?" என்கிறார்.

லவன் "அரசே! நாங்கள் சூரியகுலம்" என்றான். குசன் தலையை ஆட்டி ஆமோதித்தான்.

உடனே ஸ்ரீராமர், "குழந்தைகளே! நானும் சூரிய குலம்தான் ஒத்த குலத்தவர் சாதாரணமாகப் போர் செய்யக் கூடாது," என்று நிறுத்தினார். குசன், "பின் எதற்காக வந்துள்ளீர்கள்?" என்றான்.

ஸ்ரீராமர், "குழந்தைகளே! அசுவமேதயாகச் சட்டத்தின்படி இக்குதிரை வெற்றியுடன் திரும்பினால்தான் யாகம் முடியும். எனவே குதிரையைக் கொண்டு போகத்தான் வந்தேன். என் தம்பிமார்கள் தோல்வி அடைந்ததிலிருந்து உங்கள் வீரம் அறிகிறேன். இருந்தாலும் ஒரே குலமாக இருப்பதாலும் நீங்கள் குழந்தைகளாக இருப்பதாலும் போர் செய்ய மனம் ஒப்பவில்லை. குதிரையை அனுப்பிவிடுங்கள்", என்றார்.

லவனும் குசனும் ஒருவரையொருவர் பார்த்துக் கொள்கின்றனர். லவன், "அரசே! தைரியம் இருந்தால் போர் செய்து குதிரையை மீட்டுச் செல்லுங்கள். இல்லையேல் திரும்பிப் போய் விடுக" என்றான்.

ஸ்ரீராமர் இனி இவர்களிடம் பேசிப் பயனில்லை என்று முடிவு எடுத்து கல்லடி ஸ்தோஸ்திரம் கூறி அம்பின் பின்பகுதியால் தன் மார்பை தட்டிக் கொண்டார். கனிந்த மனம் கல்லாகியது! ஏனெனில் எதிரில் உள்ள குழந்தைகள் மனம் கல்லாக இருந்தது. போர் பலமாக நடந்தது. பல வகையிலும் போர் செய்து பார்த்த ஸ்ரீராமர், குழந்தைகள் சரிசமமாக போர்

செய்வதைக் கண்டு வியந்து கோபம் கொண்டு பஞ்சாட்சரி மந்திரம் ஜபித்து ஐந்து அம்புகளை ஏவினார். இதுவரை எந்தப் போரிலும் எய்யாதது இந்த பாணம். இதனைப் பார்த்த லவகுசர் இருவரும் இரண்டு குச்சி அம்புகளை வைத்து கொன்றைப் பூவினை அதன் மேல் வைத்து பஞ்சாட்சர பீஜத்தை ஜபித்து ஏவினார்கள். மேலே எழுந்த இரண்டு பாணங்களும் ஒன்றாகி அக்ஷயஜித பாணமாக மாறியது. பஞ்சபூத சக்திகளைக் கக்கிக் கொண்டு ஸ்ரீராமரின் ஐந்து பாணங்களும் லவகுசர்களை நெருங்கி வருகிறது. ஸ்ரீராமரோ இதனை ஏவிவிட்டோமே! குழந்தைகளை என்ன செய்துவிடுமோ என்று மனம் கலங்கிப் பார்க்க, குழந்தைகளோ தாங்கள் அனுப்பிய பாணம் என்ன செய்கின்றது என்று ஆர்வத்தோடு பார்க்கின்றனர். இரண்டு அம்புகளும் நெருங்குகின்றன. தாய் சீதாதேவியோ பன்னீர் புஷ்பங்களால் சிவலிங்கத்திற்குப் பூஜை செய்து கொண்டிருக்கிறாள். வேகமாக வந்த அக்ஷயஜிதபாணம் சிவகூராக மாறியது. பஞ்சாட்சரி ஜபிக்கப்பட்ட ஸ்ரீராமர் பாணம் சக்திகூராக மாறியது நெருங்கியவுடன் சிவகூரு சக்திகூரினை விழுங்கி ஸ்ரீராமரை நோக்கி வந்தது. ஸ்ரீராமர், "தன்னைவிட வல்லவன் வந்துவிட்டான்! இனி நான் அரசாளக்கூடாது," என்று நினைத்தார். உடனே அந்த அம்பினால் தாக்கப்பட்டு மயங்கிச் சாய்ந்தார்.

சிவபூஜையில் ஈடுபட்டிருந்த சீதாதேவி திடீரென்று நிலைகுலைந்து போனாள். மனம் படபடக்க பூஜையிலிருந்து விடுபட்டு குழந்தைகளுக்கு ஆபத்தோ என்று வெளியில் ஓடி வருகின்றாள். ஆனால் குழந்தைகளோ சிரித்துக் கொண்டு நிற்பதைக் கண்டாள். குழந்தைகள் தாயிடம் ஓடி வந்து, "அன்னையே! உங்கள் ஆசியால் எதிரி அரசனை வீழ்த்திவிட்டோம்!" என்றனர்.

நிமிர்ந்த சீதை ஸ்ரீராமரின் கொடி தேரில் பறப்பதைக் கண்டு பதறினாள்; ஓடிவந்த சீதை ஸ்ரீராமர் நினைவிழந்து சாய்ந்து விட்டதையும் அதுவும் தன்மக்களாலேயே வீழ்ந்து விட்டதையும் அறிந்து பதறினாள்.

ஸ்ரீராமர்தான், லவகுசர்களின் தந்தை என்பதைச் சொல்லாதது தன் தவறுதான் என்று தன்னையே நொந்து கொண்டு, "குழந்தைகளே! நெருப்பினை மூட்டுங்கள் இனி நான் வாழக்கூடாது," என்று நெருப்பினை மூட்டச் செய்கின்றாள். விஷயம் புரியாத லவகுசர்கள் நெருப்பினை மூட்டுகிறார்கள்.

அகஸ்தியர், "சீடர்களே! விசுவாமித்திரர் ஸ்ரீராமருக்கு குரு. அரசனாக இருந்து துறந்து ரிஷியானார். அனைத்துக் கலைகளையும் கற்றுத் தந்தார், ஸ்ரீராமருக்கு! வால்மீகியோ வில்வித்தையில் கைதேர்ந்தவர். மீன் குஞ்சுக்கு நீந்தக் கற்றுக் கொடுக்க வேண்டாம். குலவித்தை கல்லாமல் பாகுபடும் -- ஆகையால் வில் வித்தையில் சிறந்து விளங்கினார். மேலும் லவகுசர்களுக்குக் காட்டில் வித்தை கற்றுக் கொடுத்தாலும் அவர்களுடைய எதிர்கால வாழ்வில் வரும் துன்பங்களை எதிர்க்கவும் பூக்களை வில்வித்தையில் பயன்படுத்தும் புதிய வித்தையினையும் கற்றுக் கொடுத்திருந்தார். எனவே பல போர்களைக் கண்டிருந்த ஸ்ரீராமரும் சாய்ந்தார். தோன்றினார் வால்மீகி நொடிப்பொழுதில் நடந்ததை உணர்ந்துகொண்ட வால்மீகி மனதிற்குள் தன் சீடர்களின் திறமையை எண்ணி மகிழ்ந்தார். சிஷ்யர்களின் வெற்றியால் குருவிற்கு மகிழ்ச்சிதானே. தன்னுடைய தபோ பலத்தால் மிருத்யுஞ்ஜீவி மந்திரத்தை ஜபித்துத் தண்ணீரை அவர்கள் மேல் தெளிக்க, ஸ்ரீராமர், லட்சுமணர், பரதன், சத்ருக்னன் அனைவரும் எழுந்தனர்.

வால்மீகியை வணங்கிய ஸ்ரீராமரும் அவருடைய சகோதரர்களும் கண்களில் வியப்பைத் தேக்கி நின்றனர். லவகுசர்களை ஸ்ரீராமரின் மகன்கள் என்று வால்மீகி அறிமுகப்படுத்தியவுடன் ஆச்சரியப்பட்டனர், மற்றவர்கள். ஆனால் ஸ்ரீராமரோ, "வால்மீகி முனிவரை இவர்கள் என் குமாரர்கள் என்பதனை அறிந்தேன். ஆனால் அவர்களாலேயே நான் தோல்வியுறக் காரணம் என்ன? தயவு செய்து தெளிவுபடுத்த வேண்டும்," என்று வினவினார்.

வால்மீகி, ஸ்ரீராமா! நீ சத்திய கீர்த்தி ஆனாலும் இந்தயுகத்தில் பெண்களைக் கொல்லக்கூடாது என்பது சட்டம். இருப்பினும் நன்மையைக் கருதித் தாடகையை நீ கொன்றாய். அடுத்து, குரங்கினையுகதர்மப்படி மனிதன் கொல்லக்கூடாது. தவறு செய்தவனாய் இருந்தாலும் குரங்கினத்தை சேர்ந்த வாலியை நீ கொன்றாய். வீஜீரவசு என்ற பிரம்ம குலத்தில் பிறந்தவன் இராவணன். அவனை நீ கொன்றாய். இவைகளினால் சாபம் ஏற்றாய். பிரம்ம குலத்தில் பிறந்த இராவணனைக் கொன்று பிரம்மஹத்தி சாபம் வந்ததால் பிரம்மா, "உன் புத்திரர்களாலேயே நீ தோற்கடிக்கப்படுவாய்," என்று சாபம் கொடுத்தார். அதன் விளைவே அந்த சாபங்களின் பலன்களே இந்த நிகழ்ச்சி," என்றார். சிறிது நேரம் இவைகளையெல்லாம் நினைவுக்குக்

கொண்டு வந்த ஸ்ரீராமர் தனக்குள், "நன்மை கருதிச் செய்தாலும் தவறுக்குத் தண்டனை நிச்சயம் உண்டு! என்பதை புரிந்து கொண்டேன்'', என்று உணர்ந்தார். தண்டனை முடிந்துவிட்டதால், மனம் மகிழ்ந்து குதிரையை மீட்டு அசுவமேத யாகம் முடிக்கக் கிளம்பினார். ஏனென்றால் சாப விமோசனம் கிடைத்துவிட்டதே!

வால்மீகியை வணங்கிய சீதை, "குருவே! தங்கள் அருளால் இன்று பெரிய விபரீதம் நடைபெறாமல் நன்மையில் முடிந்தது தாங்கள் வருவதற்குச் சற்று காலதாமதமானால் என்ன நடந்திருக்கும்? நினைக்கவே அச்சமாயிருக்கிறது, என்றாள்.

வால்மீகி, "தாயே! இதில் அடியேன் செய்தது, பெரிய விஷயமல்ல! நீ செய்த பூஜையும், பூக்களை முறையாகப் பயன்படுத்தியதுமே உன்னையும் மற்றவரையும் காப்பாற்றிற்று," என்றார்.

சீதாப்பிராட்டி, "ஆச்சரியமாயிருக்கிறதே குருவே! அடியேன் செய்த பூஜை அனைவரையும் காப்பாற்றினதா? தெரிந்துகொள்ள விருப்பப்படுகிறேன் குருவே!" என்றாள்.

வால்மீகி :- "அம்மா சீதாதேவி, பூசநட்சத்திரத்தில் பன்னீர்ப் பூவினால் நீ சிவபெருமானுக்கு அர்ச்சனை செய்வதை விரதமாகக் கொண்டு தொடர்ந்து செய்தாய். அது கணவனுக்கு எந்தவித ஆபத்தானாலும் அதிலிருந்து அவனைக் காப்பாற்றும் மாங்கல்ய பலத்தைப் பெண்களுக்குத் தரும்" என்றார்.

சீதை : குருவே! அவர் கீழே விழுந்தவுடன் உங்கள் தீர்த்தத்தினாலும் மந்திரத்தினாலும் தானே உயிர் பெற்றார்".

வால்மீகி :- "இல்லையம்மா! நீ உன் மக்களுக்கு யாராக இருந்தாலும் வெற்றி உங்களுக்கே! என்று ஆசி தந்திருந்தாய். அதனாலும் ஸ்ரீராமர், சக்தியாகிய உன்னை விட்டுப் பிரிந்திருந்தமையாலும் லவகுசர்களின் வீரத்தாலும், அங்கு பூக்கள் அம்புகளில் பயன்படுத்தப்பட்டதாலும்தான் ஸ்ரீராமரை லவகுசர்கள் வென்றனர்".

சீதை :- "குருவே! அப்போது அவர் மீண்டும் எழுந்தது எவ்வாறு ?

வால்மீகி :- "அது, உன்னுடைய பூஜையினால்தான் அம்மா. ம்ருத்யுஞ்ஜய மந்திரத்தை ஜபித்தது அடியேனாயிருந்தாலும் அதனை அனைவருக்கும் பயன்படுத்த முடியாது. அதற்கான புண்ணியமும் பூஜையும் ஒருவரிடத்தில் இருந்தால் தான் அவரை

ம்ருத்யுஞ்ஜீவி மந்திரம் சொல்லி எழுப்ப முடியும். அதற்கு உன்னுடைய பன்னீர்ப் பூ பூஜை உதவியது. யாரொருவர் பூச நட்சத்திரத்தில் பன்னீர்ப் பூவினால் ஈசனுக்கு பூஜை செய்கிறார்களோ அவர்களுக்கு மாங்கல்ய பலம் அதிகமாகிறது".

பூச்சூடும் முறைகளும் அவற்றின் பலன்களும்

சீதை கண்களை மூடி ஈசனுக்கு நன்றி சொன்னார். அப்போது வால்மீகி முனிவர் தொடர்ந்து, "அம்மா! சீதாதேவி! பூக்களை வைக்கும் முறையிலும் பல நன்மைகளைப் பெறலாம்," என்கிறார்.

சீதை :- "அப்படியா! குருவே! அடியேனுக்குத் தெரிவிக்க வேண்டும்".

வால்மீகி :- காதின் மேல் பகுதி கீழ்பகுதியின் இடைபட்ட இடைவெளி பின்னந்தலையில் தான் வைக்க வேண்டும். பூவினை தொங்கும்படி வைக்கக்கூடாது. உச்சந்தலையிலும் வைக்கக்கூடாது. தளர்வாகப் பின்னிப் பூவினை கீழே கழுத்து அருகில் வைப்பதும் தவறு.

தாலிக்கயிறு கட்டும் இடத்திற்கு கீழே, அந்த அளவில் முதுகில் பூவினை வைத்துக் கொண்டால் கருச்சிதைவு ஏற்பட்டுக்கொண்டே இருக்கும். கன்னிப் பெண்கள் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். சிறு குழந்தையானாலும் பூவினை அவர்கள் தலையில் வைக்கும் போது கிருஷ்ணர் கொண்டை போலவோ அல்லது மீனாட்சி தேவி கொண்டை போலவோ போட்டு பூவினை அதில் முழுவதுமாக சுற்றி வைக்க வேண்டும். யாராக இருந்தாலும் பூவினை வைத்துக் கொண்டு நடக்கும் போது பூ ஆடி ஆடி, பின் தலையைத் தொடக்கூடாது. இவ்வாறு நடந்தால் பின்னர் மணவாழ்க்கையில் ஒற்றுமையில்லாமல் சண்டையிட்டுக் கொண்டே இருப்பர். பூவினை ஆடாமல் வைக்க வேண்டும்.

இரும்பால் ஆன (ஹேர்பின்) ஊசிகளைக் குத்தி நிற்க வைப்பார்கள். அதுவும் தவறு. இவ்வாறு செய்தால் மயக்கநோய், ரத்த கொதிப்பு நோய் முதலிய நோய்கள் வரும். பின்னர் என்ன செய்வது? மரத்தால் செய்து வண்ணம் பூசப்பட்டுள்ள ஊசிகளை உபயோகிக்க வேண்டும்.

பூவினை ஜடை முழுவதும் சுற்றி அலங்கரிப்பது வளைகாப்பு விழாவிற்கு மட்டும் தான் செய்ய வேண்டும். இவ்வாறு செய்வதனால் குறைப்பிரசவம் ஆகாது. மற்ற

நேரங்களில் செய்தல் தவறு.

பூவினை ஜடை நுனியில் வைப்பது தவறு. இதனால் பூ ஆடி ஆடிப் பின் பக்கத்தில் இடிக்கும். இதனால் வரும் சாபமோ - இவள் கணவனை இழப்பாள்.

ஒரு பக்கத்தில் சுமங்கலிப் பிரார்த்தனை, பூஜை, மறுபக்கத்தில் அவ்வாறு பூச்சூடுதல் இதனால் என்ன பலனை எதிர் பார்த்தாலும் நடப்பதில்லை.

ஜடையின் நுனியை அப்படியே விடக்கூடாது. நுனியை மடித்து, மேலே கட்டி விட வேண்டும். அதனையும் நூல் கயிற்றினால் தான் கட்ட வேண்டும். ரப்பர் வளையம் உபயோகிக்கக் கூடாது. ரப்பர் வளையம் உபயோகித்து, சிலர் ஜடையை அடர்த்தியாகக் காண்பிப்பர். இதனால் அவர்கள் வாழ்க்கையில் பல கண்டங்கள் வரும்.

முடிவளர

முடி வளருவதற்கு சாங்க்யா வித்தகி என்ற தேவதையின் அருள் வேண்டும். ஆனால் அந்த தேவதை மணமுள்ள மலரை மணமில்லாத மலரோடு தலையில் வைத்தால் சாபம் கொடுக்கும். அனால் தலைமுடி கொட்டிவிடும்.

புஷ்பத்தைத் தலையில் வைக்கும் போது இரண்டு பக்கங்களில் மட்டும் வைக்கக்கூடாது. சூரிய பிறை சந்திர பிறை எனப்படும் இவ்வகை அலங்காரம் திருமணத்தின் போது மட்டும் மணமகளுக்குச் செய்யலாம். மற்ற நாட்களில் கிடையாது. எப்பொழுதும் பெண்கள் காதினை மூடும்படி தலைமுடியை வாரக்கூடாது. இது ஆரோக்கியத்தைக் கெடுக்கும்.

புருவத்தினைச் சிரைத்தல் பெருந் தவறு!

புருவத்தினைச் சிரைபதால் பல சாபங்கள் வருகின்றன. அதுபோல் பின்னலை முன்பக்கம் போடக்கூடாது. எக்காரணத்தாலும் பின்னல் முன்பக்கம் வரவே கூடாது. பெரியோர்களைக் குனிந்து நமஸ்கரிக்கும் போது தலைப் பின்னல் முன்பு வந்து விழும். இது தவறு. இவ்வாறு வராமல் இருப்பதற்காகத்தான் பின்னலை உள்ளே விட்டு முந்தானையை இழுத்து இருப்பர். இதனால் நமஸ்கரிக்கும் போது பின்னல் பக்கவாட்டிலோ உச்சி நெற்றியிலோ வந்து விழாது. இறைவன் கருணையினால் முடி, பின் பக்கம் வளருகிறதே தவிர தலையின் முன்பக்கமல்ல.

முன்பக்கம் போட்ட பின்னலுடன் எதிரில் பெண்வந்தால் சகுனத்தடை. மனைவி பின்னலை முன்னே போட்டுக் கணவனை வெளியில் வழி அனுப்புதல் தவறு.

கொண்டைகள் போட்டு பூ வைப்பது பழக்கம். அவ்வாறு வைக்கும் போது கொண்டை முழுவதும் மூடியது போல் வைக்கக்கூடாது. இவ்வாறு வைத்தவர்களை நம்புவது தவறு. அவர்கள் உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுபவர்களே.

வால்மீகி தொடர்ந்து, 'பூவினை முந்தானையைத் தொங்கவிட்டு வைக்கக்கூடாது. கண்ட இடங்களிலும் நின்று தலையில் பூ வைக்கக்கூடாது. நடுத் தெருவிலும், செருப்புக் கடைகளைப் பார்த்துக் கொண்டும் பூவினைத் தலையில் வைக்கக்கூடாது. நடுத்தெருவில், தெரு முனைகளில் பூக்களை வாங்கி அங்கேயே பூச்சூடக்கூடாது. இதனால் சுமங்கலித்துவம் கிடைக்காது. வாழ்க்கையும் நடுத்தெருவிற்கு வந்துவிடும்.

பூ வைத்துக்கொள்ளும் முறை

கணவன் முன்னிலையில் அல்லது தெய்வப்படத்திற்கு முன்னால் அல்லது வயதான சுமங்கலியின் முன்னால் தான் தலையில் பூ வைக்க வேண்டும். இவ்வாறு செய்யாவிட்டால் மாதவிடாய் நோய் வந்து துன்பப்படுவாள்.

நெற்றிக்குப் பொட்டிட்டவர்களிடம் புஷ்பம் வாங்குவது உத்தமமானது. இல்லையேல் அவர்களுடைய துன்பத்தையும் சேர்த்து வாங்குகிறோம் என்பதாகும். பணம் கொடுத்துத் துன்பத்தை வாங்குபவரும் உண்டோ? ஆனால் தற்காலத்தில் இப்படித்தான் துன்பங்களைப் பலர் வாங்கிக் கொள்கிறார்கள்.

பூவினை துணிப்பையில் தான் போட்டு எடுத்துப் போக வேண்டும். அந்த பையினை அங்குமிங்கும் மோதவிடாமல் கையில் பத்திரமாக எடுத்துச்சென்று மனைவியிடம் கொடுக்க வேண்டும். இல்லையேல் இறைவனுக்கு அணிவிக்க வேண்டும். பையுடன் தூக்கி எறிதல் தவறு.

வாழ்க்கையின் ஆரம்பம்-முன்னேற்றம்-வெற்றி எது?

லவகுசர்கள் இதனையெல்லாம் கேட்டு மனதில் நிறுத்திக் கொண்டாலும் அவர்களால் மறைக்க முடியாத கேள்வி ஒன்று இருந்தது. அதனை அவர்கள் வால்மீகி முனிவர் பேசி முடித்தவுடன் கேட்டனர்.

"குருவே! எங்கள் தந்தைக்கு பிரம்மதேவனின் சாபம் நீங்க, நாங்கள் கருவிகளானோம். இருந்தாலும் தந்தையை எதிர்த்தோம்

என்ற அவச்சொல்லுக்கும் சாபத்திற்கும் ஆளாகிவிட்டோமே இதிலிருந்து மீளும் வழியினைத் தாங்கள்தான் கூற வேண்டும்," என்றனர்.

வால்மீகி:- வாழ்க்கையில் ஆரம்பம் எது? முன்னேற்றம் எது? வெற்றி எது? கூறுங்கள்.

லவன்:- வாழ்க்கையில் ஆரம்பம் - நற்காரியம் செய்வதற்காக இப்பிறவி எடுத்ததுதான்.

குசன்:- சத்சங்கத்தில் ஒற்றுமையுடன் வாழ்வதுதான் முன்னேற்றம்.

லவன்:- அனைவரும் சிவத்தொண்டு செய்யும் போது பூரண ஒத்துழைப்புக் கொடுத்து சிவ ஆசி பெறுவதே வெற்றி.

வால்மீகி:- மகிழ்ச்சி! வாழ்வில் பெரும்பாலோர் தான் செய்வது சரியே என்று எண்ணியேதான் தவறு செய்கிறார்கள். அதனைத் தடுத்து நிறுத்தத்தான் சத்சங்கம் தேவை. மலையளவு திரண்ட புண்ணித்தால் மனிதப் பிறவி எடுத்துவிட்டு சிறிய விஷயங்களும் அடிமைப்படுவதும், தெய்வத்தொண்டு செய்யாமலிருப்பதும் எவ்வளவு வீண்? எனவே வாழ்க்கையில் ஆரம்பம், முன்னேற்றம், வெற்றி, இம்மூன்றினையும் கடைபிடிப்பவரின் வாழ்க்கை திசை மாறுவதில்லை.

லவ! "முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்" விளக்கம் கூறு,

லவன்:- குருவே! இறைத்தொண்டு செய்தபின் எடுக்க வேண்டிய முயற்சிகளை எடுத்தால் இகழ்ச்சி என்பதனை அடையமாட்டார்கள். இதுவே அடியேனுக்குத் தெரிந்த விளக்கம்.

வால்மீகி:- நன்று, மகனே! நன்று! நீங்கள் கேட்ட கேள்விக்கும் இதுவே பதில். லவ! குச! நீங்கள் சிவத்தொண்டு செய்து முயற்சித்தால் இகழ்ச்சி அடையமாட்டீர்கள். தந்தையை எதிர்த்ததால் உங்களுக்கு ஏற்பட்டுள்ள சாபத்தினை நீக்கிவிடலாம். எனவே என்னுடன் புறப்படுங்கள் என்றார்.

லவன், குசன், சீதை, வால்மீகி நால்வரும் புறப்படுகின்றனர்.

வால்மீகி, "லவகுச! கோயிலில் இறைத்தொண்டு செய்வதைப்பற்றி இப்பொழுது தெரிந்து கொள்ளுங்கள்.

கோயில் தொண்டு என்பது மிகவும் சிறந்த தொண்டாகும். பல சாபங்களையும் தர்மங்களையும் அழிக்கும் பல மகான்களின்

ஆசியும் கிடைக்கும். ஒவ்வொரு மகானும் சித்தரும் ஒரு கோயிலுடன் தொடர்பு கொண்டவர்களாயிருப்பார்கள். அக்கோயிலில் முக்தி அடைந்தவர்களும் இருப்பார்கள். இவர்களெல்லாம் அருவமாக அந்தந்த கோயில்களில் சுற்றிவருவார்கள். அந்த கோயிலில் யார் தொண்டு செய்தாலும் அவர்களுக்கு ஆசி தருவார்கள். எனவேதான் பழைய கோயில்களைப் புதுப்பிக்க வேண்டும். அங்கு தொண்டு செய்ய வேண்டும். பலகாலமாக இருக்கும் கோயில்களில் ஒன்றிற்கு மேற்பட்ட மகான்கள், சித்தர்கள், தேவர்கள் வந்து சென்றிருப்பார்கள்! இப்பொழுதும் வந்து கொண்டிருப்பார்கள்! அவர்கள் அருவமாக சுற்றும் போது அவர்கள் மேல்பட்ட காற்று நம்மேல்பட்டால் கூட போதுமானது அதுவே நம் உன்னத ஆன்மீக நல்வாழ்வுக்கு அடிகோலும்", என்றார்.

லவன் "குருவே! கோயில் தொண்டு என்றால் எதைக் கூறுகிறீர்கள். விவரமாகச் சொல்லவேண்டும், கேட்பதற்கு மிகவும் சந்தோஷமாக உள்ளது," என்றான்.

வால்மீகி, "கோயிலில் குப்பை பொறுக்குவது ஒரு பெரிய தொண்டு. பணச் செலவு செய்ய வேண்டாம். கற்பூரம் ஏற்றிய காகிதம், வாழையிலை, நார் முதலிய குப்பைகளை எடுத்து கோயிலுக்கு வெளியே சற்று தொலைவில் போட்டால் அது பெரும் தொண்டு. நம் வீட்டினை சுத்தமாக வைத்துக் கொள்வது போல் கோயிலையும் நாம் சுத்தமாக, மிகச் சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும். இருளாக உள்ள சந்நிதிகளில், விளக்கேற்றி வைக்க வேண்டும். கோயிலைத் தண்ணீரால் முறையாகக் கழுவ வேண்டும். பூஜைகள் நடக்காத கோயில்களில் பூஜைகள் நடக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

பிரம்மோற்சவங்கள் நடக்க வழி செய்ய வேண்டும். சுற்றுபுறங்களை தூய்மையாக வைத்திருக்க வேண்டும். கோயில் குளங்களைத் தூய்மையாக வைத்திருக்க வேண்டும். இவ்வாறு பல தொண்டுகள் உள்ளன. இவை அனைத்தையும் செய்ய முடியவில்லையென்றாலும் ஏதாவது ஒன்று அல்லது இரண்டு தொண்டுகளையாவது செய்துவர வேண்டும். ஒருமுறை அல்ல தன் வாழ்நாள் முழுவதும்! ஒவ்வொரு கோயிலாக! இதனால் அடையும் மன நிம்மதி, நன்மைகள் ஏராளம்".

"கோயிலில் கோலம் போடுவது ஒரு சிறந்த தொண்டாகும். பச்சரிசி மாவினால்தான் கோலம் போட வேண்டும். சுண்ணாம்பு மாவினால் போடுவது தவறு. பச்சரிசி

மாவினால் கோலம் போடுவதால் எறும்பு முதலிய ஜீவராசிகள் அதனை உண்ணும். பணக்கஷ்டம் தீரும். வண்ணக் கலவைகளில் (Paint) கோலம் போடுவது வறுமையைத் தான் தரும்'' ஏனென்றால் பூச்சிகளும், எறும்புகளும் உணவு என்று எண்ணி வண்ணக்கலவையில் போட்ட கோலத்திற்கு வந்து ஏமாறும். அதனால் அவைகளுக்கு உணவு மறுத்த நிலைவருகிறது. (இக்காலங்களில் பல மாதர்கள் சங்கங்கள் மூலமும் தனியாகவும் வண்ணக்கலவை கோலம் போடுகிறார்கள். இது பெருந்தவறு.)

வேண்டாம் என்றாலும், வேலைகள் தேடி வர !!!

''மற்றுமொரு சிறந்த கோயில் தொண்டு :- நிர்மால்யப் பூக்களைப் பற்றியது. முதல்நாள் இறைவனுக்கு அணிவித்த பூக்களை மறுநாள் வெளியில் போடுவது தவறு. கோயில்களில் இதற்காகத் தண்ணீர் இல்லாத கிணறுகள் இருக்கும் அதில் இந்த நிர்மால்ய பூக்களைப் போட்டு வருவார்கள் அல்லது ஓடும் நீரிலோ அல்லது கடலிலோ போட வேண்டும். கால்படும் இடங்களில் போட்டு வைத்தால் அடுத்து வரும் பிறவிகளில் எத்தனை முயற்சித்தாலும் வேலை கிடைக்காமல் கஷ்டப் படுவார்கள். நிர்மால்ய புஷ்பத்தை மேற்கூறிய வழியில் முறையாக கிணற்றிலோ, ஓடும் நீரிலோ, கடலிலோ போட்டால் அவர்கள் **அடுத்துவரும் பிறவியில் வேண்டாம் - என்று பல வேலைகளை விட்டாலும் மீண்டும் மீண்டும் வேலைகள் தேடி வரும்''.**

எவரும் எங்கும் செய்யாத அற்புதத் தவம் புரிந்த ரிஷி சுமந்தான் சித்தர்

சீதாதேவி, ''குருவே! நீங்கள் கூறிய தொண்டுகளைக் கேட்டு சந்தோஷமடைந்தோம். எந்தெந்த தொண்டை எந்தெந்த கோயிலில் செய்ய வேண்டும் சுவாமி.'' என்று கேட்க,

வால்மீகி, ''தாயே! சூழ்நிலை சந்தர்ப்பங்களுக்கு ஏற்ப ஒவ்வொரு கோயிலிலும் தொண்டுகள் செய்ய வேண்டும். இருப்பினும் அனைத்துக் கோயில்களிலும் பொதுவான தொண்டு கோயிலைக் கழுவுதல்: கோலம் போடுதல், கோயிலைப் பெருக்கி குப்பைகள் இல்லாமல் சுத்தமாக வைத்திருத்தல்; விளக்கேற்றுதல் முதலியன,'' என்றார். இவ்வாறு ஒவ்வொரு ஸ்தலமாக தரிசித்து தொண்டுகள் செய்து இறைவனை வணங்கி ஊர் ஊராக வால்மீகி மூவரையும் அழைத்து வந்தார். அவர் தென் திசை நோக்கிப் பிரயாணம் செய்து காஞ்சிபுரம் தாண்டி

திருவேற்காடு அருகே வந்து கொண்டிருக்கும் போது, "லவகுச! சீதாதேவி! இந்த இடம் வருகையில் ஒன்று நினைவிற்கு வருகின்றது. கேளுங்கள். ஒருசமயம் ஒருவர் தவத்தில் இருந்தார் அவர் யார்? எதற்காகத் தவம் செய்கின்றார் என்பது பலருக்கு தெரியவில்லை! தேவர்களும் முயற்சித்துப் பார்த்தனர் முடியவில்லை. உடனே தங்களுடைய தலைவர் தேவேந்திரனிடம் வினவினர். தேவேந்திரன் அவர் முன் தோன்றி "நீர் வேண்டும் வரம் யாது?" என்று வினவினார். கண் திறந்து பார்த்த அவர் வணங்கி "இந்திர பகவானே! செயற்கரியதவம் செய்ய விரும்புகின்றேன். இதுவரை எவரும் செய்யாத தவம் செய்யவிரும்புகிறேன். என்ன செய்வது என்று தாங்கள் கூற வேண்டும்," என்றார். அப்பொழுது இந்திரன் "கருசோதனா! பலவிதமாக தவங்கள் செய்தவரை நான் அறிவேன். எவருமே செய்யாத தவம் என்று ஒன்றினைக் கூறுதல் என்னால் இயலாதது! ஏனென்றால் அது நான் அறியாத தவமாக இருக்குமே தவிர செய்யாத தவமாக இருக்குமா என்பதை நான் அறிய மாட்டேன். எனவே நீ செய்த தவத்தின் பயனால் எல்லா உலகங்களுக்கும் போகும் சக்தியினைத் தருகிறேன்! நீயே நேரில் சென்று தெரிந்து வா," என்று கூறி மறைந்தார்.

இந்த கருசோதனரும் பல உலகங்கள் சென்று விசாரிக்கிறார். ஒவ்வொரு உலகத்திலும் புதிதாகத் தவம் என்று ஒன்றைச் சொன்னால் ஏதாவது ஒரு உலகில் அதனைச் செய்தவர்கள் இருக்கின்றார்கள். அப்பொழுதுதான் கருசோதனருக்கு "இவ்வளவு கடுமையான விஷயமா நம்முடைய விருப்பம்" என்று தெரிகின்றது. இருந்தாலும் விடாமல் கேட்டுக் கொண்டே வருகிறார். அப்பொழுது தேவலோகத்தில் ஓரிடத்தில் ஸ்ரீநாரதரைக் காண்கிறார். அவர், "பூலோகம் சென்றால் வழி பிறக்கும். எத்தனை பெரிய தேவனானாலும் மகானானாலும் ஒவ்வொருவரும் பூமியில் சென்றுதான் புண்ணியம் சேர்க்க முடியும். மற்ற இடங்களில், உலகங்களில் எல்லாம் பூமியில் செய்த புண்ணிய பாவங்களுக்கு ஏற்ப பிறவி கிடைத்தேத் அதனை அனுபவித்தலேதான். இறைவன் நினைவும், இறைவன் தொண்டும், அவன் அடியவர் தொண்டும் பூவுலகில் செய்தால்தான் உண்டு; எனவேதான் பல மகான்கள், சித்தர்கள் பூமியில் பிறந்து பல மக்களை இறைத் தொண்டு செய்வித்து வருகிறார்கள்," என்றார்.

மிகவும் சந்தோஷப்பட்ட சுருசோதனர் பூமிக்கு வருகின்றார். தினமும் ஒவ்வொரு ஊரிலும் உள்ள கோயில்களில் தண்ணீர் ஊற்றி அலம்பிவிடுவார். பல நாட்கள் பிரகாரத்தின் தரையைக் கழுவிய அவர் பிறகு பக்க சுவர்களின் மேல் தண்ணீர் ஊற்றி அலம்பினார். இதனால் கற்பகிரகத்தில் இருக்கும் ஈசன் குளிர்ந்தார். ஒவ்வொரு கோயிலாகச் சுத்தம் செய்த வந்த அவர் நாம் இருக்கும் இடத்திற்கு வந்தார். பல நாட்களாகத் தனக்கு பதில் இல்லை என்று ஏக்கத்துடன் வரும்போது ஆகாயத்தில் அசரீரி ஒலி கேட்டது "சுருசோதனா! இங்கிருந்து கிழக்காக சிறிது தூரம் சென்றால் ஒரு கோயில் உள்ளது. அங்கு உனக்கு விடை கிடைக்கும்," என்றது.

இறைவனை வணங்கி நடந்தார், சுருசோதனர். சிறிது தூரம் வந்தபின் கோயில் இருப்பதைக் கண்டு அதனை நெருங்குகிறார். அங்கு இரண்டு கோயில்கள் இருப்பதைக் கண்டு வியந்தார் எதிரில் உள்ள வைகுண்டவாசப் பெருமானை வணங்கி, சிவன் கோயிலினுள் நுழைந்தார். மனம் மிகவும் சந்தோஷமாக இருந்தது. முதலில் உள்ள விநாயகரை வணங்கி உள்ளே செல்கிறார். அம்பாளை வணங்கி வலம் வந்துவிட்டு ஈசனின் பிரகாரத்தை வலம் வரும்போது ஓரிடத்தில் மிகவும் வெளிச்சமாக இருந்தது. சற்று நின்று, 'அது என்னவாக இருக்கும்?' என்று யோசித்துக் கொண்டே அந்த ஒளியினை நெருங்குகிறார். மேகங்களுக்குள் நாம் நடந்தால் எப்படியிருக்குமோ அதுபோல் ஒளிக்குள் நடக்கிறார். சிறிது தொலைவில் மிகவும் ஒய்யாரமாக விநாயகர் அமர்ந்திருக்கும் கோலம் கண்டு வணங்குகிறார். அவர் அந்த ஒளி வெள்ளத்தில் இரண்டு வெண்சாமரங்கள் அந்தரத்தில் தானாகவே விநாயகருக்கு வீசுவதைக்கண்டு வியந்தார். அப்போது தேவர்கள் பலர் மலர்களைப் பொழிந்தனர். "தேவ லோகத்திலும் காண முடியாத காட்சி இது", என்று வியந்தார் சுருசோதனர். கணேச லோகங்களைப் பார்த்திருந்த சுருசோதனர் இத்தகைய விநாயகரை அங்கேயும் பார்த்ததில்லை என்பதனை உணர்கிறார். அதனால்தான் சுருசோதனரைப் பின்பற்றிய தேவர்கள் இக்காட்சியினைக் கண்டு மலர்களைப் பொழிந்து வணங்கினர். தேவர்கள் தங்களுக்கும் தெரியாத ஒரு தவத்தினை சுருசோதனர் செய்யப் போகின்றார் அது என்ன என்பதனைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகவே அவரைப்பின் தொடர்ந்து அருவமாக வந்தனர். அதனால் விநாயகரின்

இக்காட்சி கிடைத்தது. அனைவரும் வணங்கினர். இந்த விநாயகருக்கு பெயர் என்னவாகயிருக்கும் என்று கருசோதனர் யோசிக்கையில் அசரீரி ஒலித்தது, **"ஆனந்த வெண் சாமரப்பிள்ளையாரிடம் நீ இருக்கிறாய்"** என்று. விநாயகரை வணங்கி அக்கோயிலைக் கழுவி அங்கு இரவு தங்கினார்! கனவில் தோன்றினார் ஆனந்த வெண்சாமரப் பிள்ளையார். **"கருசோதனா! உன்னை ஒரு ரிஷி சுமந்து வந்தால் உனக்கு வழி கிடைக்கும்,"** என்று கூறி ஆசீர்வதித்து மறைந்தார்.

ரிஷி தன்னை சுமப்பதா? எப்படி சாத்தியமாகும்? தன்னைச் சுமப்பவருக்கு, தான் என்ன செய்ய முடியும்? என்றெல்லாம் நினைத்து குழம்பிய மனதுடன் ஒவ்வொரு ரிஷியாக அணுகி விசாரிக்கிறார். இவரைச் சுமக்க வேண்டும் என்றவுடனேயே ரிஷிகள் நிராகிக்கின்றனர். "ஒருவர் செய்யும் தொண்டே போதவில்லை. இந்நிலையில் உம்மையும் சுமந்து எதைச் செய்ய முடியும்" என்று மறுக்கின்றனர். இவ்வாறு மனம் தளராமல் ஊர் ஊராக வரும் கருசோதனரைச் சிலர் கேலியாகப் பார்த்ததும் உண்டு. பாண்டிய நாட்டிற்கு வந்த கருசோதனர் மீனாட்சி அம்மன் அங்கு ஆட்சி செய்வதைக் கேள்விப்பட்டு, மீனாட்சியை தர்சிக்கின்றார். "தாயே! அடியேனுக்கு உதவ வேண்டும். ஒரு ரிஷி என்னைச் சுமக்க நீங்கள் உதவ வேண்டும்," என்கிறார்.

முனிவரே! அடியேனே இன்னமும் திருமணம் புரியாமல் குழப்பமாக உள்ளேன். இறைவன் படைப்பால் மூன்று ஸ்தனங்கள் உள்ள நான் என்னுடைய மணாளனைக் காணும் போதுதான் மூன்றாவது ஸ்தனம் மறையும் என்று சோதிடர்கள்கூறி உள்ளனர். சுவாமி! இதைத் தீர்க்கவழி கூறுங்கள்" என்று வேண்டினான்.

கருசோதனர் தான் செய்த தவங்கள் அனைத்தையும் மீனாட்சி தேவிக்கு தாரை வார்த்துத் தந்தார். இதனால் மேலும் புனித சக்தி பெற்ற மீனாட்சிதேவி ஒருநாள் போருக்குச் செல்ல கிளம்புகிறாள். சுந்தரேசப் பெருமானான ஈசன் எதிர்படைத் தலைவராக வர அவரைப் பார்த்தவுடன் மூன்றாவது ஸ்தனம் மறைந்தது. மீனாட்சி கல்யாணம் வெகு சிறப்பாக நடைபெற்றது. இதற்கு ஒரு காரணமாக அமைந்த கருசோதனரை மீனாட்சி தேவி நினைத்தாள். உடனே அங்கு தோன்றிய கருசோதனரை வணங்கி, "கருசோதனரே! உங்கள் தவவலிமையால் அடியேனின் திருமணம் நடைபெற்றது. அடியேனின் பிரச்னையைத் தீர்த்து வைத்த உங்கள் பிரச்னையை தீர்த்து

வைக்கிறேன். அடியேனின் அம்சமாகிய சக்தீஸ்வரானந்தா என்ற ரிஷி தங்களைச் சுமக்க வருவார்'' என்று ஆசி கூறினாள். ஈசனிடம் ஆசி பெற்று ஒவ்வொரு ஊராகச் செல்கிறார். மீனாட்சி தேவி கூறிய சக்தீஸ்வரானந்தா என்பவரைத் தேடுகிறார். வயதும் ஆகிவிட்டது. கண்கள் சரியாகத் தெரியாத நிலை இருந்தாலும் மனதிற்குள் வைராக்கியம் அப்படியே இருந்தது இம்மி அளவும் குறையவில்லை. தள்ளாடி நடக்க ஆரம்பிக்கிறார். நடை வேகம் குறைந்ததால் ஒரே நாளில் பல கோயில்களைக் கடந்தவர், இப்போதெல்லாம் ஒரு நாள் ஒரு கோயில் என்று கடக்க ஆரம்பித்தார்.

இப்போது லவகுச! நீங்கள் சக்தீஸ்வரானந்தாவைப் பற்றி தெரிந்து கொள்ள வேண்டும். சக்தீஸ்வரானந்தா ஈஸ்வரியின் அம்சம். அவருடைய தொண்டு என்னவென்றால் யாரெல்லாம் தவம் செய்து அதனால் இரத்தம் வற்றி போகிறார்களோ அவர்களுக்கெல்லாம் தன் தவபலத்தால் இரத்த தானம் செய்வார். இத்தகைய தவம் செய்து வந்தார் சக்தீஸ்வரானந்தா. அவருடைய கனவில் மீனாட்சி தேவி சென்று, “சுருசோதனா என்ற ரிஷியைத் தேடிச் சென்று, அவரைச் சுமந்து செல்வாயாக'' என்று கூறினாள்.

அன்றிலிருந்து ஒவ்வொரு இடமாக அவரைத் தேட சக்தீஸ்வரானந்தாவும், இவரைத்தேட சுருசோதனரும் சுற்றி வந்தனர். மிகவும் தள்ளாமை அடைந்து விட்ட சுருசோதனர் ஒரு கோயிலில் மயங்கி விழுந்துவிட, எழுந்திருக்கக் கூட சக்தியற்ற நிலையில் இருந்தார். கடவுள் கருணையால் அங்கு வந்த சக்தீஸ்வரானந்தா தான் எப்போதும் செய்யும் தொண்டாக முதலில் நினைத்த சுருசோதனருக்குத் தன்னுடைய தபோபலத்தால் இரத்தத்தினை கொடுத்து சக்தி தருகிறார். அப்போதிலிருந்தே இவரைச் சுமந்து செல்ல வேண்டும் என்ற எண்ணமும் வருகிறது அந்த எண்ணத்தின் தூண்டுதலால், “சுவாமி! அடியேன் தங்களைச் சுமக்கலாமா?'' என்கிறார். இதுவரை அந்த ஒரு சொல்லுக்காகவே அலைந்து வந்த சுருசோதனர் மிகவும் மகிழ்ந்து மீனாட்சி தேவியை நன்றியுடன் நினைக்கிறார். பிறகுதான், இருவரும் தங்களை அறிமுகப்படுத்திக் கொள்கின்றனர். இருவருமே ஒருவரை ஒருவர் தேடியதும் தேவியின் அருளால் ஒன்று சேர்ந்ததும் இறைவன் திருவிளையாடல்! அன்றிலிருந்து சக்தீஸ்வரானந்தா, சுருசோதனரைச் சுமந்து தவழ்ந்து வந்தார். முட்டிகள் தேய்ந்தன. சுருசோதனரை மக்கள் ரிஷி சுமந்தான் சித்தர் என்று

அழைக்கலானார்கள். பலருடைய துன்பங்களைத் துடைத்துப் பல தொண்டுகளில் பங்கு கொண்டு கோயம்பேடு நோக்கி வருகிறார்கள். நெருங்க நெருங்க மனதில் குதூகலம் பொங்கி வழிகிறது. இருவரும் கோயிலை அடைந்து விநாயகர், அம்பாளை தரிசித்து விட்டு ஈசன் சந்நிதியில் வருவதற்குள் உயிர் பிரியும் அளவு நலிந்துவிட்டார்கள்.

சூரியபகவானை தரிசித்து ஆனந்த வெண்சாமரப் பிள்ளையாரை நெருங்கியவுடன், அந்த அற்புதக்காட்சி தெரிகிறது. அந்தரத்தில் வெண்சாமரங்கள் இருபக்கமும் தானாக வீசப்பட விநாயகர் வெகுப்பிரகாசமாக காட்சி தருகிறார். இருவரும் வணங்குகையில், "கருசோதனா! உன்னுடைய அற்புதமான **"எவரும் செய்யாத தவம்"** தவம் என்ன தெரியுமா? ஒரு ரிஷி சுமந்து வர பலகோயில்களில் நீ செய்த தொண்டு! மக்களின் இன்னல்களை ஒரு ரிஷியின் மேல் அமர்ந்து நீ போக்கிய தொண்டு, இதுவரை யாரும் செய்யாத தொண்டரை! நீ செய்தாய். மேலும் ஒன்று கூறுகிறேன். இன்றிலிருந்து கோயில் பிரகாரங்களில் உள்ள மேல் விதானத்தை தண்ணீரினால் கழுவும் இறைத் தொண்டு செய்து வருவாய்," என்று கூறினார்.

அன்றிலிருந்து கருசோதனரும், சக்தீஸ்வரானந்தாவும் புதிய சக்தி பெற்றுத் தண்ணீரினால் கோயில் பிரகாரங்களில் உள்ள மேல் தளத்தினையும் சேர்த்துக் கழுவினர். கோயில் தரையைக் கழுவி முக்தி அடைந்தவர் பலர் பிறகு பக்கச் சுவர்களையும் தூண்களையும் கழுவி முக்தி அடைந்தவர்கள் பலர்! **விதானத்தைக் கழுவித் தொண்டு செய்து முக்தி அடைந்தவர்களில் முதன்மையானவர் ரிஷி சுமந்தான் சுவாமி என அழைக்கப்பட்ட கருசோதனர்.** அவருடன் சக்தீஸ்வரானந்தாவும் தொண்டு செய்து முக்தி அடைந்தார்".

கோயம்பேடு ---- தலச் சிறப்பு

இவ்வாறு வால்மீகி முனிவர் கூறிவரும் போது அவர்கள் கோயம்பேட்டை நெருங்கி இருந்தார்கள். லவனின் மனதில் வேகமாக எண்ண ஓட்டங்கள் ஓடலாயின.

இவ்வளவு சிறப்பு வாய்ந்த தலமாக உள்ளதே. கருசோதனரும் சக்தீஸ்வரானந்தாவும் இங்குதான் சமாதி ஆனார்கள் என்று குரு சொல்கிறாரே! இந்தக் கோயிலில் அவர்கள் நினைவாக ஏதாவது செய்ய முடியுமா? ஒரு சம்பவத்தைக் கேட்டால் பலருக்கும் பயன் தரும் வகையில்

அதனைப் பயன்படுத்த வேண்டும் என்று முனிவர் கூறியுள்ளாரே. இதனை எப்படி பயன்படுத்துவது? மக்களுக்கு எப்படி எடுத்து கூறலாம்?" என்று சிந்தித்தவண்ணம் நடந்து கொண்டு வந்தான், குகன். "இந்த கோயிலில் சிறப்பாகத் தொண்டு செய்ய வேண்டும். முக்தி அடைந்தவர்கள் இவர்கள் மட்டுமாக இருக்க முடியாது! இன்னமும் பல மகான்கள் முக்தி அடைந்த இடமாகவும் இருக்கும்!" என்று எண்ணிக் கொண்டே நடந்துவந்தான், இவர்கள் இருவருடைய எண்ணங்களும் சரியான பாதையில் போகின்றனவா என்று பார்த்துக்கொண்டு வந்த வால்மீகி, தன் சிஷ்யர்களை எண்ணி மனதில் சந்தோஷப்படுகிறார். கோயம்பேட்டினை நெருங்கிவிட்ட இவர்கள் அங்கு கூட்டம் கூட்டமாகப் பசுக்கள் நின்று கொண்டிருப்பதைக்கண்டு மிகவும் வியக்கின்றனர். சீதைப்பிராட்டி, "குருவே! இங்கு என்ன இவ்வளவு பசுக்கள் மாடு மேய்ப்பவன் இல்லாமல் தானாகவே இருக்கின்றன? ஆச்சரியமாக உள்ளதே!" என்று மெதுவாகக் கேட்டாள்.

லவனும் குசனும் பசுக்கூட்டத்தினை பார்த்துக் கொண்டே குரு என்ன சொல்கிறார் என்று கேட்கத் தயாராக இருந்தார்கள். வால்மீகி சிறிது நேரம் மௌனமாக பசுக்கூட்டத்தினையே பார்த்துக் கொண்டிருந்தார். பிறகு,

"ஒரு பசுவைக் கண்டாலே லட்சுமி கடாட்சம். அத்தனை தேவர்களையும் வணங்கிய பலன் ஒரு பசுவை வணங்கினால் வருகிறது. இத்தனை பசுக்கள் என்றால் எவ்வளவு அருமையான காட்சி!" என்று கூறியவர் தொடர்ந்து, "தாயே! கோக்களை, இரும்புக் கவசங்கள் போல் காத்து ரட்சிக்கும் இடம் இந்த இடம் அதனால் தான் இந்த இடத்திற்குப் பெயர் கோ+அயம்+பீடு=கோக்களை, அதாவது பசுக்கள் இரும்புக் கவசங்கள் போல் பாதுகாக்கும் பீடுநிறைந்த இடம்" என்று கூறி நிறுத்தினார்.

"இங்கு என்ன குருவே அப்படி விசேஷம்" என்றான் லவன்.

இதற்குள் கோயிலை நெருங்கி விட்டார்கள். சுற்றிலும் முட்புதர்களும் குப்பையுமாக இருந்தது. கோயிலுக்குள் செல்லும் ஒரு ஒத்தையடிப் பாதை மட்டும் கண்ணிற்கு தெரிந்தது. அப்போது மாலைநேரம்! குரு என்ன சொல்லப்போகிறார் என்று லவன், குசன், சீதாதேவி காத்திருக்கின்றனர்.

"இந்தக் கோயிலே, நாம் சில மாதங்கள் தங்கி தொண்டு செய்ய சிறந்த இடம்" என்று தேர்ந்தெடுத்த வால்மீகி, மற்றவர்களை அழைத்துக் கொண்டு கோயிலுக்குள் சென்று அம்பாளை, ஈசனை வணங்கி வலம் வருகின்றனர். ஆனந்த வெண்சாமரப் பிள்ளையாரைக் காண்பிக்கிறார்! அனைவரும் வணங்கி ஆசி பெறுகின்றனர். பின்னர் வெளியில் வந்து மண்மேடு ஒன்றில் குருவிற்கு ஆசனம் இட்டுத் தாங்களும் அமர்கின்றனர்! அதற்குள் ஊர் மக்களிடம் செய்தி பரவியது.

ஒரு முனிவர் இரண்டு குழந்தைகளுடன் ஒரு இளம் பெண்ணுடனும் வந்திருக்கிறார் வடநாட்டிலிருந்து வந்திருக்கிறார். அந்த குமாரர்கள் அயோத்தி மன்னனின் புதல்வர்கள் அந்தப் பெண் அந்தக் குழந்தைகளின் தாய். அயோத்தி ராணி என்றெல்லாம் கேள்விப்பட்ட மக்கள் கூட்டம் கூட்டமாக வர ஆரம்பித்தனர். சுற்றுப்புற மக்களெல்லாம் வந்து வணங்கினர். இரவு நேரமாதலால் தீப்பந்தங்களை ஏற்றி ஒளி எல்லா இடத்திலும் பரவும்படிச் செய்து வழிபட்டனர். அவ்வூர் பெரிய மனிதர்கள் வந்து, "முனிவரே! உடன் வந்த அரச குலத்தவர்களே! இவ்வூருக்கு உங்களை வரவேற்கிறோம். எங்களால் ஆன உதவியும் செய்கிறோம் உங்களுக்குத் தங்க இடம் அளிப்பது எங்கள் கடமை," என்று ஒரு ஆசிரமம் இரவிலேயே அமைத்துத் தந்தனர். மறுநாள் காலையில் கோயிலுக்குள் சென்று இறைவனைத் தரிசித்துப் பின்னர் வெளியில் அமர்ந்து எவ்வாறு திருப்பணி செய்யலாம் என்று ஆராய்ந்தார் முனிவர். லவகுச இருவரும் குருவின் சொல்லை எதிர்பார்த்தவண்ணம் இருந்தார்கள். அந்த ஊரைச் சேர்ந்த ஒருவன் முனிவரிடம், "சுவாமி, இந்த கோயிலுக்கு இரவு நேரங்களில் மக்கள் ஒருவரும் வருவதில்லை சுவாமி விஷ ஜந்துக்கள் நடமாட்டம் இரவின் முதல் பாகத்திலேயே அதிகமாகி விடுவதால் பகலில்தான் கோயிலுக்கு வருவோம்," என்றான்.

வால்மீகி முனிவர் சிறிது யோசித்துவிட்டு "லவகுச! நீங்கள் இருவரும் முதலில் இந்த இடத்தினை சுத்தம் செய்யுங்கள்," என்றார் லவனும் குசனும் அந்த இடத்திலுள்ள குப்பைகளையெல்லாம் அப்புறப்படுத்தி அந்த இடத்தினை பெருக்கிச் சுத்தம் செய்தனர். மேலும் மண்வெட்டி முதலியவைகளால் முட்புதர்களை அழித்து தாராளமாக நடப்பதற்கு வழி செய்தனர். இவர்கள் செய்வதைக்கண்டு ஊர் மக்கள் "அரச குமாரர்களே! கோயிலில் வேலை செய்யும் போது நாம் சும்மா

இருக்கலாமா?" என்று கூறிக் கொண்டு அவர்களும் சேர்ந்து திருப்பணியில் ஈடுபட்டனர். கோயிலின் சுற்றுப்புறம் துப்புரவானவுடன் கோயிலினுள் தரைகளையும் பக்க சுவர்களையும் மேல் விதானத்தையும் தண்ணீரினால் கழுவி சுத்தம் செய்தனர். தூபம் இட்டுக் கோயிலில் இருந்த வௌவால் முதலியவைகளைத் துரத்தினர். இவ்வாறு ஒரு மாதம் தொண்டுச் செய்தனர். லவகுசர்கள் ஒரு நாள் மாலை வேளையில் ஊர் மக்கள் எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து வால்மீகி முனிவரிடம் அறிவுரைகள் கேட்டுக் கொண்டிருந்தனர். அப்போது லவகுச இருவரும் வால்மீகி முனிவர் பக்கத்தில் இருந்து கொண்டிருந்தனர். "குருவே!" என்றழைத்த லவன் "நீண்ட நாட்களாக ஒரு சந்தேகம் குருவே! இந்தக் கோயிலில் ஐக்யமான சுருசோதனரையும் சக்தீஸ்வரானந்தாவையும் மக்கள் நினைவு வைத்திருக்க என்ன வழி உள்ளது! அதற்கு நாம் ஏதாவது செய்ய முடியுமா?" என்று கேட்டார். வால்மீகி முனிவர்" "கவலைப்படாதே, லவகுச! பின்னால் அரசாளப் போகும் சில அரசர்கள் காலத்தினால் அழியாத வகையில் உருவங்களாகச் செதுக்கி வைப்பார்கள் உண்மையான தொண்டர்கள், மகான்கள் அந்தப் பக்கம் வந்தால் இவர்களுடைய கதைகளை கிரகித்துத் தன்னுடன் வந்தவர்களுக்கு கூறுவார்கள். இவ்வாறு பிரபல்யமாகும்," என்றார். தங்களது சந்தேகம் நீங்கப் பெற்றனர் லவகுசர்கள்.

இன்றும் சென்னைக்கு அடுத்துள்ள கோயம்பேடு என்னும் ஊரில் உள்ள குசலவ புரீஸ்வரர் கோயிலில் பிள்ளையார் கோயில் இடது பக்கத் தூணில் ரிஷி சுமந்தான் சுவாமி அவர்களின் சிலை உள்ளது. சக்தீஸ்வரானந்தா சுருசோதனரை சுமந்து வருவது போல் உள்ளது.

இந்த சிலை இரகசியம் திருக்கயிலாயப்பொதிய முனிப் பரம்பரை 1001வது குரு மகா சந்நிதானம் சக்தி ஸ்ரீ அங்காள பரமேஸ்வரி அடிமை ஸ்ரீ-ல-ஸ்ரீ வெங்கடராமன் சுவாமிகளால் தற்போது அறிவிக்கப்படுகிறது ஒவ்வொரு காலத்திலும் ஈசன் அருளால் ஒவ்வொருவரால் தெரிவிக்கப்படும்.

வால்மீகி முனிவர், "குசலவ! இந்த கோயிலில் நீங்கள் செய்ய வேண்டிய தொண்டு உள்ளது! கோயிலைச் சுற்றி நந்தவனங்கள் அமைத்து அதில் உள்ள பூக்களால் இறைவனுக்கு அலங்காரம் செய்விக்க வேண்டும். பூக்களின் மகிமை தெரிந்துள்ள நீங்கள் இக்காரியத்தினைச் செய்ய வேண்டும்," என்றார்.

ஆறு மாதங்களுக்குள் நந்தவனம் அமைக்கப்பட்டுப் பூக்களும் பூத்திருந்தன. அவற்றை முழுவதுமாக கோயிலுக்கே பயன்படுத்தினர். கோயிலின் முகப்பிலேயே வாசனையான காற்று அனைவரையும் வரவேற்கும்! மிகவும் ரம்மியமாகவும் மனமுள்ளதாகவும் அமைந்தது, அந்த சூழ்நிலை!

இவ்வாறு அவர்கள் வந்து சரியாக ஒரு வருடம் ஆகியிருந்தபோது வால்மீகி முனிவர் "லவகுச! இந்தக் கோயிலில் பிரதோஷம் பூஜை செய்வது மிகவும் சிறந்தது. வேறு எந்தக் கோயிலில் செய்வதைவிட இந்தக் கோயிலில் பிரதோஷம் மிகவும் முக்கியமானது. ஆயிரம் மடங்கு பலன் கிடைக்கும். எனவே இந்த கோயிலில் சரியான நேரத்தில் (பிரதோஷ காலத்தில்) பிரதோஷம் நடத்த வேண்டும்," என்றார், "சுவாமி அதற்கு நாங்கள் என்ன செய்ய வேண்டும்?" என்றனர், ஊர் மக்கள். லவகுச இருவரும் கிராம மக்களுடன் சேர்ந்து கோயிலைச் சுற்றிப் பிரகாரத்தை, சுவாமி வலம் வரும் வகையில் பெரிதுபடுத்தி புல்செடி முதலியவைகளை நீக்கி வழி செய்தனர். வாகனம் (நந்தி) செய்தனர். குடை, வாத்தியங்கள் முதலியனவற்றையும் தயார் செய்தனர். இவ்வாறு அனைத்தையும் தயார் செய்துவிட்டு வால்மீகி முனிவரிடம் சென்று தெரிவித்தனர்.

அந்த ஊர்ப் பெரிய மனிதர் "குருசாமி! ஏன் இந்த கோயிலில் பிரதோஷம் மிகவும் முக்கியம் என்கிறீர்கள்? ஆயிரம் மடங்கு பலன் தருவதற்குக் காரணம் என்ன, என்று தெரிவிக்க வேண்டும் சுவாமி!" என்றார்.

அசுரர்கள் யார்?

வால்மீகி முனிவர் "கூறுகிறேன். கேளுங்கள்! இந்த கதையினைக் கூறுவதே மிகவும் விசேஷம். தேவர்கள் அசுரர்கள் என்று இருசாரார் இருப்பதை நீங்கள் கேட்டிருப்பீர்கள். அசுரர்கள் என்பவர் யார் கூறுங்கள் எப்படி பிறக்கிறார்கள்?" என்று கேட்டார்.

யாருமே பதில் அளிக்கவில்லை.

வால்மீகி அனைவரையும் பார்த்து, "அசுரர்கள் என்று தனியாக யாருமே கிடையாது. தேவர்களாகயிருப்பவர்கள், தங்கள் சுயநலத்திற்காக ஏதாவது செய்யும்போதோ அல்லது தவறுகள் செய்யும்போதே, முனிவர்கள், மற்ற தேவர்களால் சாபம் கொடுக்கப்பட்டு அசுரர்களாகிறார்கள். சாபம் முடிந்தவுடன் மீண்டும் தேவர்களாகிறார்கள்.

இந்த அசுரர்கள் ஒரு பக்கமும் தேவர்கள் ஒரு பக்கமும் நின்று பாற்கடலைக் கடையும்போது அதிலிருந்து ஆலகால விஷம் வெளிவந்து தேவர்களையும் அசுரர்களையும் துரத்தியது. எல்லோரும் ஈசனை நாடி வேண்ட அவர் சுந்தரரையும் நந்தியையும் அனுப்பி நீங்கள் சென்று அந்த விஷத்தினை எடுத்து வாருங்கள் என்று சொன்னார். சுந்தரரும் நந்தியும் சென்று எடுத்துவர அதனை விழுங்கினார் ஈசன். உமையவள் ஈசன கண்டத்தினுள் விஷம் நிற்குமாறு செய்ய திருநீல கண்டரானார்.

இந்த சமயத்தில் நந்தியின் மனதில் ஒரு எண்ணம்! அது என்ன?

"இந்த விஷத்தின் தன்மை தான் என்ன? வந்தவுடனே அசுரர்களையும் துரத்தியது. திருமால் விஷத்தினால் நீலநிறமாக மாறிவிட்டார் அதனை விழுங்குகிற ஈசனின் கண்டமோ நீலமாகி விட்டது ஆனால் அதனை கையிலெடுத்துத் தந்த எனக்கு ஒன்றுமே ஆகவில்லையே. ஈசனின் கண்டத்தையே நீலமாக்கிய விஷம், பெருமாளை நீல நிறமாக மாற்றிய விஷம், நம்மை ஒன்றும் செய்யவில்லை! எனவே நான் உயர்ந்தவன் போலிருக்கிறதே! என்று வேசாக சிரித்தார்.

இதனைக்கண்ட ஈசன் நந்தியை ஒருமுறை மெதுவாக புன்னகைத்துப் பார்த்துவிட்டுத் திரும்பினார். அவ்வளவுதான் அந்த நிமிடத்திலிருந்து சிரிக்க ஆரம்பித்தார் நந்தி. சிரித்துக் கொண்டே இருந்தார். சித்தம் கலங்கிவிட்டது! கண்களில் நீர் வழிந்து கொண்டே இருந்தது. பலமணி நேரங்கள் ஆகியும் சரியாகாததால் பார்வதி தேவி ஈசனை வணங்கி, "சுவாமி! நம்மைப் பலகாலம் சுமந்தவன் அறக்கடவுள்! தெரியாமல் செய்த பிழை பொறுக்க வேண்டும் அருள வேண்டும் நாதா கருணை காட்டுங்கள்!" என்று வேண்ட, "உன்னால் முடிந்ததைச் செய்து அவனை திருத்து," என்றார் ஈசன்.

விநாயகரை வேண்டி, பார்வதிதேவி விநாயகருக்கு விருப்பமான அருகம்புல் மாலையை நந்திக்கு அணிவித்தாள் சிறிது குறைந்தது சித்தக்கலக்கம்! விநாயகர் "தாயே! காப்பரிசி கொடுங்கள்," என்றார்! அதனையும் நந்திக்குப் பார்வதிதேவி. கொடுக்க சற்று குறைந்தன, ஆட்டங்கள்!! ஆனால் சிரித்துக் கொண்டே இருந்தான் நந்தி. அப்போது பார்வதி தேவி பூலோகம் சென்றால்தான் சாபம் நீங்கும் என்று தெரிந்து கோயம்பேடு வருகிறாள். தர்மசம்வர்த்தினியாக நின்று நந்தியை கோயிலைச் சுற்றி வரச்செய்கிறாள். ஆயிரமாயிருந்தரமாய் தினம் தினம்

சுற்றி வந்தார், நந்தி! தன் தவத்தினைத் தொடர, கொஞ்சம் கொஞ்சமாக சித்தம் தெளிவு பெற்ற நந்தி பூரணமாகத் தெளிவு பெற்றார். எல்லை இல்லா மகிழ்ச்சி அடைந்த நந்தி, அன்றிலிருந்து அந்தக் கோயிலில் பிரதோஷ விழா செய்தார். தன் கொம்புகளுக்கு இடையில் இறைவனைத் தூக்கிக் கொண்டு ஆடினார். தன்னுடைய சகாக்கள் ஏழு பேரைக் கூப்பிட்டு அவர்களுடன் தானும் சேர்ந்து பிரதோஷ சிவனை அம்பாளுடன் தாங்கிக் கொண்டு பலநாட்கள் நடந்து மிகச்சிறப்பாக பிரதோஷம் செய்து வந்தார். பல வருடங்கள் கழித்து இறைவனின் அருள் பெற்று சிவலோகம் அடைந்தார் அன்று முதல் இக்கோயிலில் பிரதோஷம் செய்தால் பல சாபங்களிலி ருந்து விடுதலை கிடைக்கும் இடமாகியது. உங்கள் தந்தையை நீங்கள் எதிர்த்த சாபம் நீங்க, நீங்கள் 12 வருடங்கள் இங்கு பிரதோஷம் செய்ய வேண்டும். அவ்வாறு செய்தால் பல சாபங்கள் நீங்கப் பெற்று நற்கதி அடைவீர்கள். ஒவ்வொரு பிரதோஷத்திலும் அறக்கடவுள் நந்தியும் வருகிறார்! அவர் ஆசியும் கிட்டும்", என்றார், வால்மீகி.

(பிரதோஷத்தினால் ஏற்படும் பலன்களும் பிரதோஷ பூஜையில் பங்கு கொண்டவருக்கு ஏற்படும் நன்மைகள் முதலி யவற்றைத் தெரிந்து செய்ய வேண்டுமானால், பிரதோஷ மகிமை என்ற புத்தகத்தைத்தின் தெரிந்து கொள்ளலாம்.)

லவகுசர்கள் அன்றிலிருந்து பிரதோஷ பூஜையினை இங்கு சிறப்பாகச் செய்து சாபம் நீங்கப் பெற்றனர். இக்கோயிலில் புஷ்ப அலங்காரம் சுவாமிக்குச் செய்வது மிகவும் அற்புதமான பலனையெல்லாம் தரும்.

கோயம்பேட்டில் சுயம்வரா விருட்சம்

இந்த கோயிலுக்குப் பக்கத்தில் ஸ்ரீ வைகுண்ட வாசப் பெருமாள் கோயில் உள்ளது. அங்கு இரண்டு வில்வ மரங்களும் நடுவில் வேப்ப மரமும் உள்ளது. இவ்விருட்சத்தின் பெயர் பார்வதி சுயம்வரா விருட்சம். இது சிவன் பார்வதி திருமணத்திற்கு சிவாம்சமாக பெருமாள் சாட்சியாக நிற்பதாக ஐதீகம்! இந்த விருட்சத்தினை வணங்கு பவர்களுக்கு திருமணத் தடங்கல்கள் நீங்கி விரைவில் திருமணம் நடைபெறும். மன வேற்றுமைகள் நீங்கி ஒற்றுமையாகத் திருமணமானவர்கள் வாழ்வர். இத்தகைய அருமையான கோயில் சென்னை வாசிகளுக்கு மிகவும் அருகில் அமைந்திருப்பதால் அனைவரும் நன்கு பயன்படுத்திக் கொள்வதே, அறிவுடைய செயல்!

லவகுசர்கள் சுவாமிக்கும் அம்பாளுக்கும் பிரதோஷ காலத்தில் அபிஷேகங்கள் செய்து கோயில் முழுவதும் தூபம் இட்டு தீப்பந்தத்துடனும் குடையுடனும் எட்டுபேர் சுவாமியை தூக்கிவர வாத்யங்கள் முன்னர் வாசிக்க, சோமசுக்த பிரதோஷம் செய்வித்தனர்.

சோமசுக்த பிரதோஷம்தனை, வடக்கு பார்த்த மூலவர் சந்நிதி கொண்ட கோயம்பேடு குறுங்காலீஸ்வரர் கோயிலில் செய்வது மிகவும் விசேஷமானது (சோமசுக்த பிரதோஷம் என்றால் என்ன? அவ்வாறு செய்வதால் பலன் என்ன? பங்கு கொள்வதால் அடையும் பலன்கள் என்ன? முதலியவற்றை பிரதோஷ மகிமை புத்தகத்தில் பார்க்கவும்).

பன்னிரண்டு ஆண்டுகள் பல நடைகளில் பிரதோஷம் செய்து வந்தனர் லவகுசர்கள். பன்னிரண்டு ஆண்டுகள் முடிந்ததும் வால்மீகி லவகுசர்களை அழைத்து "உங்கள் சாபம் நீங்கியது. இறைவன் அருளால் நீங்கள் நாட்டிற்குத் திரும்பி அரசாளலாம்," என்று கூறினார்.

குருவையும் தங்கள் நாட்டிற்கு தங்களுடனேயே வர லவகுசர்கள் அழைத்தனர். அதற்கு குரு "லவகுச! உங்கள் அன்பைப் புரிந்து கொள்கிறேன். இருப்பினும் அடியேன் இன்னமும் செய்ய வேண்டும் காரியங்கள் பல உள்ளதால் அதனை நோக்கிச் செல்ல வேண்டும்" என்றார்.

அப்போது ஊர் மக்கள், "அரசர் வருகிறார்! அரசர் வருகிறார்" என்ற பறை கூற நால்வரும் வெளியில் வந்து பார்க்கையில் ஸ்ரீராமர் தேரிலிருந்து இறங்கி வந்தார். சீதாதேவியும் லவகுசாவும் ஸ்ரீராமரை வணங்குவதற்கு முன் ஸ்ரீராமர் வால்மீகியை முதலில் வணங்குகிறார். அனைவருக்கும் தரிசனம் தந்துவிட்டு ஸ்ரீராமர் வால்மீகி முனிவரிடம், "முனிவர் பெருமானே! அரசாட்சியை அடியேனின் மக்களிடம் ஒப்புவித்துப் பின் தவம் செய்ய விரும்புகிறேன்," என்றார். வால்மீகி முனிவர் ஆசி கூற ஸ்ரீராமர் லவகுசர்களையும் சீதையையும் அழைத்துக் கொண்டு அயோத்தி சென்றார்.

பூக்களின் மகிமையைப் புரிந்து கொண்டீர்களா!

பூக்களினால் எதனைத் தான் சாதிக்க முடியாது!!

இறைவன் அருளால் அனைத்தையும் பூக்கள் சாதிக்கும்!!!